


# தமிழரசு

1-10-1974 50 காசு



# பூம்புகார் கலைக்கூடம் காண வாரீர்

* கல்லெல்லாம் கதை சொல்லும் சிலப்பதிகாரக் காட்சிகள்!
* புதையுண்ட பூம்புகார் புது வடிவம் பூண்டுள்ளது!
* சிந்தைக்கும் கண்ணுக்கும் தெவிட்டாத தமிழ்விருந்து!
* மனதைக் கவரும் மாதவியின் அழகுச்சிலை.

**இவற்றைக் காண பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்திற்கு வருகை தாரீர்!**



பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.

அரசர்கள் புலவர்களை மதிப்பதென்பது இன்று நேற்றல்ல ; அக்காலந்தொட்டே இருந்து வருகின்ற ஒரு மரபு.

புலவர்கள் பின்னால் அரசர்கள் ஏழடி தூரம் நடந்து சென்று வழியனுப்பி வைப்பது தமிழ்நாட்டுச் சிறப்பு. புலவர்கள்உட்கார்ந்துகொண்டு பேசியதையும், அமைச்சர்கள் நின்றுகொண்டு பேசியதையும் இங்கேகூடக்கண்டீர்கள். இந்த அரசு புலவர்களுக்கு அளிக்கின்ற மரியாதை இது.

நினைத்துச் செய்யாவிட்டாலும், இயற்கையாகவே நடந்துவிட்ட ஒன்று; நமது அரசுடத்திலே சேர்ப்பித்தான்; மணத்தின் அடிப்படையிலேதான் அந்தக் கவிதையும் எழுதப்பட்டதாகும்.

பெண்ணின் கூந்தலுக்கு மணம் உண்டா இல்லையா ? என்ற கேள்வியின் அடிப்படையில் சர்ச்சையெழுந்து, புலவர்கள் விடை காண முடியாமல் தவித்தபோது, இறையனார் எனும் புலவர், எப்படியோ அதற்கொரு முற்றுப்புள்ளியை வைத்தாக வேண்டும் என்று- 'பெண்ணின் கூந்தலுக்கு மணம் உண்டு' என்று எழுதி முடித்த ஒரு கவிதையைத் தருமி வாயிலாக அனுப்பி வைத்தார்.

இதுபற்றி இங்கே பேசிய மு. வ. அவர்கள் பஞ்சணையிலேயே இருந்து கொஞ்சிக் கொண்டிருப்பவனுக்கு இதைப் பற்றி ஆராயப் புலவர்கள் தேவைப்பட்டார்கள் என்று அழகுற எடுத்துச் சொன்னார்கள்.

எப்படியோ ஒரு நல்ல பாட்டு தமிழுக்குக் கிடைத்தது.

அந்த அளவிலே பாண்டியனுடைய சந்தேகம் வரையறுக்கப்பட்டது. விளைவு பொல்லா தவைகளாக இருந்தாலும் பரவாயில்லை.

# எங்கும் எப்பொழுதும் தமிழாட்சி!



## முதல்வர் கலைஞர்

தமிழை - தமிழ்ப் புலவர்களை எந்த அளவிற்கு மதிக்கிறது என்பதன் அடையாளமாக அமைந்துவிட்டது என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக் காட்டினேன்.

இந்தப் பொற்கிழி விழா பற்றி இங்கே பேசிய அனைவரும் எடுத்துச் சொன்னார்கள்.

பொற்கிழி விவகாரமே மணத்தின் அடிப்படையிலே எழுந்தது.

தருமி, தனக்கு மணம் நடைபெற வேண்டுமென்பதற்காக ஒரு கவிதை தேவைப்பட்டு- அதைத் தேடி அலைந்து பெற்று அதனைப் பாண்டிய மன்னனி

அதற்குப் பிறகு எழுந்த போராட்டங்கள் இன்றைக்கும் விவாதத்திற்கு உரியன.

ஆனால் பொற்கிழி பற்றி அறிவிக்கப்பட்டதும் அதைப் பெற வேண்டும் என்று தருமி துடித்ததும் இரண்டும் மணத்தின் அடிப்படையில்தான். ஆனால் அந்த மணங்கள் இரு வகைப்பட்டவை. ஒன்று தருமிக்குத் தேவைப்பட்டது பணம். அதற்காக அந்தப் பொற்கிழியைப் பெற வேண்டும் என்று துடித்தான்.

அரசன் ஆரணங்கின் கூந்தலுக்கு இயற்கையான மணம் உண்டா? இல்லையா? என்பதை அறியத் துடித்தான்.

அந்த வகையில்தான், தமிழுக்கு ஒரு நல்ல பாட்டு— ''கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி'' என்று ஆரம்பமாகின்ற வரிகளோடு தமிழுக்குக் கிடைத்திருக்கின்றது. அந்த முதல் அடியிலேயே எவ்வளவு நயமிருக்கிறது; எவ்வளவு பொருள்கள் பொதிந்து இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்தா தமிழனின் அருமையும் தமிழ்க் கவிஞர்களின் கற்பனைத் திறமையும் தெளிவாக விளங்கும்.

'கொங்குதேர் வாழ்க்கை' என்பதைப் படிக்கும் பலரும் அதன் பொருளைச் சரியாகப் புரிந்து கொண்டிருப்பார்களோ என்கின்ற ஐயம் எனக்கு உண்டு.

'அஞ்சிறைத்தும்பி' என்பதற்கு, அழகான சிறகுகளைப் படைத்த தும்பி அல்லது வண்டு என்று பொருள் கொள்கிற நேரத்தில்-அதற்கு அடைமொழியாக அமைந்திருக்கிற 'கொங்கு தேர் வாழ்க்கை' என்பது எதைக் குறிப்பிடுகிறது ?

'கொங்கு' என்றால் என்ன ? 'தேர்' என்றால் என்ன ? 'வாழ்க்கை' என்றால் என்ன ? என்று பதம்பிரித்து 'கொங்கு' என்றால் கோவை மாவட்டத்தைக் குறிப்பிடுவது; 'தேர் என்றால் திருவில்லிபுத்தூரிலே கவிழ்ந்ததே, அதைக் குறிப்பிடுவது ; 'வாழ்க்கை' என்றால் நாம் எப்படியோ நடத்திக் கொண்டிருக்கிறோமே அதைக் குறிப்பது என்றுகூட எண்ணிக் கொள்ளலாம்.

ஆனால்,—

'கொங்குதேர் வாழ்க்கை'

'அஞ்சிறைத்தும்பி' என்ற அழகான வரி எதைக்குறிப்பிடுகிறதென்றால்-பூவிலே இருக்கிற தாது இருக்கிறதே, அதைத் தேர்ந்தெடுக்கின்ற வாழ்க்கையைக் கொண்ட அஞ்சிறைத் தும்பி.

''அஞ்சிறைத் தும்பி' என்கிற நேரத்தில், அழகான சிறகுகளைப் படைத்த தும்பி என்றும் சொல்லலாம்; வண்டினுடைய சிறகு அது பறக்காமலிருக்கும் போது மற்ற பறவைகளுக்கு தெரிவதைப் போல, வெளியே தெரிவதேயில்லை; அது அகத்திலேயே இருக்கிறது; அதோடு ஒட்டி விடுகிறது; ஆகவே, அது 'அஞ்சிறைத் தும்பி' என்றும் பொருள் கொள்ளுகின்றார்கள்.

இவ்வளவு அரிய விளக்கங்கள் பொதிந்தது அந்த ஒருவரி. கதாநாயகன் தருமிக்கு இறைவன் எழுதிக் கொடுத்ததாகக் கூறப்படும் அந்தப் பாடலின் கதாநாயகனாக வண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. எடுத்துக் கொள்ளப்பட்ட பொருள் மணத்தைப் பற்றியது.

அது கூந்தலுக்கு உண்டா ? இல்லையா? என்கின்ற சர்ச்சை.

நாம் அந்த ஆராய்ச்சியில் இறங்கத் தேவையில்லை. ஏனென்றால், இறைவன் நக்கீரனைப் பார்த்துக் கேட்ட கேள்விகள், அப்படி ஆராய்ச்சிலே இறங்குபவர்களைச் சிக்கலிலே ஆழ்த்திவிடும்.

மணம் இல்லை என்று சொன்னால்-உடனே இறைவன் 'உத்தமமானபெண்களுடைய கூந்தலுக்குக்கூட இல்லையா?' என்று கேட்கிறார்.

'ஆமாம். இல்லை' என்கிறார் நக்கீரர்.

கதையைச் சொல்கிறேன்.

பிறகு, 'தேவ மாதர்களுக்கும் இல்லையா?'' என்கிறார்.

'இல்லை' என்றே சொல்லுகிறார் நக்கீரர்.

'உமையவளின் கூந்தலுக்கும் மணமில்லையா?'' என்கிறார்

நக்கீரர் ''இல்லை'' என்றே கூறுகிறார்.

பிறகுதான் சிவனுக்கு ஆத்திரம் வருகிறது. சாபமிடுகிறார்; பொற்றாமரைக் குளத்திற்குப் போய்ச் சாப விமோசனம் பெறுகிறார் நக்கீரர் என்றெல்லாம் கதை முடிகிறது.

''இல்லை'' என்றோ ''உண்டு' என்றோ வாதிப்பது இரண்டுமே நாம் இப்போது விஞ்ஞான ரீதியிலே ஆராயப் புகுந்தால், நம்முடைய குடும்ப வாழ்க்கையே கெட்டு விடக் கூடும்.

நாம், கூந்தலுக்கு மணம் இருக்கிறதா? என்று ஆராய்ந்து, 'உத்தமமான பெண்கள் கூந்தலுக்கு மணம் இருக்குமென்று சிவனே சொல்லியிருக்கிறாரே-இங்கு அந்த மணம் இல்லையே என்ன காரணம்' என்கிற சங்கடத்திலே ஆழ்ந்தால் மண மலர்த் தோட்டத்திலே தென்றல் நுழைவதற்குப் பதிலாக மனம் என்ற தோட்டத்திலே புயல் நுழைந்து விடக்கூடும்.

ஆகவே அந்த ஆராய்ச்சி தேவையில்லை.

வண்டு அதிலே கதாநாயகனாக ஆக்கப்பட்ட காரணம் என்ன ?

இலக்கியங்களில் — இந்த வண்டு காதலர்களின் நட்புக்காகப் பயன்பட்டிருக்கிறது.

'வண்டோச்சி மருங்கணைதல்' என்று கூறுவது உண்டு. காதலியின் கூந்தலுக்கு மேல் வண்டு பறந்து கொண்டிருக்கிறதாம்; அதைத் தட்டிவிடுவதைப் போல வந்து அவளைத் தொட்டுப் பார்க்கிறானாம்.

வண்டு மணத்தை உணரக் கூடிய சக்தி படைத்தது. எப்படி?

சீவக சிந்தாமணியில்-குணமாலைக்கும், சுரமஞ்சரிக்கும் தாங்கள் தயாரிக்கும் சுண்ணத்தில் எந்தச் சுண்ணம் உயர்ந்தது என்ற போட்டி ஏற்படுகிறது. சீவகனிடத்திலே வழக்கைக் கொண்டு போகிறார்கள். அவன் இரண்டு சுண்ணத்தையும் எடுத்துப் பார்த்து விட்டு, தானே தீர்ப்பளிக்காமல், ஒரு சரியான சாட்சியத்தை வைத்துக்கொண்டு தீர்ப்பளிக்க முயன்று-இரண்டு சுண்ணத்தையும் தனித்தனியாக வாரி வீசுகிறான். குணமாலை தயாரித்த சுண்ணத்தில்தான் வண்டு மொய்க்கிறது. வண்டு நுகரத்தக்க தகுதியான மணம், குணமாலை தயாரித்த சுண்ணத்திலே தான் இருக்கிறது என்று சீவகன் தீர்ப்பளிக்கிறான் என்கிறது சீவக சிந்தாமணி.

ஆகவே, இந்த மண ஆராய்ச்சிக்கு வண்டுகள் சரியான சோதனைக் கருவிகள் என்ற காரணத்தாலேதான்-'கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி' என்ற இப்பாடலிலும், காதலன் வண்டைத்தான் கேட்கிறான்' ''வண்டே, நீ எத்தனையோ மலர்களையெல்லாம் பார்த்திருக்கிறாய்; அந்தத் தாதுக்களை நுகர்ந்திருக்கிறாய்! ஆனால் இவளுடைய கூந்தலை விட மணமுள்ள மலர்களை நீ கண்டதுண்டா? நுகர்ந்ததுண்டா?'' என்று.

பாட்டிலேகூட, இறையனார் மிகத் தந்திரமாக-பெண்ணின் கூந்தலுக்கு மணம் உண்டு, அல்லது இல்லை என்று அந்த விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்காமல் ஒருவன் கேட்பதைப் போலக் கேட்டுப் பாட்டை முடிக்கிறார்.

அப்படிப்பட்ட ஓர் அருமையான பாடல், இந்தப் பொற்கிழி மூலமாக-பாண்டியனுக்கு ஏற்பட்ட ஐயத்தின் மூலமாக-தருமிக்கு ஏற்பட்ட திருமண ஆசை காரணமாக இறையனார் எழுதித் தந்ததாகச் சொல்லப்படுகிற அந்தக் கவிதை நம்மையெல்லாம் மகிழ்ச்சிப் பெரு வெள்ளத்திலே ஆழ்த்தத்தக்க வகையிலே அமைந்திருக்கிறது.

இதுபோன்ற கவிதைகளை நாட்டிலே பரப்ப-வரலாற்றை மீண்டும் மக்களுக்குநினைவூட்ட-நம்முடைய தமிழிலக்கியங்களை மீண்டும் பாமரர்களுடைய மத்தியிலே கொண்டு

வந்து நிறுத்த-தமிழ் மன்னர்களின் வீரவரலாறுகள், புலவர்களின் வரலாறுகள் ஆகியவைகளையெல்லாம் மக்களிடத்திலே கொண்டு வந்து நிறுத்த இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கின்ற முயற்சிகளின் பல்வேறு கட்டங்களிலே நடைபெற்று வருகிற முயற்சிகளில் ஒன்றுதான் மதுரைக் கோயிலிலே நடைபெறுகிற இந்த விழா என்று சொன்னால் மிகையாகாது.

இது கோயில் விழா அல்ல; கோயிலில் நடைபெறுகிற விழா.

இடைக்காலத்திலே தமிழுக்கு இவ்வளவு பெருமை அளிக்கப்பட்டதா? புலவர்கள் இவ்வளவு போற்றப்பட்டனரா? என்றெல்லாம் இங்கு பேசிய குன்றக்குடி அடிகளார் அவர்கள் கேட்டார்கள்.

அன்று மன்னராட்சி, இன்று மக்களாட்சி என்ற வேறுபாடு இருந்தாலும்கூட, அன்றும் தமிழாட்சி தான் நடைபெற்றது. இன்றும் தமிழாட்சி தான் நடைபெற வேண்டும் என்பதில் எந்த விதமான ஐயப்பாடும் நமக்குக் கிடையாது.

அந்தத் தமிழாட்சி-தமிழராட்சி நடைபெறத்தான் இன்றைக்கும் நாம் பாடுபட்டு வருகின்றோம்.

எவ்வளவு இன்னல்கள் வந்தாலும், அந்தக் காலத்து மன்னர்கள் தமிழை இகழ்ந்ததில்லை. தமிழுக்குத் தர வேண்டிய மரியாதையைத் தரத் தயங்கியதில்லை.

தம்பி அமணன், குமணனின் தலையையே கேட்கிறான். கொண்டு வந்து கொடுப்பவர்க்குப் பத்தாயிரம் பொற்காசுகள் பரிசளிக்கப்படும் என்று பறையறைவிக்கிறான்.

வறுமையில் வாடுகிற ஒரு புலவர் குமணனைக் காட்டிலே சந்திக்கிறார். காட்டிலே வாழுகிற அந்த நிலையிலும் குமணன்

''அந்தநாள் வந்திலீர்
அருங்கவிப் புலவீர்
இந்தநாள் வந்துநீர்
நொந்தெனை அடைந்தீர்
தலைதனைக் கொடுபோய்த்
தம்பிகைக் கொடுத்ததன்
விலைதனைப் பெற்றுநும்
வறுமைநோய் களைமின்''

என்று கூறுகிறான். தலையைக் கொண்டு வந்தால் பத்தாயிரம் பொன் என்று, அந்தக் காலத்திலே அப்படியெல்லாம் பறை யறைவித்திருக்கிறார்கள்-தலைக்கு விலை வைத்து.

ஆனால் அவர் தமிழரல்லவா? தமிழ்ப் புலவரல்லவா? அவர் தலை போல ஒன்றைச் செய்து கொண்டுபோய் அமணனிடத்திலே காட்டி, தானாடாவிட்டாலும் தன் சதையாடும் என்கிற உணர்வை எழுப்பி, இரு உடன் பிறப்புகளையும் ஒன்று சேர்த்தார்.

இன்னொரு தமிழ்ப் புலவர், நப்பசலையார். மிகுந்த நட்புப் பாராட்டிய மன்னன் கிள்ளி வளவன் மாண்டு விடுகிறான்.

புலவருக்குப் பெரும் ஐயமே ஏற்படுகிறது - 'இவனை யாராலும் கொல்ல முடியாதே; இவனுடைய உயிர் எப்படிப் போயிருக்கும் ?' என்கிறார். தனக்குத் தானே! அந்தக் கேள்வி பாடலாக எழுந்து விடையும் தருகிறது.

''செற்றன்று ஆயினும்
செயிர்த்தன்று ஆயினும்
உற்றன்று ஆயினும்
உய்வின்று மாதோ!
பாடுநர் போலக்
கைதொழுது ஏத்தி
இரந்தன்று ஆதல்வேண்டும்'

—இதுதான் அந்தப் பாடல்.

''இவனை எதிர்த்தோ, உறவாடியோ இவனுடைய உயிரை எடுக்க முடியாதே யாராலும்! காலனாலும் பறிக்க முடியாத இந்த உயிர் எப்படிப் போயிற்று?'' என்று கேட்டுவிட்டு, ''எமன், பாடுகின்ற புலவனைப் போல வந்து, அவர் கேட்கின்ற பல நன்கொடைகளில் ஒன்றாக, உன்னுடைய உயிரைக்கொடு என்று கேட்டிருப்பான். காலனைக் கவிஞன் என்று கருதிக் கிள்ளிவளவன் தன்னுடைய உயிரைக்கொடுத்திருப்பானேயன்றி, அவனை யாரும் கொன்றிருக்க முடியாது' என்று விடையளித்துப் பாடுகிறார்.''

இது கற்பனையாக இருந்தாலும், எந்த அளவிற்கு அந்த மன்னன் புலவர்களிடத்திலே அன்பு கொண்டிருந்தான் என்பதை எடுத்துக் காட்டுகின்ற கவிதை இது:

தந்தையும் மகனும் சண்டையிட்டுக் கொண்டாலும், புலவர்களே தமிழ் மரபிற்கு ஏற்ப இடையிலே நின்று இருவரையும் சமாதானப்படுத்தினார்கள்; அண்ணனும் தம்பியும் போரிட்டுக் கொண்டாலும் இடையிலே நின்று சமாதானப் படுத்தினார்கள்; அதுதான் தமிழ் மரபு என்று இங்குபேசிய மு.வ. அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஆனால், வாலியும் சுக்ரீவனும் சண்டையிட்டுக் கொண்ட போது-''நீங்கள் சண்டையிடுங்கள்; ' மறைந்திருந்து அண்ணனைக்கொல்லுகிறேன்' என்று சொன்ன இராமனையும் நாம் இன்றைக்குத் தமிழ் மரபாகத் தான் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

நான் இதிலே எந்தக் கொள்கையும் புகுத்த விரும்பவில்லை. புலவர்களுக்கும் மன்னர்களுக்கும் உள்ள வேறுபாட்டைச் சொல்ல வந்தேன்.

இராமனும் ஒரு தமிழ்ப் புலவனாக இருந்திருந்தால், வாலியையும் சுக்ரீவனையும் சந்தித்த நேரத்தில் இருவரும் ஒற்றுமையாக இருங்கள் என்று உபதேசித்திருப்பான். பாவம் இராமன் புலவனாக - தமிழ்ப் புலவனாக இல்லாத காரணத்தால் அப்படி ஆகி விட்டான்.

இராமனுக்குப் பதிலாக அந்த இடத்திலே கம்பர் இருந்திருந்தால் என்ன செய்திருப்பார் என்று கருதுகிறீர்கள்? இருவரையும் ஒன்றாக்கி மகிழ்ந்திருப்பார்.

கம்பனைப் போன்ற ஒரு புலவன் வராமல், இராமனைப் போன்ற ஒரு மன்னன் வந்த காரணத்தால், சண்டையை அதிகமாக்கி-தானே முன்நின்று மன்னிக்கவும், மறைந்து நின்று அந்த யுத்தத்தை முடித்தார்.

இன்றைக்குத் தமிழகமெங்கணும் புறநானூற்று வரிகள் இடம் பெற வேண்டும்; அவை ஏடுகளிலே இருந்தால் மாத்திரம் போதாது படித்த திறம் பெற்ற புலவர் பெருமக்களுடைய நெஞ்சத்திலே இருந்தால் மாத்திரம் போதாது. நிலையான நினைவுச் சின்னங்கள் இருந்தாக வேண்டுமென்ற அடிப்படையிலேதான் நாம் ஒக்கூரிலும், பண்டிதமணி கதிரேசன் செட்டியார் பிறந்த ஊருக்கு அருகாமையிலும், ஓரிடத்தில் ஓர் மலைக்குகையிலும், பறம்பு மலையிலும் புறநானூற்றுச் செய்யுட்களைச் செதுக்கி வைத்து யார் யார் பாடினார்கள் என்கிற விளக்கங்களையும் தந்திருக்கிறோம்.

**[14—9—74 அன்று மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் புலவர்கட்குப் பொற்கிழி வழங்கிய விழாவில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை]**

# உங்களுக்கு 40,...45 வயது இருக்குமா?

## பென்ஷன் ஒன்றை அடைய இனியும் தாமதம் வேண்டாம்

நீங்கள் ஓய்வு பெறும்போது கூடுதல் பாதுகாப்பு பெற இதோ ஒரு விசேஷ திட்டம். தபால் நிலையம் ஒன்றில் (தேசிய சேமிப்பு பத்திரம் Vவது வெளியீட்டை கேட்டு வாங்கி) மாதம் 100 ரூபாய் வீதம் அடுத்த 7 ஆண்டுகளுக்கு நீங்கள் சேமித்து வருவதாக வைத்துக் கொள்வோம். அப்போது உங்களுக்கு 1981-லிருந்து மாதம் 198 ரூபாய் வீதம் 7 ஆண்டுகளுக்குக் கிடைக்கும்.

### 1981-க்குப் பிறகு கூடுதல் அனுகூலம் உண்டு—

இந்தத் திட்டத்தைத் தொடருங்கள். ஒவ்வொரு மாதமும் கிடைக்கும் தொகையுடன் 2 ரூபாய் மட்டுமே கூடுதலாகச் சேருங்கள்; புதிய பத்திரங்களை வாங்குங்கள். அடுத்த 7 ஆண்டுகளுக்குப் பிறகு, அதாவது 1988- லிருந்து உங்களுக்கு மாதம் 396 ரூபாய் வீதம் 7 ஆண்டுகளுக்குக் கிடைத்து வரும்.

ஆரம்பத்தில் நீங்கள் பிரதி மாதமும் சேமித்த 100 ரூபாய் கிட்டத்தட்ட நான்கு மடங்காகப் பெருகியிருக்கும்.

இந்த திட்டத்தில் சேர வயது வரம்பு எதுவும் கிடையாது. ஆண், பெண் எவரும் சேரலாம்.

100 ரூபாய்க்கு அதிகமாகவும் நீங்கள் சேமிக்கலாம். மாதம் 200 ரூபாயோ, 300 ரூபாயோ, 500 ரூபாயோ சேமிக்கலாம். அதிகமாகச் சேமித்தால் கூடுதல் பயன் கிடைக்கும்.

| நீங்கள் சேமிப்பது | | உங்களுக்குக் கிடைப்பது |
|---|---|---|
| முதல் 7 ஆண்டுகள் | இரண்டாவது 7 ஆண்டுகள் | மூன்றுவது 7 ஆண்டுகள் |
| மாதம் 100 ரூபாய் | மரதம் 2 ரூபாய் | மாதம் 396 ரூபாய் |

உங்களுடைய தபால் நிலையத்தில் விசாரியுங்கள். அல்லது

**நாக்பூரிலுள்ள தேசிய சேமிப்பு கமிஷனருக்கு எழுதுங்கள்.**

தேசிய சேமிப்பு நிறுவனம்

davp 74/192

# சன்ன அரிசி தரும் பொன்னி பயிரிடுவீர்!

உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்களுள் 'ஐ.ஆர். 20' ரகத்திற்கு அடுத்தபடியாகப் பெரும் புகழ் பெற்று விளங்குவது, 'பொன்னி' ரகமே! சன்னமான அரிசியைத் தரும் 'பொன்னி' நெல்லிற்கு விற்பனைக் கூடங்களில் நல்ல விலை கிடைக்கிறது! அண்மைக் காலத்தில் 'பொன்னி நெல்', 57 கிலோ கொண்ட மூட்டை ரூபாய் 120 வரை விற்றுள்ளது! இதே நிலைமையில் எப்பொழுதும் 'பொன்னி' நெல் விற்காதெனினும், மற்ற ரகங்களின் விலையைக் காட்டிலும் பொன்னி நெல்லுக்கு எப்பொழுதுமே மூட்டைக்கு 5 முதல் 10 ரூபாய் அதிகம் கிடைக்கும் என்பது திண்ணமாக உள்ளது!

'பொன்னி' நெல் ரகம் 140 நாட்களில் ஏக்கருக்குச் சராசரியாக 30 மூட்டைக்குக் குறையாமல் (ஒவ்வொன்றும் 75 கிலோ கொண்டது) மகசூல் கொடுப்பதுடன், பல உழவர் பெருமக்களின் பண்ணைகளில் ஏக்கருக்கு 40 முதல் 45 மூட்டைகள் வரை மகசூல் கொடுத்து உள்ளது.

சன்ன அரிசியையும், அதிகமான மகசூலையும் கொடுப்பதுடன், பல்வேறு மண்வயணத்திற்கும் ஏற்றகாதவும், சம்பா, தாளடி ஆகிய இரு பட்டத்திற்கும் ஏற்றதாகவும், குறிப்பாகக் கெட்டியான களிமண் நிலங்களிலும் (Heavy clay), தண்ணீர் நன்கு வடியாத மண்களிலும், நீர்த் தேங்கும் பகுதிகளிலும் குறைந்த அளவு ரசாயன உரத்திலேயே நல்ல மகசூல் தரக் கூடியதாகவும் 'பொன்னி' விளங்குகிறது. எனவேதான், தமிழக முற்போக்கு உழவர் பெருமக்கள் 'பொன்னி' ரக நெல் பயிரிடுவதில் பேரார்வம் காட்டி வருகின்றனர்.

'பொன்னி' ரகம் எல்லா மாவட்டத்திற்கும் ஏற்றதாக இருக்கிறது. எனவேதான், இந்த ஆண்டின் முன் பருவத்தில் (Khariff season) — அதாவது சம்பா, தாளடி பட்டங்களில்— தமிழ் நாட்டில் பின்கண்டவாறு மொத்தம் 11.535 இலட்சம் ஏக்கரில் 'பொன்னி' ரகத்தைப் பயிரிட தமிழ் நாடு வேளாண்மைத் துறை திட்டமிட்டுள்ளது.

**பொன்னி பயிரிட வேண்டிய இலக்கு**

| மாவட்டம் | | பரப்பு (இலட்சம் ஏக்கர்) |
|---|---|---|
| செங்கற்பட்டு | ... | 0.570 |
| வடஆர்க்காடு | ... | 0.590 |
| தென்ஆர்க்காடு | ... | 1.690 |
| திருச்சி | ... | 0.660 |
| புதுக்கோட்டை | ... | 0.475 |
| திருநெல்வேலி | ... | 0.29[illegible] |
| கன்னியாகுமரி | ... | 0.050 |
| கோவை | ... | 0.060 |
| சேலம் | ... | 0.130 |
| தருமபுரி | ... | 0.100 |
| மதுரை | ... | 0.500 |
| இராமநாதபுரம் | ... | 1.000 |
| தஞ்சாவூர் | ... | 5.420 |
| மொத்தம் | ... | 11.535 |

எல்லா மாவட்டங்களுக்கும் ஏற்றதாக உள்ள 'பொன்னி' ரக நெல்லைப் பயிரிட கீழ்க் கண்ட ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை (Package of practices) மேற்கொள்ளும்படி தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

## ஒருமித்த செய்நேர்த்தி முறைகள்

### பருவம்

சம்பா, தாளடி ஆகிய இரு பட்டத்திற்கும் ஏற்றது.

### நாற்றுவிடும் காலம்

பொதுவாக ஆகஸ்டு முதல் நவம்பர் வரை நாற்று விடலாம்.

தஞ்சை மாவட்டத்தில் தாளடிப் பட்டத்திற்கு அக்டோபர் 10-ஆம் தேதிக்குள் நாற்று விடுதல் சிறந்தது.

திருச்சி மாவட்டத்தில் நவம்பர் மாதத்தில் நாற்று விடுதலே அதிக மகசூல் தருவதாகத் தெரிய வருகிறது.

கோவை, சேலம், தருமபுரி மாவட்டங்களில் பின் சம்பா பட்டத்தில் (செப்டம்பர், அக்டோபர்) நாற்று விடலாம்.

### விதையளவு

ஒரு ஏக்கர் நடவு செய்ய 18 கிலோ விதையை நாற்று விட வேண்டும்.

### விதை நேர்த்தி

விதை மூலம் நோய் பரவுவதைத் தடுக்க, ஒரு கிலோ

விதைக்கு 2 கிராம் 'அக்ரசான்' அல்லது 'செரசான்' அல்லது 'டீ.எம்.டீ.டி.' மருந்து வீதம் கலந்து, விதைக்கும் கருவியில் இட்டு, விதையுடன் மருந்து நன்கு கலக்கும்படி செய்ய வேண்டும்.

### நாற்றங்கால்

ஒரு ஏக்கர் நடவு செய்ய 12 சென்ட் பரப்பில் நாற்றங்கால் அமைக்க வேண்டும்.

நாற்றங்காலுக்கு 2 வண்டி தொழு எருவிட்டு, இரும்புக் கலப்பையால் உழுது சேருக்கி, ஒவ்வொன்றும் ஒரு சென்ட் பரப்பளவு (54 அடி நீளம் × 8 அடி அகலம்) உள்ள பாத்திகளாக அமைத்துக் கொள்ளவும். மேடைப் பாத்திகள் அமைப்பது சிறந்தது.

### விதைத்தல்

ஒரு சென்ட் பாத்திக்கு 1.5 கிலோ விதை வீதம் விதைக்க வேண்டும்.

### நடவு வயல் தயாரித்தல்

நடவு வயலை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது சேருக்கவும். ஏக்கருக்கு 12 வண்டி தொழு எரு அல்லது கலவை எரு (கம்போஸ்ட்) இட்டு மண்ணுடன் நன்கு கலக்கும்படி உழுது விடவும். அல்லது தழை எரு கிடைத்தால் ஏக்கருக்கு 5 வண்டி வீதம் இட்டு, தழை மிதிக்கும் கலப்பையால் தழைகளை அமிழ்த்தி விடவும்.

### அடியுரம்

தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ஏக்கருக்கு 20 கிலோ தழைச் சத்து, 15 கிலோ மணிச்சத்து, 15 கிலோ சாம்பல் சத்து வீதம் அடியுரம் இட வேண்டும்.

திருச்சி மாவட்டத்திற்கு ஏக்கருக்கு 20 கிலோ தழைச் சத்து, 20 கிலோ மணிச்சத்து 20 கிலோ சாம்பல் சத்து வீதம் அடியுரம் இட வேண்டும்.

தஞ்சாவூர், திருச்சி மாவட்டம் தவிர்த்த மற்றெல்லா மாவட்டங்களிலும் ஏக்கருக்கு 30 கிலோ தழைச் சத்து, 25 கிலோ மணிச் சத்து, 25 கிலோ சாம்பல் சத்து வீதம் அடியுரம் இட வேண்டும்.

இந்த அளவுச் சத்துக்களை அளிக்க பின்கண்டவாறு உரமிடலாம் :

### தஞ்சாவூர் மாவட்டத்திற்கு

20 கிலோ தழைச் சத்து, 15 கிலோ மணிச்சத்து, 15 கிலோ சாம்பல் சத்து அளிக்க 88 கிலோ 17 : 17 : 17 'காம்ப்ளெக்ஸ்' உரத்தையும், 11 கிலோ யூரியாவையும் அடியுரமாக இட வேண்டும்.

அல்லது

100 கிலோ 15 : 15 : 15 காம்ப்ளெக்ஸ் உரத்தையும், 11 கிலோ யூரியாவையும் அடியுரமாக இட வேண்டும்.

அல்லது

டை-அமோனியம் பாஸ்பேட்—35 கிலோ+

யூரியா—30 கிலோ+

மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்—25 கிலோ ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும்.

### திருச்சி மாவட்டத்திற்கு

20 கிலோ தழைச் சத்து, 20 கிலோ மணிச் சத்து, 20 கிலோ சாம்பல் சத்து அளிக்க பின்கண்டவாறு உரமிடலாம் :

யூரியா—44 கிலோ+

சூப்பர் பாஸ்பேட்—125 கிலோ+

மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்—33 கிலோ.

அல்லது



17:17:17 காம்ப்ளெக்ஸ்—120 கிலோ.

அல்லது

டை-அமோனியம் பாஸ்பேட்—44 கிலோ+

யூரியா—26 கிலோ+

மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்—33 கிலோ.

### இதர மாவட்டங்களுக்கு

30 கிலோ தழைச் சத்து, 25 கிலோ மணிச் சத்து, 25 கிலோ, சாம்பல் சத்து அளிக்க 147 கிலோ 17:17:17 காம்ப்ளெக்ஸ் உரத்தையும், 11 கிலோ யூரியாவையும் அடியுரமாக இட வேண்டும்.

அல்லது

யூரியா—65 கிலோ+

சூப்பர் பாஸ்பேட்—155 கிலோ+

மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்—42 கிலோ.

அல்லது

டை-அமோனியம் பாஸ்பேட்—54 கிலோ+

யூரியா—44 கிலோ+

மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்—42 கிலோ.

அடியுரத்தைக் கடைசி உழவில் இட்டு பரம்படிக்கவும்.

### நடுதல்

நாற்றுவிட்ட 30-வது நாளில் நாற்றைப் பறித்து, 15 சென்டிமீட்டர் × 10 சென்டிமீட்டர் (6 அங்குலம் × 4 அங்குலம்) இடைவெளியில் நடவேண்டும்.

### களை எடுத்தல்

நடவு செய்த 15-வது நாளும், 30-வது நாளும் களை எடுத்தல் வேண்டும். தேவையானால் பூ வெளிவரும் சமயத்திலும் ஒரு தடவை களை எடுக்கலாம்.

### மேல் உரமிடுதல்

தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிய ஆற்றுப் பாசன பகுதியில் நடவு செய்த 20-வது நாளில், முதல் முறையாக ஏக்கருக்கு 10 கிலோ தழைச் சத்து அளிக்க 22 கிலோ யூரியாவை

மேலுரமாக இடவும்; இரண்டாம் முறையாக, நடவு செய்த 50 முதல் 55 நாட்களில் ஏக்கருக்கு 10 கிலோ தழைச் சத்து அளிக்க 22 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் பழைய டெல்டாப் பகுதியில் நடவு செய்த 50 முதல் 55 நாட்களில் ஒரே முறையாக 20 கிலோ தழைச் சத்து அளிக்க 44 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

மற்ற எல்லா மாவட்டங்களிலும் (திருச்சி உட்பட) நடவு செய்த 15-வது நாளில் முதல் முறையாக ஏக்கருக்கு 10 கிலோ தழைச் சத்து அளிக்க 22 கிலோ யூரியாவைத் தூவி விடவும். நடவு செய்த 45-ஆம் நாளில், இரண்டாம் முறையாக 10 கிலோ தழைச் சத்து அளிக்க 22 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

### பயிர் பாதுகாப்பு

**நாற்றங்காலுக்கு :** நாற்றுப் பறிப்பதற்கு 7 நாட்கள் முன்னதாக, அதாவது நாற்று விட்ட 23 நாளில் 25 மில்லி லிட்டர் 'பாரத்தியான்' அல்லது 50 மில்லி லிட்டர் 'என்டரின்' மருந்தை 25 லிட்டர் தண்ணீரில் கலந்து 12 சென்ட் நாற்றங்காலுக்குத் தெளிக்கவும்.

**நடவு வயலுக்கு :** நடவு செய்த 21-ஆம் நாள், முதல் முறையாக 'பாரத்தியான்' 200 மில்லி லிட்டர் அல்லது 'என்டரின்' 400 மில்லி லிட்டர் அல்லது 'சுமாதியான்' 250 மில்லி லிட்டர் அல்லது 'லெபாசிட்' 200 மில்லி லிட்டர் அல்லது 'டைமெக்ரான்' 110 மில்லி லிட்டர் அல்லது 'தயோடான்' 300 மில்லி லிட்டர் மருந்தினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து அத்துடன், 'டைத்தேன் இசட்' 78-ல் 400 கிராம்,

அல்லது

டைத்தேன் எம். 45-ல் 400 கிராம்

அல்லது

'ஹினோசான்' 300 மில்லிட்டர் மருந்தைக் கலந்து கையால் இயங்கும் தெளிப்பான் மூலம் தெளிக்கவும்.

விசைத் தெளிப்பான் பயன்படுத்துவதாய் இருந்தால், மேற்கூறிய அளவு மருந்தையே 60 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

நடவு செய்த 42-ஆம் நாள் மேற்கூறியவாறே இரண்டாம் முறையாக மருந்து தெளிக்கவும்.

நடவு செய்த 63-ஆம் நாள் மேற்கூறியவாறே மூன்றும் முறையாக மருந்து தெளிக்கவும்.

### மகசூல்

மேற்கூறிய ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டால், தஞ்சை மாவட்டத்தில் ஏக்கருக்கு 60 கலத்திற்குக் குறையாமல் மகசூல் எடுக்க முடியும். மற்ற மாவட்டங்களில் ஏக்கருக்கு 2,250 கிலோவுக்குக் குறையாமல் (75 கிலோ கொண்ட மூட்டை— 30) மகசூல் எடுக்கலாம்! உயர்ந்த அளவாக ஏக்கருக்கு 3,375 கிலோ (45 மூட்டை) வரை மகசூல் எடுக்க முடியும்!

எனவே, சன்ன அரிசி தரும் பொன்னியைப் பயிரிட்டு, அதிக இலாபம் பெற்றுப் பயன் அடையுமாறு தமிழக உழவர் பெருமக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

**—ஆர். எம்.**


ஸ்தாபிதம் : 1957 — தொலைபேசி எண் : 292

## க்யூ. 849 அருப்புக்கோட்டை தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,


திருச்சுழி ரோடு, அருப்புக்கோட்டை,

இராமநாதபுரம் மாவட்டம்.

### "அருவை டெக்ஸ்"

எங்கள் சங்கத்தில் நேர்த்தியானதும், திடமானதுமான 20, 40, 2/20, 2/40, 2/60, 2/80 நூல்களில் வேஷ்டி, துண்டு, வெள்ளை & கலர் 50" பீஸ்கள், கைலிகள் தயார் செய்கின்றோம். எங்கள் சங்க ஜவுளிகள் மலிவான விலையில் அருப்புக்கோட்டை நூல் கடை பஜாரிலுள்ள 378-ஏ, 1-5/நிர். கதவு இலக்க எங்கள் சங்க டிப்போவிலும், எல்லா கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

# விலைவாசியைக் கட்டுப்படுத்த உதவுங்கள்



## அதிக விலை கொடுக்காதீர்கள்

சங்கர் சிமெண்ட் தரம் நிறைந்த சிமெண்ட். ஆனாலும் கூட அதற்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியதில்லை.
அங்கீகாரம் பெற்ற எங்கள் விற்பனையாளர்களிடமிருந்தே வாங்குங்கள். எங்கள் விற்பனையாளர்களிடம் கம்பெனி கொடுத்துள்ள சான்றிதழ் இருக்கிறதா என்று பாருங்கள்.
எங்கள் விற்பனையாளர்களின் கடைகளில் அமுலில் உள்ள நிர்ணய விலை பட்டியல் இருக்கும். அதன்படி நிர்ணய விலையே கொடுத்து வாங்குங்கள்.

SANKAR IC CEMENT

**இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்**
175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2

IS:269 மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது.

# சங்கர் சிமெண்ட்

தயாரிப்பாளர்கள்

iDSIC/1813TMA



இலக்கியங்களுக்கு
இறவாப் புகழ் தருவது...

காகிதம்

ஹோமர் முதல் ஹெமிங்வே வரை,
காளிதாசர் முதல் காஃப்காவரை,
ஆதிசங்கரர் தொட்டு அரிஸ்டாடில் வரை,
திருவள்ளுவர் தொட்டு தோரூவரை......

*தரமான காகிதம், சிந்தனையாளர்களின் எண்ணங்களும், கருத்துக்களும் காலத்தால் அழிவுறா வண்ணம் காத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கி உதவுகிறது.*

# சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்

பள்ளிப்பாளையம்,
சேலம் மாவட்டம்
தமிழ்நாடு

SPB

*The Watermark of Quality*

எழுத, அச்சிட, உறையிட
உன்னதமான காகிதங்கள்

# பாடுபடப் பாடுபட....!



எடுப்பு

பாடுபடப் பாடுபடப் பலன்தருமே பூமி
பசிதீர நாள்தோறும் உழைக்கவேணும் சாமி (பாடு)

தொகுப்பு

ஈடுஇணை இல்லாத தொழில்இதனை நம்பி
ஏமாந்து போனவர்கள் யாருமில்லை தம்பி (பாடு)

முடிப்பு

இல்லையில்லை என்றுசொல்லி ஏங்கியே குந்தி
இருப்பவனைச் சிரிப்பாளே நல்லநில மங்கை
தொல்லைகளை ஏற்கஅஞ்சும் ஒருகோழை என்றும்
சோம்பேறி செல்வத்தைத் தொடமுடியா ஏழை (பாடு)


பஞ்சங்கள் பறந்தோட வேண்டுமெனில் பச்சைப்
பயிர்விளையும் பாத்திகளில் நீர்வழிய வேண்டும்
அஞ்சாமல் களையகற்றி, பூச்சிகளைக் கொன்று
அருமையாய் உரமிட்டுக் காவல்காக்க வேண்டும்

காஞ்சிகரி காலன்வைகை காவேரி பெண்ணை
கண்ணகிகரு ஞபவானி ஐயாறிருப—தெட்டு
நோஞ்சலான பழையநெல்லை மாற்றியேவி தைத்து
நோகாமல் நஞ்சையிலே மிகுவிளைச்சல் தருவோம் (பாடு)

வரிசையுடன் பாரதிசு ஜாதாவர லக்ஷ்மி
வனிதையரின் பெயரல்ல புனிதமாம் பருத்தி
தரிசாகக் கிடக்கின்ற கரிசல்நிலம் எங்கும்
தயங்காமல் புதுமையாய்ப் பஞ்சுவிளை விப்போம்

உருப்படியாய் வாழ்ந்திடவும் ஊட்டமான சத்து
வழங்கிடவும் மரவள்ளிக் கிழங்குபயிர் செய்வோம்
பருப்புவகை நிரப்பிடுவோம் எண்ணெய்விலை குறைப்போம்
பயன்மிக்க காய்கனிகள் உயர்வாகக் கொய்வோம் (பாடு)




கவிஞர் கருணானந்தம்

# அண்ணல் மொழி கேளீர்!



அகிம்சை என்பது அயராத அன்பு ; அதுவே செந்நெறி. அதன் வாயிலாகவே மனித சமுகத்தைக் காத்தல் இயலும்.

* *

அகிம்சை கோழையின் ஆயுதம் அன்று ; அது வீரனின் ஆயுதம். அகிம்சையில் உறுதியுடையவன் ஆண்டவனிடத்து உறுதியுடையவன்.

* *

இறக்க அஞ்சுகிறவன் மகாவீரரையோ புத்தரையோ, வேதங்களையோ பின்பற்றுகிறவன் அல்லன். மகாவீரரும் புத்தரும் போர்வீரர்கள்; டால்ஸ்டாயும் அவ்வினத்தவரே.

* *

கொட்டும் குருதி நம்முடையதாக இருக்க வேண்டும். மற்றவரின் இரத்தம் சிந்தாமல் அவர்களின் வாளால் இறக்கத் துணியும் வீரத்தில் அகிம்சை இருக்கிறது.

* *

அகிம்சை, அஞ்சாமையின் உச்சியில் நிலவுவது. இம்சையில் தேர்ச்சி பெற்றவர்க்கு அகிம்சையின் சிறப்பை எளிதில் நிறுவிக்காட்ட என்னால் இயலும். பல்லாண்டுகள் யான் கோழையாக இருந்தபொழுது மூர்க்க நெறியைக் கடைப்பிடித்திருந்தேன். எனது கோழைமையை உதிர்க்கத் தொடங்கியபோதே அகிம்சையையும் போற்றி மதிக்கத் தொடங்கினேன்.

* *


தாய்மொழிக் கல்வி மிகவும் முக்கியம். அம்மொழியிலுள்ள எல்லா நூல்களும் அடங்கிய ஒரு கருவூலம் அமைக்க எண்ணியிருக்கிறேன்.

* *

உண்மையில் அழகைக் காணும் ஆற்றல் இல்லாத குருடனாகவே மனிதன் இருக்கிறான். அவன் எப்பொழுது உண்மையில் அழகைக் காணத் தொடங்குகிறானோ அப்பொழுதுதான் உண்மைக் கலையும் பிறக்கிறது.

* *

சமயத்தின் சாரம் ஒழுக்கமே.




என்னுடைய சமயம் சிறைக்கூடு போன்றதன்று. கடவுட் படைப்புக்குட்பட்ட எல்லாவற்றிற்கும் அதனிடத்தே இடமுண்டு.

* *

கடவுள் எங்கோ விண்ணுலகில் இருக்கிறார் அல்லது கீழே அதள பாதாளத்தில் இருக்கிறார் என்று எண்ணுவதும் பேசுவதும் மடமை; அவர் நாம் காணும் ஒவ்வொரு பொருளிலும் இருக்கிறார்.

* *

யாரைக் கண்டும் பொறாமைப்படாதவன் பக்தன். உள்ளத்தில் இரக்கம் நிறைந்தவன் பக்தன். நான், எனது என்னும் அகந்தையைக் கல்லி யெறிந்தவன் பக்தன். சுகம் துக்கம் என்கிற வேறுபாட்டைக் கருதாதவன் பக்தன்.

* *

மலச்சிக்கல்தான் எல்லா நோய்களுக்கும் அடிப்படை. அதேபோல, பொய்மைதான் அத்தனை குற்றங்களுக்கும் அடிப்படை.

* *

சத்தியத்தினும் சிறந்த சமயம் ஒன்றில்லை என்பது எனது பிறழாத உறுதி.

* *

ஒரு நாணயத்தின் ஒருபக்க முத்திரை அன்பு ; மறுபக்க முத்திரை உண்மை.

* *

இவ்வுலகில் எவர்க்கும் நான் அஞ்சேன். இறைவன் ஒருவனுக்கே அஞ்சுவேன். யாரொடும் பகை கொள்ளேன். எவருடைய அநியாயத்திற்கும் இணங்கேன். பொய்மையைச் சத்தியத்தால்-மெய்மையால் வெல்வேன். பொய்மையொடு போராட எல்லாத் துன்பங்களையும் ஏற்பேன்.

* *

முதலில் உண்மையைத்தான் தேடிக் காண வேண்டும். அப்புறம் அழகும் நலனும் தாமே கிட்டும்.

* *

நான் பரிபூரணமானவன் என்று உரிமை கொண்டாடவில்லை. உண்மையைத் தேடிச் செல்வதில் தணியாத ஆர்வம் கொண்டவன் என்ற உரிமையைத்தான் கொண்டாடுகிறேன்.

* *

உண்மை என்பது கடவுளின் மற்றொரு பெயர்தான்.

* *

அகிம்சையைவிட உண்மையினிடத்தில் எனக்குப் பக்தி அதிகம்.

* *

ஆடவன் ஆடவனாக இருந்துகொண்டே பெண்ணாக வேண்டும் - பெண் பெண்ணாக இருந்துகொண்டே ஆடவனாக வேண்டும் என்பது எனது பெருவேட்கை. ஆடவன் பெண்ணாவதென்றால் அவன் பெண்ணுக்குரிய பணிவும் விவேகமும் பெறுதல் ; பெண் ஆடவனாவதென்றால் அவள் தனது கோழைத்தனத்தை உதறிவிட்டுத் துணிவும் வீரமும் பெறுதல் என்பதுதான்.


* *

பெண்களிடத்தே இன்று நாம் பல குறைபாடுகளைக் காண்கின்றோம். அதற்கெல்லாம் காரணம் ஆடவர்களே என்பதை ஆடவர்கள் ஒப்புக்கொள்ளாத வரையில் பெண்கள் முன்னேற முடியாது.

* *

பெண்ணாக நான் பிறந்திருந்தால் பெண்களெல்லாம் தம் கைப்பாவைகள் என்று ஆண்களிடையே நிலவும் கட்டுக் கதையை எதிர்த்துப் புரட்சி செய்வேன்.

# உறுதியாகத் தெரியுமா?



## நீங்கள் வாங்குவது மட்ட ரகப் போலி அல்ல, ஜெனித் குழாய் தான் என்று உறுதியாகத் தெரியுமா? குழாய் மீது ஜெனித் அடையாளம் இருக்கிறதா பாருங்கள்.

பார்த்து வாங்கினால் பலனுண்டு. ஏனெனில, அசல் ஜெனித் எஃகுக் குழாய்களை வாங்கும்போது தரமான எஃகுக் குழாய்களைப் பெறுகிறீர்கள், 45 நாடுகளுக்கு ஏற்றுமதி பெறத்தக்க, சர்வதேசத் தரம் பொருந்திடத் தயாரிக்கப்படும் குழாய்களை அடைகிறீர்கள். கறாராகப் பரிசோதிக்கப்படுகின்றன ஆதலால் இயல்பான நிலைகளிலே ஓர் ஆயுட்காலம் நீடித்துழைக்கும் அளவுக்கு, பலவீனமான இடமே இல்லாமல் ஒருசீரான சுவர்ப் பருமனும், வலிமையும், கட்டுறுதியும் படைத்துள்ள எஃகுக் குழாய்கள் இவை. விவசாயம், தொழில்துறை, கட்டுமானத் தொழில் எதற்கும் சரி, எவ்விதத் தேவைக்கும் யாவரும் ஒருமனதாகத் தேர்ந்தெடுப்பது ஜெனித்.

ஜெனித் ஸ்டீல் பைப்ஸ் லிட்.,
195, சர்ச்கேட் ரிக்ளமேஷன்,
பம்பாய் 400 020.
போன்: 294445. தந்தி: ZENPIPES
டெலெக்ஸ் 011-2458.




everest/867a/ZSP-tm

# மழைக் காலம்

— கவிஞர் வெ. கலைக்கூத்தன் —




அலைமேகம் தனைப்பிடித்து மென்தன்மை கொடுத்து
அழகுமிகு சேலைகளாய் அதைநெய்து எடுத்துக்
கலைமேவும் ஓவியம்போல் உலவிவரும் பெண்கள்
கண்கூச அணிந்துவரும் பவனிதனைக் கண்கள்
வலைவீசும் காளையர்க்கு விருந்தாக்க எண்ணி
வந்தமழை நனைத்துவிடச் சிலையான கன்னி
தலைசாய மிகநாணித் துடிநடையில் கோலம்
தான்மின்ன நெஞ்சிலிடி தாக்குகின்ற காலம் !

ஒருகுடையில் இருஉருவம் ஒன்றிவரச் செய்து
உடல்நனைத்தும் சூடேற்றி நடைதளர்த்தும் காலம் !
மறுபடியும் இந்தமழை என்றுவரு மென்று
மண்பார்த்த விவசாயி விண்பார்க்கும் காலம் !
தெரியாமல் வீட்டார்க்குச் சிறிசுகளும் ஓடித்
தெருத்தேங்கும் ஓடைகளில் இருபாலர் கூடிச்
சரிநிகராய் விளையாடி வீடுவந்து சேர்ந்து
தாய்களிடம் வசவுகளை வாங்குகின்ற காலம் !

பள்ளிசென்ற சின்னஞ்சிறு பசுந்தளிர்கள் எல்லாம்
பழகிடுநூல் நனையாமல் காப்பாற்ற எண்ணி
கொள்ளாத்தன் மேற்சட்டைக் குள்ளவைகள் திணித்துக்
கொண்டாட்டம் போட்டாங்கே குதித்துத்தான் நனைந்து
துள்ளிவரும் பாங்குதனைக் கண்டிடுதாய் ஓடித்
துடிதுடித்து முந்தானை தானெடுத்துத் துவட்டி
அள்ளித்தன் மார்போடு அணைத்துடையை மாற்றி
அழுதூட்டும் காட்சிமிக நல்குகின்ற காலம் !

கார்முகிலும் திரண்டுவந்து கடல்வண்ணம் காட்டக்
கண்டமயில் இனந்தோகை விரித்தாடும் காலம் !
ஏர்கலப்பை தோள்சுமந்து எருதுமுனம் நடக்க
இவ்வுலக உயிர்நாடி வயல்வரப்பைக் கடக்க
பார்வைதனைப் பயிர்நலத்தில் செலுத்தியகம் வந்தும்
பாசமிகு மனைவியைத்தான் அணைக்கமழை பெய்யின்
கோர்வையுடன் வருநெஞ்சில் வயற்காட்டின் நினைவு
கொள்ளன்பை இருபிரிவாய் அவனுக்கும் காலம் !

காட்டாற்றில் வருவெள்ளம் கரைகடக்கும் மழையால்
கால்நடைகள் மிகவிரைந்து வீடுவந்து சேரும்
கோட்டானும் குருவிகளும் கூடேகும் ஏழைக்
குடிசைகளும் தண்ணீரில் மிதந்துவரும் காலம் !
பாட்டாளி வீடுகளில் வெள்ளம்புக அந்தப்
பக்கமுள்ள பள்ளிமக்கள் தங்குகின்ற காலம் !
பாட்டளவில் அடங்காது இரண்டுமுண்டு எனினும்
பாருக்கு மழைகாலம் இயற்கைதரும் பரிசு !




# திருக்கானப்பேர் தெரியுமா?

சங்க காலத்திலிருந்து வரும் ஊர் திருக்கானப்பேர்.

இந்த ஊரை தெட்சிணகாளி புரம் சோதிவனம் மந்தாரவனம் மோட்சபிரதம், சைவஷேத்திரம், காந்தாரம், தவசித்திகரம், தேவதாருவனம், பூலோக கை லாசம், அகத்திய ஷேத்திரம், மகா காளபுரம் என்று பல பெயர் களில் அழைக்கிறார்கள்.

திருவாரூர் தேருக்குள்ள பெருமை போல இந்த ஊரின் தேருக்கும் பெருமை உண்டு.


பழைய தேர் இழுக்க முடி யாமலே போய்விட்டது. அவ் வளவு பெரியதாம்.


சமயக் குரவர்களான திரு ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மூவரும் தம் திருப்பதி கங்களால் பாடிய பெருமை பெற் றது இவ்வூர்.

இன்னும் தெரியவில்லையா?

சிவகங்கைச் சீமையில் வெள்ளை யரை எதிர்த்துப் போரிட்ட மான மறவன் பெரிய மருது திருப்பத் தூரில் தூக்குக்கயிற்றை முத்த மிட நேர்ந்தாலும் இந்த ஊரில் தான் அவரின் கல்லறை உள்ளது.

சிவகங்கை ரயில் நிலையத்தி லிருந்து கிழக்கே பத்தாவது மைலிலும், தேவகோட்டை யிலிருந்து மேற்கே தேவகோட் டை-மானமதுரைப் பாதையில் இருபதாவது மைலிலும், மதுரை-தொண்டிப் பாதையில் மதுரை யிலிருந்து நாற்பதாவது மைலி லும் அமைந்துள்ள காளையார் கோயில்தான் அந்த ஊர்.





இராமேசுவரம் கோயில் போன்று அமைந்துள்ள முற்றுப் பெறாத வெளிப்புறச் சுற்று

காளையார் கோயிலுக்குப் பண்டைக் காலத்தில் வழங்கிய பெயரே திருக்கானப்பேர்.

சிவகங்கை அரண்மனை அறநிறுவனத்தின் ஆளுகைக்கு உட்பட்ட திருவாலயங்கள் எண்பத்து ஐந்தாகும். அந்த ஆலயங்களில் ஒன்றுதான் காளையார் கோவில் திருக்கோயில். இக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் பெயர்கள் காளீசர், சோமேசர், சொக்கநாதர் என்பதாகும்.

சிவகங்கைச் சீமையை ஆண்ட முத்துவடுகநாதர் காளீசரை விருப்ப தெய்வமாகக் கொண்டாடினாராம்.

வீரசேன பாண்டியனின் பிள்ளையில்லாக் குறை இத்தலத்திற்கு வந்து வழிபட்டதால் நீங்கிற்று. வரகுண பாண்டியன் சோழ மன்னனை வெற்றி கொள்ளக் காளீசுவரர் திருவருள் செய்தார். விக்கிரம சோழன் காளீசரை வணங்கிப் புத்திரப் பேறடைந்தான் என்பன போன்ற பல செய்திகள் இங்குக் கூறப்படுகிறது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறப்புற்று விளங்கும் இவ்வூர் ஆலயம் திருவிழாக் காலங்களில் மட்டுமே மிகுந்த கூட்டத்துடன் விளங்கும் என்று தெரிகிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஆலயத்தில் திருப்பணி நடைபெற்று வருகிறது. செங்கற்களாக இருந்த பகுதிகளைக் கருங்கற்களால் கட்டி வருகிறார்கள்.

இராமேசுவரம் கோயிலின் சுற்றுப் பிரகாரத்தினைப் போன்று அதே மாதிரி கல் தூண்களை அமைத்துக் கட்டி வந்துள்ளார்கள். நீண்ட நாளாகியும் முற்றுப் பெறாத நிலையிலே அந்தப் பணிகள் உள்ளன.

ஆலயத்துக்குச் சேரும் நிதி அவ்வளவு பெருந்தொகையாக இராது என்ற எண்ணம் நம்முள் எழுகிறது.

ஆலய நிருவாகப் பொறுப்புள்ளவர்களிடம் வினவுகிறோம். அவர்களும் ஒத்துக் கொள்ளுகிறார்கள்.

வரலாற்று முக்கியத்துவம் உணர்ந்து இந்த ஆலயத்தைக் காண வருபவர்கள் ஏராளம்! வழிபாட்டுக்கு வந்து காணிக்கைச் செலுத்தி செல்வார்கள் எண்ணிக்கை ஏனோ அந்த அளவுக்கு இல்லை.

எனினும் சிவகங்கை அரண்மனை அறநிறுவனத்தைச் சேர்ந்த ஏனைய ஆலயங்களின் மிகுதியான வருவாய் இவ்வாலயத்திற்குப் பயன்படக்கூடிய வாய்ப்பு உண்டு. வேறுவகையில் குறைவில்லாமலே ஆலயத்தின் அன்றாடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இறைவன் வழிபாட்டின்போது பாடுவது மட்டுமல்லாது நாட்டியம் ஆடிக்கொண்டு வழிபாடு செய்யும் 'நாட்டியக்கட்டளை' என்ற அறக்கட்டளையின்படியும் இங்குப் பூசை நடைபெறுகிறது.

கோயிலின் வாகனங்கள் அனைத்தும் காணத் தகுந்தவை. மிகப் பெரியவை.

கோயிலின் உள்ளே கிழவன் சேதுபதி சிலையையும், மருது சகோதரர்கள் சிலையையும் காணலாம். முத்துவடுக நாதர் உருவமும் ஓரிடத்தில் அமைக்கப்பெற்றுள்ளது.

காளீசர் சன்னதிக்கு நேராகக் கோயிலுக்கு வெளியே ஒரு பர்லாங் தொலைவில் அமைந்துள்ளது பெரிய மருதுவின் சமாதி. 1748-ஆம் ஆண்டில் சிவகங்கைச் சீமையில் தோன்றிய அந்த மானமறவன் 27.10.1801 அன்று மறைந்ததை அங்குக் குறிப்பிட்டுள்ளனர்.

வீரம் கமழ்ந்த மண்ணின் பல செய்திகள் நம் நினைவுக்கு வருகின்றன.

அவைகளை நினைந்தவாறு மீண்டும் கோயில் பகுதிகளைச் சுற்றி வந்தோம். அதோ தெப்பக்குளம் தெரிகிறது. அதன் ஒரு கரையில் நின்று நடுவிலுள்ள மண்டபத்தைக் காணுகின்றோம் கோயில் கோபுரமும் தெரிகிறது. மாலைக் கதிரவனின் பொன்னொளியால் கோவிலின் கோபுரம் புதிய வனப்புடன் திகழ்கிறது; நம் நெஞ்சம் மயங்குகிறது.

நம் கண்முன்னே காணும் வனப்புக்கு ஈடில்லை!
இது காளையார் கோயிலுக்குள்ள பெருமை.

—மாறன்



# தமிழும் தமிழரும்



தென்னுப்பிரிக்காவில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போரில் தமிழ்மக்கள் புரிந்த துணையைப் போல் வேறெந்த இந்தியரும் புரியவில்லை. அவர்களுக்கு நன்றியறிதல் காட்ட அவர்கள் நூல்களைப் 'பயில வேண்டுமென நினைத்தேன். அப்படியே அவர்கள் மொழியைப் பயில்வதில் ஊக்கமாக ஒரு திங்கள் கழித்தேன். அம்மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன். அது, மனங்கவரும் ஓர் இனிய மொழி.

* * *

தமிழ் மக்களுள் பண்டை நாளிலும்—இந்நாளிலும் கூடப் பல அறிஞர் இருந்தனர்—இருக்கின்றனர் என்பது அம்மொழியின் அமைப்பாலும் பயிற்சியாலும் அறியக் கிடைக்கின்றது. இந்தியாவில் ஓரினம் ஏற்படவேண்டுமாயின் சென்னை மாநிலத்திற்கு அப்புறமுள்ளவர்களும் தமிழுணர்தல் வேண்டும்.

* * *

தமிழ்மக்கள் எனது இரத்தக் கலப்புற்ற உடன்பிறந்தவர் போலத் தோன்றுகிறார்கள்.

* * *

தமிழ்மொழிப் பயிற்சியைப் பற்றி நான் ஒன்றுங் கூறுவதில்லை என்று சிலர் என்மீது பழி சுமத்துவதாகக் கேள்வியுற்றேன். அப்பழி என்னை அணுகாது. என்னை நன்கறிந்தவர் என் மீது அப்பழியைச் சுமத்தமாட்டார்கள். ஆங்கிலம் பயில்வதற்கு முன்னர் தமிழ்மொழி பயிலவேண்டும் என்று நான் பலமுறை கூறி வந்திருக்கிறேன். 1915 - ஆம் ஆண்டிலேயே ஆங்கிலத்தைவிடத் தமிழ்மொழியைச் சிறப்பாகக் கொள்ளுமாறு தமிழ்மக்களை வேண்டிக் கொண்டேன்.

* * *

இருபது ஆண்டுகளுக்கு முன்னரே நான் தமிழ் பயிலத் தொடங்கியதற்குக் காரணம் திருக்குறள் மூலத்தையே நேராகப் படித்தல் வேண்டும் என்று என் உள்ளத்தில் எழுந்த ஆசையே யாகும்.

* * *

தமிழ்மொழியில் புலமை பெறுவதற்குரிய ஓய்வு எனக்கு ஆண்டவன் அருளினுனில்லை. அது குறித்து நான் அடையும் வருத்தத்திற்கு ஓர் அளவில்லை.

* * *

தமிழ்மக்கள் தங்கள் தாய்மொழியாகிய தமிழ் பயில வேண்டுவது அவர்களது இன்றியமையாக் கடமை. தமிழர் தம்மொழியை ஆங்கிலம் முதலிய மொழிகளை விடக் கூட முதன்மையாகக் கருதுதல் வேண்டும்.

**—அண்ணல் காந்தியடிகள்**

# என்றும் வாழ்வார்!



'பார் சிறுத்ததோ, படை பெருத்ததோ' என்று செயங்கொண்டார் பாடியதற்கு விளக்கம் இதோ—

ஊரெல்லாம் குறுகிவிட்டன, ஒன்று திரண்டுவிட்ட மக்கள் திரளால்...

காணுமிடமெல்லாம் மக்கள் கடல்.

கண்படுமிடமெல்லாம் மகிழ்ச்சி வெள்ளம்.

வல்லநாடு எல்லாம் மக்கள் தலைகளால் நிரம்பி வழிந்தது.

நெஞ்சம் நிறைந்த உணர்ச்சிப் பெருக்கு பாஞ்சைப் பகுதிஎங்கும் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது.

எங்கும் விழாக் கோலம்.

எழுச்சியின் வேகம்.

பண்டை நாள் ஆண்ட மன்னர் மீண்டும் பாஞ்சாலங்குறிச்சிக்கு வந்து பார்த்தால் நம்புவரோ என்னவோ!

இப்படியொரு காட்சியை எண்ணிப் பார்க்கவே முடியாதே!

புதைந்த வரலாற்றுச் சின்னத்துக்குப் புத்துயிர் ஊட்டும் திருப்பணியல்லவா நடந்திருக்கிறது! பொட்டல் வெளியாக்கப்பட்ட இடத்தில் புகழ்பாடும் கோட்டையல்லவா எழுந்துள்ளது!

ஈடில்லாப் பெருமையை எண்ணி மகிழ்ந்து வீறு நடைபோட்டு விழாக் காணச் சென்றுகொண்டிருந்த என்னை அந்தப் பெரியவர் அழைத்தார்.

தள்ளாத வயது அவருக்கு, ஆனால் தளராத உடலமைப்பு.

மூப்பின் சாயல்தோன்றிடினும் முகத்தில் வீரம் செறிந்த வனப்பு.

முதுமை, அவருடைய கம்பீரமான தோற்றத்தைக் கண்டு அஞ்சி நெருங்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்க வேண்டும்.

அவருடைய உடலமைப்பைக் கண்டு எனக்குக் கொஞ்சம் அச்சம் தோன்றினாலும் பாஞ்சை மண்ணில் அச்சம் வரலாமா என்ற துணிச்சலுடன் அவர் அருகில் சென்றேன்.

"தம்பி! இந்த விழாவைக் காண்பதில் நீ எவ்வளவு ஆனந்தப் படுகிறாயோ அதே போன்று பல மடங்கு மகிழ்ச்சி அடைய உரிமை உடையவன் நான்"—என்றவர் தொடர்ந்தார்.

"தம்பி! எந்தக் காலத்திலும் பாஞ்சாலங்குறிச்சியில் மக்கள் இப்படித் திரண்டது கிடையாது. வயது அதிகமாகி விட்டதால் இந்தப் பெருங் கூட்டத்தின் நடுவே செல்வது எனக்குக் கொஞ்சம் கடினம். எனக்குத் துணை வருகின்றாயா?

அவருக்கு நான் துணையா?

மாவீரனுக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய அவர் எங்கே? நான் எங்கே? பதில் பேசாமல் அவரை நோக்கினேன். ஒளி உமிழும் அவரின் கண்களில் தெரிந்த வீரமும் ஆவலும் என்னைச் 'சரி' சொல்ல வைத்தன.

"வாங்க, போகலாம்" என்று அழைத்துக்கொண்டு கூட்டத்தில் கலந்தேன்.

பெரியவர் துணைக்கு என்னை அழைத்தார். ஆனால், எனக்குத் துணை வருபவர் போல வந்தார். அவருடைய நடையைக் கண்டோ என்னவோ எல்லாரும் ஒதுங்கி வழிவிட்டனர்.

பெரியவர் பேசிக்கொண்டே வந்தார். "தம்பி, நாம் மக்கள் கூட்டத்தின் நடுவில் இருந்து கொண்டுதான் எல்லாக் காட்சிகளையும் காண வேண்டும். அப்பொழுதுதான் மக்களின் உணர்ச்சிகளையும் எழுச்சிகளையும் பகிர்ந்துகொண்டு நாம் அனுபவிக்க முடியும்".

அவர் சொல்வதற்கெல்லாம் தலையசைத்து வந்தேன்.

பாஞ்சாலங்குறிச்சியில் காற்று மிக வேகமாக வீசியது. அதனால் தான் என் தலையசைந்தது என்று நினைக்க வேண்டாம். பெரியவரின் கம்பீரமான தோற்றத்தைக் கண்ட எவரும் என்போல்தான் செய்வார்கள்.

ஊர்வலம் தொடங்கச் சிறிது நேரமாகும் போல் தோன்றியது. என் மதிப்புக்குரியவராகக் காட்சி அளிக்கும் அந்தப் பெரியவருக்குப் பாஞ்சாலங்குறிச்சியின் சரித்திரம் நிச்சயம் தெரிந்திருக்க வேண்டும். அவரிடம் கேட்டேன்.

ஒரு வரலாற்றுப் பேராசிரியர் போல மிகத் தெளிவாக அவர் விளக்கினார்:

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு-

தெலுங்கு தேசத்திலுள்ள பெல்லாரி வட்டாரத்தில் 'வாடிக் கோட்டை' என்ற பகுதியில் குறுநில மன்னனாக வாழ்ந்தவன் பாலராஜா. அவனுடைய எட்டாவது மைந்தன் பொம்மு.

வான் மழை பொய்த்ததால், வாழ்வு சிதைந்ததால் வாடிக் கோட்டையை விட்டு, வாழஇடம் தேடித் திருநெல்வேலிச் சீமைப் பக்கம் வந்தான் பொம்மு.

அதுபோது—

தென்பாண்டி மண்டலத்தை ஆண்டுவந்த பாண்டிய மன்னர்கள் வலிவு குன்றி வாழ்ந்து வந்தார்கள். திசைக்கொருவராகக் குறுநில மன்னர்களாக வாழ்ந்தனர். சாலிக்குளம் அருகே அழகிய பாண்டியபுரம் என்ற ஊரைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டவன், ஜகவீர பாண்டியன் என்ற குறுநில மன்னன்.

ஜகவீர பாண்டியனைப் புதியம் புத்தூர் ஆரைக்குளம் முதலிய ஊர்களிலிருந்து குறுநில மன்னர்கள் எதிர்த்தார்கள். அவர்களை எதிர்க்கத் தன்பகுதியில் வாழ்ந்து கொண்டிருந்த கெட்டிபொம்முவை ஜகவீர பாண்டியன் துணைக்கு அழைத்தார்.

'மன்னர்க்கு உழைத்தல் தன் தலை கடனே' என்றுணர்ந்த கெட்டிபொம்மு, ஜகவீர பாண்டியனுக்கு ஆதரவாக நின்று எதிரிகளை முறியடித்துத் தளபதி ஆனான். ஜகவீர பாண்டியன் மறைந்தபொழுது வாரிசு இல்லாததினால் கெட்டிபொம்மு அரசனானான்.

சாலிக்குளம் அருகே காட்டில் வேட்டையாடப்போனபொழுது, வேட்டை நாய்களால் துரத்தப்பட்ட முயல் ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைந்தவுடன் துரத்தி வந்த வேட்டை நாய்களை எதிர்த்துச் சீறியது. முயலின் சீற்றத்தைக் கண்டு நாய்களும் அஞ்சி நின்றன. எனவே அந்த மண்ணின் மகிமையை உணர்ந்த கெட்டிபொம்மு அங்கு ஒரு கோட்டை கட்டினான். அதற்குத் தன் மூதாதையின் நினைவாகப் பாஞ்சாலம் என்ற பெயரைச் சூட்டிப் பாஞ்சாலங்குறிச்சியை உருவாக்கினான். அது முதல் அரசனின் தலைநகரமாயிற்று, பாஞ்சாலங்குறிச்சி.

கெட்டிபொம்மு தனக்கு அரச வாழ்வை அளித்த ஜகவீர பாண்டியன் நினைவாகத் தன் மகனுக்கு ஜகவீர பாண்டியக் கட்டபொம்மு என்று பெயரிட்டான்.

கி.பி. பதினேராம் நூற்றாண்டில் ஜகவீர பாண்டியக் கட்டபொம்மு பட்டத்துக்கு வந்தான். அவனைத் தொடர்ந்து வீரபொம்மு, இரண்டாவது கெட்டிபொம்மு, ஆதிராமு, சின்னபொம்மு, வீரராமு, துரைராஜன், நல்லபொம்மு, முத்து விஜயராமு, வீரசூடாமணி, தளவாய்குமாரசாமி, வீரமல்லு, அதிவீரராமு, ரணவீர சின்னு, வீரசேகரன், ரகுநாதன், ஜெகவீரபொம்மு, விஜயராகவன், ராஜபாண்டியன், துரைமல்லு, பொம்முதுரை, துரைச்சிங்கம், ஜகவீரராமு, துரைராஜ பாண்டியன், கெட்டித்தளவாய், விஜயரகுராமன், ராஜபொம்மு, வீரசென்னவன், பராக்கிரம பாண்டியன், விஜயரகுபதி, துரைராஜபொம்மு, வீரதளவாய், விஜயரகுநாதன், குமார வீரன் ரணவீர ராமு, ரகுவீர ராமன், பால்ராஜ பொம்மு, ரகுவீரணன், ஜகவீரராகவன், சின்னபொம்மேந்திரன், ஜகவீர ராமகுமாரசாமி, ராஜசூடாமணி, ரகுவீர பாண்டியன், பால்பாண்டியன் ஆகியோர் ஆட்சி புரிந்தனர்.

பால்பாண்டியனுக்கு அடுத்துப் பட்டத்துக்கு வந்தவர் ஜெகவீர கட்டபொம்மன். இவர் கி.பி. 1760-ஆம் ஆண்டில் பட்டத்துக்கு வந்தார். இவருடைய மனைவி ஆறுமுகத்தம்மாள். இவர்களுடைய மூத்த புதல்வன்தான் வீரபாண்டியன். இரண்டாவது மகன் குமாரசாமி, மூன்றாவது மகன் துரைசிங்கம்.

வீரபாண்டியன் காளைப் பருவம் எய்தியவுடன் வீரசக்கம்மாள் என்ற பெண்ணை மணந்தார்.

வீரபாண்டியன் தனது முப்பதாவது வயதில் 1790-ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதத்தில் பட்டத்துக்கு வந்தார்.

''அப்பொழுது பாஞ்சாலங்குறிச்சிப் பாளையம் தொண்ணூற்றாறு ஊர்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது. அவ்வூர்கள் கெவுனகிரி வணிதம், பசுவந்தனை வணிதம், புதியம் புத்தூர் வணிதம், ஆதனூர் வணிதம், வேடநத்தம் வணிதம், பட்டண மருதூர் வணிதம் என ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி செலுத்தப்பட்டது.''

—இதுவரை சொல்லி வந்த பெரியவர் இப்பொழுது நிறுத்தினார். ''வீர பாண்டியனின் வீரச் செயல்களைப் பற்றி நானே சொல்வது முறையல்ல'' என்றார்.

ஒன்றும் புரியாமல் நான் அவரைப் பார்த்தேன்.

''தம்பி, உனக்கு எதுவும் வீரபாண்டியன் பற்றிய செய்திகளே தெரியாதா?''

''ஏன் தெரியாது, நீங்கள் வரலாற்றுப் பேராசிரியர் மாதிரி விவரங்களைச் சொன்னால் வரலாற்று மாணவன் போல எனக்கும் தெரியும்'' என்ற நான் அவருடைய பதிலுக்காகக் காத்திராமல் சொன்னேன்.

கட்டபொம்மன் பிறந்தது — 3—1—1760-ஆம் ஆண்டு.

பட்டத்துக்கு வந்தது— 2—2—1790-ஆம் ஆண்டு.

கும்பினியார் திரைகேட்டது— 1793-ஆம் ஆண்டு.

ஆலன் துரை பாஞ்சைக் கோட்டைக்கு வந்தது—1797-ஆம் ஆண்டு.

ஜாக்ஸன்—வீரபாண்டியன் சந்திப்பு—10—9—1798.

பாஞ்சைப் போர் மூண்டது— 5—9—1799.

வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டது—16-10-1799.

ஊமைத்துரையின் சிறைவாசம் —1-11-1799 முதல் 2-2-1801 வரை.

பங்கெட் என்னும் ஆங்கிலத் தளபதியைச் சிறை வைத்தது — 30—2—1801.

கும்பினியார் பாஞ்சாலங்குறிச்சியில் போராடியது— 31—3—1801.

ஊமைத்துரையிடம் ஆங்கிலத் தளபதி படைவீரர்களைப் புதைக்க சமாதான கொடியுடன் சுபேதாரை அனுப்பியது—1-4-1801.

பாஞ்சாலங்குறிச்சி அருகே ஆங்கிலத் தளபதி பாசறைகள் அமைத்தது—3—4—1801.


ஊமைத்துரை வெளியேறப் பாஞ்சைப்பதி அடியோடு அழிந்தது—24—5—1801.

பெரியவர் குறுக்கிட்டார், ''தம்பீ! இவ்வளவு தகவல்களை நீ தெரிந்து வைத்திருப்பது போன்று எல்லாத் தமிழர்களும் தெரிந்து வைத்திருப்பார்கள். ஆனாலும் . . . .''

''ஆனாலும் என்ன?''—நான் கேட்டேன்.

அவர் பதில் சொல்லவில்லை. ''அதோ ஊர்வலம் புறப்பட்டு வருகிறது. அதைப் பார்ப்போம் பிறகு பேசிக்கொள்ளலாம்'' —என்று கட்டளையிடுவது போலச் சொன்னார்.

அலங்கார அணிவகுப்புப் புறப்பட்டு வந்தது.



ஊர்வலத்தின் துவக்கத்தைப் பார்த்தவுடனேயே உற்சாகத்தோடு உரக்கச் சொன்னேன்.

''ஆண்ட நாள் ஆண்டு மாண்ட செந்தமிழ்ப் பாண்டியன் மீண்டும் பவனியா? அற்றை நாள் காட்சியா? நிகழ்ச்சியா? வீரபாண்டியனே நேரில் வந்தாலும் நம்புவாரோ?''

''உண்மை புரிந்து விட்டதா தம்பி உனக்கு''.

—இப்படிப் பெரியவர் கேட்டதுதான் எனக்குப் புரியவில்லை. ஊர்வலம் எங்களை நெருங்கியது.

யானை முன்னே செல்ல—

அலங்கார ஊர்திகள், வீரபாண்டிய கட்டபொம்மன் வரலாற்று நிகழ்ச்சிகளை விவரிக்கும் ஓவியங்களைத் தாங்கி வர—

வரலாற்றுக் காட்சிகளை நம் கண்முன்னே காட்டிட அந்தந்த வேடமணிந்தோர் ஏறிச் செல்லும் ஊர்திகள் இடையிடையே செல்ல—

ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்னே அணிவகுத்துச் சென்ற தென் பாண்டி மண்டலத்து மறவர்கள் அணிவகுப்புத் தொடர்ந்தது.

பண்டையக் காட்சிகளைப் பசுமையாக நம் கண்முன்னே காண்கிறோம்.

பாளையத்து வீரர் தம் வீர விளையாட்டுக்கள்ஒன்றா இரண்டா? வேலும் வாளும் தாங்கிய திண்தோள் மறவர்களின் உடற்கட்டும் வீரம் கொப்பளிக்கும் விளையாட்டு முறைகளும் விவரிக்கக் கூடியனவா?

வித்தை இதற்கு ஈடில்லை என்று சொல்லும்வகையில், சிலம்பமும், அதன் வகை முறைகளும்.

இருந்த இடத்திலிருந்தபடியே எதிரியின் தலையைக் கொணர வைக்கும் சுருள் கத்தியால் தாக்கும் முறையும், தடுக்கும் வகையும் அந்நாள் வீரர்களை நமக்குக் காட்ட !

ஆணுக்குப் பெண் வீரத்தில் குறைந்தவள் அல்லள் என்பதைக் காட்டவோ 'அந்நாள்வீரமகளிர் அணிவகுப்பு'.

சீறி வந்த புலியை முறத்தினாலேயே அடித்துத் துரத்தியவர்கள்—புறநானூறு காட்டும் 'புலி சேர்ந்து போகிய கல்லளை'யை வயிறுகக் கொண்டவர்கள் இவர்கள்தாம் என்று அந்தக் காட்சியைக் கண்டவர்கள் ஒப்புக் கொள்ளுவார்கள்.

இவைகளுடன் சீரணி, இளைஞரணி, மகளிரணி, சாரணர்கள், தேசிய மாணவர் படையினர் போன்றோரும்,

கரகம், காவடி போன்ற ஆட்ட நிகழ்ச்சிகளும் அழகுற அமைந்திட ஊர்வலம் சென்றது.

அலங்கார வண்டிகளுடன் மக்கள் திரளும் அணிவகுத்தது.

ஊர்திகளில் மின்விளக்கு அலங்காரம் வேறு. எங்கும் ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சிக் கொண்டே சென்றன.

தனியாக அமைக்கப்பட்ட மேடை ஒன்றிலிருந்தவாறு தமிழக முதல்வரும் அமைச்சர்களும் தமிழ்க் குலப் பெருமக்களும் ஊர்வலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவர்களை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்த பெரியவர், வாழ்த்துவது போலத் தலையசைத்தார்.

கூடியிருந்த மக்கள்கடல் விழா நடக்கும் இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. ''ஐயா போகலாமா?'' என்றேன்.

'விழா நடக்கும் இடத்திற்குத் தானே?' என்றார்.

அதற்கு முன் நினைவுக் கோட்டைக்குச் சென்று பார்க்கலாம் என்று அழைத்தேன். இப்பொழுது எல்லாம் நான் சொல்லியபடியே பெரியவர் கேட்டார்.

ஏதோ பரவசத்தில் தன்னை இழந்திருந்தார் அவர்.

நினைவுக் கோட்டைக்குச் சென்றோம்.

அங்குச் சென்றவுடன் அரியணை மண்டபத்திலுள்ள கட்டபொம்மன் சிலையைப் பார்த்துக் கண்கள் ஒளி உமிழ ஒரு புன்னகை பூத்தார்.

''அண்மைக் காலத்தில் எந்த மன்னருக்கும் இவ்வளவு பெரிய உருவச் சிலையைக் கல்லில் செதுக்கியதில்லை. காஞ்சிபுரத்துக்கு அருகிலுள்ள பட்டுமலைக் குப்பத்திலிருந்து எடுத்து வரப்பட்ட கல்லில் மாமல்லபுரத்தில் செய்யப்பட்ட சிலை இது என்றேன்''

அந்தப் பெரியவரோ வேறு ஓர் உலகத்தில் இருப்பதுபோன்ற உணர்வில் மூழ்கியிருந்தார்.

அந்த நினைவுக் கோட்டையின் மேல் தளத்துக்குச் சென்று சுற்றிப் பார்த்தோம். அருகிலிருந்த ஜக்கம்மாள் ஆலயத்தை மேல் தளத்திலிருந்து பார்த்தவுடன் மிக வேகமாக விரைந்து கீழே இறங்கி ஜக்கம்மாள் ஆலயத்தை நோக்கிச் சென்றார்.

பெரியவரைப் பின் தொடர்ந்தேன்.

ஜக்கம்மாள் ஆலயம், என்றுமில்லாச் சிறப்புடன் தோன்றியது.

அந்த ஆலயத்துக்குரிய மங்கல ஒலிகள் முழங்கிக் கொண்டிருந்தன.

சில மணித் துளி நேரம் மௌனமாக அம்மனை நோக்கி வழிபட்ட பெரியவர், என் பக்கம் திரும்பி, ''தம்பி, புதிய பொற்காலத்தைப் படைத்துக் கொண்டிருக்கிறீர்கள்'' என்றார். அவர் மேலும் ஏதோ சொல்ல நினைத்தார். அதற்குள் விழா நிகழ்ச்சிக்கு நேரமாவதை நினைவூட்டினேன்.

''சரி, செல்லலாம்'' என்றார்.

ஆலயத்துக்கு அருகில் கம்பி வேலியிட்டு மறைத்திருக்கும் இடத்தைச் சுட்டிக் காட்டினேன். பழைய கட்டபொம்மன் கோட்டை இருந்த இடத்தை அகழ்வாராய்ச்சி மூலம் வெளிப்படுத்தியிருக்கும் நமது தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் பணிகளைச் சுருக்கமாக விவரித்தேன்.

விழா நடைபெறும் இடத்துக்கு சென்றேன். முன்னால் செல்லலாம் என்று பெரியவரை அழைத்தேன்.

''தம்பி, முன்பே சொன்னேனே! மக்களுடன் ஒன்றிக் கலந்து அமருவோம். அப்பொழுதுதான் அவர்களின் உணர்ச்சியோடு நம்முடைய மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்ளமுடியும்.''

பெரியவர் சொல்லியபடியே மக்கள் கூட்டத்தில் கலந்துவிட்டோம்.

விழா தொடங்கியது.

— . . .

**வி**ழா நிகழ்ச்சிகளுக்கு இடையிடையே நேரம் கிடைத்த பொழுது எல்லாம் நானும் பெரியவரும் பேசிக் கொண்டிருந்தோம். அவற்றில் சில—

பெரியவர் சொன்னார்: ''தம்பி நான்தான் தவறாகக் கருதிவிட்டேன். வெள்ளையர்கள் கண்ணோட்டத்திலேயே நம்மவர் இருந்துவிட்டார்கள் என்று''.

''தவறான எண்ணம் ஐயா, வீரபாண்டிய கட்டபொம்மனின் வரலாற்றைப் பற்றி முதல் புத்தகம் ரெவரண்ட் க்ரீன்ஸ் எழுதிய பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர் பற்றிய சில குறிப்புகள்'' என்ற நூலாகும். கால்டுவெல் பாதிரியார் எழுதிய நெல்லை மாவட்ட அரசியல் பொது வரலாறு. ஏ. ஜேஸ்டூவர்ட் என்பவர் இயற்றிய திருநெல்வேலி மாவட்ட நிகழ்ச்சித் தொகுப்பு. எச்.ஆர். பேட் என்பவர் முதல் உலகப் பெரும் போருக்குப் பின் எழுதிய ''திருநெல்வேலி கெஜட்டியர்'' முதலியவை முழுக்க முழுக்க வரலாற்று உண்மைகளை வெள்ளையர் கண்ணோட்டத்தோடு மறைத்ததை நாங்கள் உணராமலில்லை. சென்னை மாகாணத்து உள்துறைச் செயலாளராக இருந்த இ.யு. தாமோதர், ஐ.ஏ.எஸ் அவர்கள் இதை மிகத் தெளிவாக விளக்கித் கட்டுரைகள் வரைந்துள்ளார். பானர்மேன், மேஜர் ஜேம்ஸ் வெல்ஷ் எழுதிய குறிப்புகளைப் படித்தால் வீரபாண்டியனின் வீரமும் நேர்மையும் விளங்கும். ஜெகவீர பாண்டியனார் எழுதிய புத்தகங்கள், சிலம்புச் செல்வர் எழுதிய புத்தகங்களைப் படித்தால் உங்களுக்குப் புரியும் ...''

பெரியவர் ''ஓகோ'' என்று சிரித்தார். எனக்கும் அப்பொழுது தான் விளங்குமா என்று நகைத்துக்கொண்டே கேட்டார். பெரியவரின் பேச்சு எனக்குப் புரியவில்லை.

எங்கள் பேச்சு சுற்றியிருந்தவர்களுக்கு இடையூறு விளைவித்ததால் விழா நிகழ்ச்சிகளைக் கவனித்தோம்.

* * *

**ச**ட்டப் பேரவை உறுப்பினர் க. சுப்பு வரவேற்பு உரை நிகழ்த்தினார். அவர் உரையில் கமழ்ந்த வீர உணர்வுகள் அவர் கட்டபொம்மன் பரம்பரையில் வந்தவர் என்பதை வெளிப்படுத்தின.

விழாவுக்குத் தலைமையேற்று இருந்த கல்வி சுற்றுலாத் துறையமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பழைய வரலாற்று செய்திகளைப் படம் பிடித்துக் காட்டினார்.

சட்டப் பேரவை உறுப்பினர்கள் திருவாளர்கள் மணலி கந்தசாமி, கதிரவன், முத்தையா, ஆகியோரும் ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் சென்னப்ப ரெட்டியாரும் நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ். சிவசாமி அவர்களும், வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்களும் பொதுப் பணித்துறைஅமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்களும் உரை நிகழ்த்தினார்கள்.

## கட்டபொம்மனின் நினைவுக் கோட்டை

பாஞ்சாலங்குறிச்சியில் கட்டப்பட்டுள்ள கட்டபொம்மன் நினைவுக்கோட்டையைச் சுற்றியுள்ள இடங்களைச் சேர்த்து மதில் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. மதில் சுவரின் நீளம் மட்டும் 2,000 அடியாகும். கோட்டை அமைந்துள்ள இடத்தின் மொத்தப் பரப்பளவு 14½ ஏக்கராகும்.

கட்டபொம்மனின் பழைய கோட்டை இருந்த இடம் அகழ்வராய்ச்சி மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள பகுதியும் ஜக்கம்மாள் ஆலயமும் புதிய கோட்டையின் உட்பகுதியில் தான் உள்ளன.

அமைக்கப்பட்டுள்ளநினைவுக் கோட்டை இரண்டு அடுக்கு மாளிகையாக உள்ளது. கோட்டையின்மேல் கோபுரம் உயரம் 34 அடி.

கோட்டையின் உட்புறத்தில் நடுநாயகமாக கட்டபொம்மனின் நாளோலாககம் (கொலு மண்டபம்) அமைந்துள்ளது. கொலு மண்டபத்தில் பத்து அடி நீளம் பத்து அடி அகலமுள்ள அரியணை மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. அரியணையில் அமர்ந்திருக்கும் கட்டபொம்மன் சிலையின் உயரம் 7 அடி.

கொலு மண்டபத்தின் தூண்களில் ஊமைத்துரை, தானாபதிப்பிள்ளை, வெள்ளையத்தேவன், சுந்தரலிங்கம் ஆகியோரின் சுவர்ச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வீரபாண்டிய கட்டபொம்மனின் வழித் தோன்றல்களாக வாழும் மக்களுக்கு நிலப்பட்டா,

மனைப்பட்டா ஆகியவற்றை முதல்வர் கலைஞர் அவர்கள் வழங்கினார்கள்.

அதன் பிறகு சட்ட மன்ற மேலவைத் துணைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம.பொ. சிவ ஞானம் அவர்கள், சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

அந்த உரை வீரபாண்டிய கட்ட பொம்மன் காலத்துக்கு நம்மை இழுத்துச் சென்றது.

அதில் அடங்கிய வரலாற்றுச் செய்திகள்தான் எத்தனை எத்தனை!

நாற்பத்தேழு தலைமுறையாகத் தமிழ் நாட்டில் வாழ்ந்தவன் தமிழனாக—தமிழ் மக்களில் ஒருவனாகத் திகழ்ந்த காட்சிகளைச் செவ்வையாக அடுக்கியபோது—கேட்கும் உள்ளங்கள், அனைத்தும் உணர்ச்சிப் பெருக்கில் மூழ்கின.

லெப்டினண்ட் கர்னல் அக்னியூ என்பானுக்குக் கீழ் காப்டனாகப் பணியாற்றிய மேஜர் வெல்ஷ் எழுதிய நினைவுக் குறிப்புகளை எடுத்துரைத்தார்.

கட்டபொம்மனின் வீர வரலாற்றைப் பட்டி தொட்டி எங்கும் அறிமுகப்படுத்திய பெருமைக்கு உரிய சிலம்புச் செல்வர் அவர்கள் தன்னுடைய ஆசைகள் நிறைவேறுவதை—அதுவும் கட்ட பொம்மன் மறைந்து 175 ஆண்டுகளுக்குப் பின்னர் கட்டபொம்மன் நினைவுக் கோட்டை புத்துயிர் பெற்றுத் தோன்றுவதையும் எண்ணி மகிழ்ந்த அவர் உணர்ச்சிப் பெருக்குடன் விவரித்த காட்சிகள் ஒன்றா? இரண்டா?

சிலம்புச் செல்வர் ம. பொ. சி. ஆற்றிய உரையின் மூலம் அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்த வீரத்தை—நாட்டுப் பற்றை—தியாகத்தின் மாண்பை—பகைவனுக்கும் அருளும் பண்பை—வள்ளண்மையை மிக அழகாக விளக்கினார்.

பெரியவரின் கண்கள் கண்ணீரை வடித்தன.

உணர்ச்சிப் பெருக்குக்கு ஆளாகியிருந்த நானும் 'ஐயா' என்று அழைத்தேன்.

''தம்பி! நான் பேறு பெற்றவன்''—என்று உணர்ச்சி மல்கக் கூறினார்.

எனக்கு என்னவோ அவர் நிமிடத்துக்கு நிமிடம் புரியாத புதிராகத் தோன்றுவது போல் தெரிந்தது. அதற்குள் விழா மேடையில் முதல்வர் கலைஞர் அவர்கள் உரை நிகழ்த்தத் தொடங்கி விட்டார்.

கட்டபொம்மனுக்கு நினைவுக் கோட்டை எடுத்த முழுப் பெருமைக்குரிய அவரின் உரை பழைய வரலாற்றுக் காட்சிகளை விவரித்தது. அந்த உரையில்தான் எத்தனை எத்தனை செய்திகள்! எத்தனை எத்தனை விளக்கங்கள்!

முதல்வர், பாரி விழாவிலே எடுத்துரைத்த ஒரு செய்தியை மீண்டும் கூறுகிறார்:


''பறம்பு மலையை ஆண்ட பாரி மன்னன், வாரி வழங்கிய வள்ளல்—முல்லைக்குத் தேர் கொடுத்தவன். அவனைச் சேர, சோழ, பாண்டியன் என்ற மூன்று சிற்றரசர்கள் போருக்கு அழைத்தார்கள். அவன் கோட்டையை முற்றுகையிட்டார்கள். பாரியின் நண்பனான புலவர் கபிலர் அந்த மூன்று அரசர்களிடமும் சென்று, ''நீங்கள் பாரியை எதிர்த்துப் போர் புரிய வேண்டாம். அவனிடம் நாட்டைக் கேட்டாலேயே கொடையாகக் கொடுத்து விடுவான் என்கிறார். ஆனால் அந்த மன்னர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. போரிட்டுப் பாரியைக் கொன்று விடுகிறார்கள். பாரி இறந்துவிடுகிறான்.

''இங்கே இலக்கியம் படித்த பெரியோர்கள், சான்றோர்கள், மாணவ நண்பர்கள் எல்லாரும் இருப்பார்கள். அவர்களைக் கேட்கின்றேன் இறந்துவிட்ட பாரியின் பெயர் நமக்குத் தெரிகிறது. பாரிக்கு விழா எடுக்கின்றோம். ஆனால் பாரியை எதிர்த்த மன்னர்கள் யார்? அவர்கள் பெயர் என்ன? யாருக்காவது தெரியுமா?

அது போன்று கட்டபொம்மனின் வெற்றி விழாவை நாம் இங்குக் கொண்டாடவில்லை. தூக்குக் கயிற்றை முத்தமிட்ட வீரனுக்கே விழா எடுக்கின்றோம். அழிந்துபட்ட கோட்டைக்கே நினைவுக் கோட்டை எடுத்துள்ளோம்!

''நல்லவர்கள் வாழ்ந்தாலும் அழிந்தாலும் மக்கள் நெஞ்சத்தில் நீங்காது வாழ்வார்கள்''.

முதல்வரின் உரையைக் கேட்ட பெரியவர் சொன்னார். 'ஆமாம், நீங்கள் நிச்சயம் வாழ்வீர்கள்! மாண்ட பெருமைகளை மீண்டும் உயிர்ப்பிக்கும் நீங்கள் என்றும் வாழ்வீர்கள்!''



# புதைந்த புகழ் வெளிக்கொணர்வார்!



*வான்பொழிந்து பூவிளையும் மாநிலத்தை முடிபுனையும்
மன்னனுக்கோ கிஸ்தி! என்மனம்கொதித்து கனன்றெழுந்து
இந்தியத்திருத்தாயின் ஈடிலா அடியைச்சூழ்ந்த
அந்நியத்தளையை வீழ்த்தும் முதல்முரசறையும் ஆற்றல்
செந்தமிழ் மகனதே என்று சீருடன் எடுத்துக்காட்டி
விடுதலை வேள்வித்தீயில் தன்னுடை ஆவிவேட்ட
வீரம்சால் மறவர் வேந்து பாண்டியக் கட்டப்பொம்மு
உடன்நின்று உயர்வுகாத்த தம்பியாம் ஊமைத்துரை
இருவரும் வீரம்பெய்த ஈடிலாப்பெரிய கோட்டை
மண்ணோடு மண்ணாகி மேடிட்டுப் புதர் மண்டி
அப்படியும் ஒருகோட்டை இந்நாட்டில் இருந்ததுண்டோ!
என்றவகை இடிந்துபோய் மறைந்தும் போக
புதைந்திருக்கும் புகழை எல்லாம் வெளிக்கொணர்வதெந்தம் பணி
ஏற்றிடுவோம் ஏட்டிலினை வீரனது வரலாற்றை
அதுவே எம்தலையாய கடன் என்னும் சபதம் ஏற்று
அரண்மனையின் பகுதிகளை அகழ்வாய்வில் வெளிப்படுத்தி
கண்ணிமைக்கும் நேரமதில் கோட்டைதனை அமைத்துத்தந்து
மாண்டபுகழ் மன்னவனின் நினைவாகச் சின்னம் செய்தார்
வழித்தோன்றல் அனைவருமே வளம்பெற மான்யந்தந்தார்
பூதலம் போற்றும் வண்ணம் பூம்புகார் படைத்த
தமிழக அரசின் முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி என்
ஆனந்த ஆண்டு ஆவணித் திங்கள் 2-ஆம் நாள்.*

*18.8.1974*

[கட்டபொம்மன் நினைவுக் கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள கல்வெட்டு]

## கட்டபொம்மனின் பழைய கோட்டை

வீரபாண்டிய கட்டபொம்மனின் பாஞ்சைக் கோட்டை 500 அடி நீளம்—300 அடி அகலம் உடையது. அது களிமண்ணால் கட்டப்பட்டது. வடபுலத்தில் பிரபலமான பரதபுரத்துக்கோட்டையைப்போன்றது என்று வரலாற்று ஆசிரியர் சிலர் குறிப்பிட்டுள்ளனர்.

மதில் சுவரின், அடிப்பாகம் 15 அடி அகலமுள்ளது. மேலே போகப்போகக் குறுகி உயரே அதன் அகலம் மூன்றடி. கோட்டையின் வெளிப்புறச் சுவர் செங்குத்தாக அமைந்திருக்கும். வெளிப்புறமிருந்து எதிரிகள் ஏற முடியாது. ஆனால் உட்புறச்சுவர் சரிவாக அமைந்திருக்கும். உள்ளிருப்போர் கோட்டையின்மீது ஏறிட வசதியாகவும் அமைந்துள்ளது. உயரம் சுமார் 12 அடி. சுவர் இரட்டைச் சுவர். சுவரின் இடையில் கம்பு, உமி, வரகு, வைக்கோல், பஞ்சு ஆகியவைகள் போட்டு அடைக்கப்பட்டுள்ளன. எனவே சுவரை எளிதில் தகர்க்க இயலாது. கோட்டையின் நான்கு மூலைகளிலும் கொத்தளங்கள்—நடுவில் அலகுகள். இடையிடையே சிறு சிறு கொத்தளங்கள் அவற்றைச் சுற்றிச் சிறிய மதில்கள் ; அவைகளுக்குப் படிக்கட்டுகள் போன்றவை அனைத்தும் இருந்தன. உள்ளே இருப்போர் வெளியே பார்க்கவும் போர்க்காலங்களில் வில், வேல் மற்றும் துப்பாக்கி கொண்டு தாக்கவும் வசதியானவை; சுவரின் உச்சியிலே வீரர்கள் நடமாடப் பாதை உண்டு, கைப்பிடிச் சுவரும் உண்டு.

கோட்டையின் வெளிப்புறம் அழகான தோற்றத்தைக் கொண்டிருக்கவில்லை. அது வனப்பில்லாமல் இருந்ததால் வலுவற்ற கோட்டை என்று எண்ணி ஏமாந்தனர் ஆங்கிலேயர்.

கோட்டையைச் சுற்றிலும் இலந்தை முள்வேலி அகழி போன்று அமையப் பெற்றது.



பெரியவர் குரல் உரக்கவே ஒலித்தது. அங்கிருந்த எல்லா மக்களின் இதயங்களிலிருந்தும் ஒலித்துக் கொண்டிருக்கும் வார்த்தைகளும் இவைதாம் என்பதை விழா முடிந்ததும் எழுந்த ஆரவாரமே நிரூபித்தது.


* * *

விழா முடிந்ததும் வாணவேடிக்கை நடைபெற்றது. அந்த வர்ண ஜாலங்கள் கண்ணைப் பறித்தன.

அதனைக் கண்களை மூடியவண்ணம் பார்த்தார் பெரியவர்.

''ஐயா, தாங்கள் புரியாத புதிராகவே இருக்கிறீர்கள், கண்ணை மூடிக்கொண்டு வாணவேடிக்கைகளைப் பார்க்கிறீர்களே!''

''தம்பி, பார்க்கவேண்டியவைகளைப் பார்த்து விட்டேன். கேட்கவேண்டியவைகளை கேட்டுவிட்டேன். 175 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகம் புது வாழ்வு பெற்று வருவதைப் பார்த்துவிட்டேன். என் வரலாறு தெரிந்தும் உணர்வற்று இருந்த நீங்கள் இன்று புதிய பொற்காலத்தை உருவாக்கி வருகிறீர்கள். இப்பெரும் பணியின் பெருமையைக் காணவே நேரில் வந்தேன். கண்டேன்! கேட்டேன்! உணர்ந்தேன்! அதனை நான் ஓராயிரம்



முறை சொல்வேன்! மாண்ட பெருமையை மீண்டும் கொணரும் திறனுடையார், செயல்மிக்கார் தமிழகத்தை ஆளுகிறார்கள்! அவர்களால் புதிய பொற்காலம் உருவாகியே தீரும்!''

உணர்ச்சி வயப்பட்டு பெரியவர் மொழிந்ததைக் கேட்டுக் கொண்டிருந்த நான் ''ஐயா, நீங்கள் . . .''

''தம்பி! நான் இன்னும் சொல்லவில்லையே! நான்தான் வீரபாண்டி கட்டபொம்மன்''.

வியப்போடு மீண்டும் பெரியவரை நோக்கினேன்! என்னையறியாமலேயே ஓர் அச்சம்! மரியாதை! எனது மன நிலையை விவரிக்க முடியவில்லை.

அது மகிழ்ச்சியா? திகைப்பா?

**பா**ஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் நினைவுக் கோட்டைத் திறப்பு விழா நிகழ்ச்சிகளைப் பற்றியும் அதன் சிறப்புகளைப் பற்றியும் நண்பர்களிடம் பேசிக் கொண்டவாறு உறங்கிவிட்ட என்னைப் பலகணி வழியாகப்பட்ட காலைக் கதிரவனின் ஒளிக்கதிர்கள் எழுப்பின.

அந்த ஒளிக்கற்றை—

புதிய வெள்ளமாக எங்கும் பாய்ந்து கொண்டிருந்தது!

—மாமூலன்


ESTD: 213-52. **தபால் மூலம்** GOVT REGD: 3072

# இலவசக் கல்விபோதனை

'G' குரூப் வகுப்புகள் ஆரம்பம் : 10-10-1974

ஆண்—பெண் இருபாலரும் 1974-75ம் வருட சர்க்கார்-பல்கலைகழக [illegible] தேர்ச்சி பெற உத்திரவாதத்துடன் மாதம் இருமுறை தபால் மூலம் பாடங்கள் அனுப்பி பயிற்சி அளிக்கப்படும்.

1. S. V. B.A., B. Com., B. Sc.,– March 1975 (P.U.C./இண்டர் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்.) 2. B.L., M.A., M.Com., A.M.I.B.M. (பட்டதாரிகள் அருகதையுடையவர்கள்.) 3. ஆக்ரா–டில்லி–கர்நாடக் B.A., B.Com., B.Sc., (S. S. L. C. (அ). S. S. C. ஆ). மெட்ரிக் தேறியவர்கள் கலந்து கொள்ளலாம்) 4. போபால்-ஆந்திரா-கர்னடக்-டெல்லி இண்டர் (S.S.L.C./S.S.C. மெட்ரிக் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்). 5. A.C.B.I.( London) S.S.L.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள். 6. Account Text Exmns. (I.M.C. S.S.L.C./S.S.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்) 7. டெலிபோன் ஆப்ரேட்டர் - டெலிகிராபிக் ஒயர்லெஸ். 8. சென்னை-மதுரை-திருப்பதி மெட்ரிகுலேஷன். 9. சென்னை-மதுரை P..U. C. 10. தமிழ் வித்துவான்–புலவர் தேர்வுகள். 11. விவசாயம் 12. போஸ்ட்மென் 13. போஸ்டல் கிளார்க். 14. கைத்தறி நெசவு. 15. அக்கவுண்டன்ஸி. 16. கிராம மணியம்–கர்ணம். 17. சர்வீஸ் கமிஷன் (தமிழ் அண்ட் ஆங்கிலம் அக்–74) 18. S.S.L.C. (8 ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.) 19. Com INTER, D.Com., B.Com., B.Com (Hons) M.Com., S.S.L.C. அல்லது P.U.C. தேறியவர்களும்–தவறியவர்களும் 75–பிப்ரவரி தேர்வில் கலந்து கொள்ளலாம்) 20. பேசிக் ஆங்கிலம். 21. பிரி–மெட்ரிக். 22. ஹோமியோபதி. 23. காம்பாஸிடர். 24. டெல்லி ஹையர் செகண்டரி தேர்வு (X, XI) படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.)

முழு விவரங்களுக்கு 25 பைசா தபால் தலையுடன் விண்ணப்பித்து நீங்கள் விரும்பும் வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெற உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

தமிழகத்தின் தனிப்பெரும் தபால்கல்வி ஸ்தாபனம்

Affiliated by I. A. & A. I. S. Educations & Com. University, New Delhi.

## ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்

ரிஷிவந்தியம் S. O:, தென்னாற்காடு மாவட்டம்.— தமிழ்நாடு.

கிளைகள்: சிலோன், மலேசியா, தெ. ஆப்பிரிக்கா, மாரிஷஸ் அண்ட் இந்தோனேஷியா.



பட்டதுதான் பரனூர் தொழு நோய் இரவலர் மறுவாழ்வு இல்லமும்.

இந்த இல்லத்தில் 220 ஆண்களும், 118 பெண்களும், 59 சிறுவர்களும் உள்ளனர்.

வாழ்க்கையின் சுவையறியாது, அன்றாடம் செத்துப் பிழைத்துக் கொண்டிருந்த இவர்களது வாழ்வு இன்று நிச்சயமானதால், ஒளி மயமானதாய் அமைக்கப்பட்டுள்ளது. இதனைப் பெருமையோடு நாம் குறிப்பிட வேண்டும்.

இவ்வில்லத்தில் உள்ளவர்களின் நோயைக் குணப்படுத்துவ

# தொழுநோயாளிகளுக்குத் தொழிற்பயிற்சி அளிக்க இந்தியாவில் முதல் தொழிற்சாலை!

"தொழுநோய்க்கு நிரந்தரமான பரிகாரம் காணும் விதத்தில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வளிக்கும் தமிழக அரசின் தலைசிறந்த திட்டம் பாராட்டுக்குரியது.''

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், பரனூரிலுள்ள பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தைச் சுற்றிப் பார்வையிட்டு இவ்வாறு கூறினார். அவர் முதல்வர் கலைஞர் தலைமையில் இயந்திரத் தொழிற்சாலையையும் திறந்து வைத்தார்.

பரனூர் தொழு நோய் இரவலர் மறுவாழ்வு இல்லத்திற்கு செப்டம்பர் திங்கள் 10-ஆம் நாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் வருகை தந்தார்.

முதல்வர் கலைஞர், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம், சமூக நலத் துறை அமைச்சர் திரு. சி. வி. எம். அண்ணாமலை ஆகியோர் பிரதமரை வரவேற்று, இரவலர் மறுவாழ்வு இல்லத்தைச் சுற்றிக் காண்பித்தனர்.

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்றபேரறிஞர் அண்ணா அவர்களின் கனவை நனவாக்கும் வகையில், முதல்வர் கலைஞர் அவர்கள் தமது பிறந்த நாள் பரிசாகத் தமிழகம் முழுதுமுள்ள இரவலர்களுக்கு மறுவாழ்வு அளித்திடும் உயரிய திட்டத்தினை வழங்கி, தமது பிறந்த நாள் அன்பளிப்பாக வழங்கப்பட்ட தொகையினை அத்திட்டத்திற்காக அளித்தார்கள்.

தமிழகத்தில் தொழுநோயினர் மறுவாழ்வு இல்லங்கள் 10 இடங்களில் தோற்றுவிக்கப்பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

அவ்வகையில் தோற்றுவிக்கப்பட்டுடன், அவர்களுக்கு வேலையும் கொடுக்கப்பட்டு நேர்மையான வாழ்வுக்கும் வழி செய்யப்பட்டுள்ளது.

பரனூரில் அமைந்துள்ள இந்த இல்லத்தில் தொழுநோய் இரவலர்களுக்கென்று சுமார் ரூ. 8 இலட்சம் செலவில் இயந்திரத் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தொழுநோயினருக்கென இந்தியாவிலேயே முதன் முதலாகத் தொடங்கப்பட்டுள்ள தொழிற்சாலை இதுதான்!

இந்தத் தொழிற்சாலையில் தற்போது கிடைப்பதற்கு அரிதாக உள்ள தட்டெழுத்துக் கருவிகளுக்கும், மோட்டார் வாகனங்களுக்கும் தேவைப்படும் பல முக்கியமான பாகங்கள் தயார் செய்யப்படும். தொழுநோயிலிருந்து சிகிச்சை பெற்று வேலை செய்ய முடிந்த இளைஞர்கள்

இந்தத் தொழிற்சாலையில் வேலை செய்யும் பாங்கினைப் பெறுவார் கள்.

மேலும் இந்தத் தொழிற்சாலை யில் மேசை, நாற்காலி, பீரோ போன்ற எஃகுச் சாமான்களும், மூன்று சக்கர வண்டிகளுக்கான இரும்பு வேலைப்பாடுகளும் செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலை தமிழக அரசால், ஸ்வீடன் செஞ்சிலுவைச் சங்கத்தின் தொழில் நுட்ப உதவி யுடன் கட்டப்பட்டது.

திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.


''தொழு நோய்க்கு நிரந்தர மான பரிகாரம் காணக்கூடிய நிலைமைக்கு நாம் வந்துள்ளோம். இதிலே முக்கியம் என்னவென்ருல் பாதிக்கப்பட்டவர்கள் நோய் தொடங்குவதற்கான அறிகுறி தெரிந்தவுடன் மருத்துவர்களை அணுக வேண்டும். இந்த நோய்

''அதிலும் காந்தி பிறந்த நாளில் இந்தப் பரனூர் திட்டம் தொடங்கப்பட்டது மிகவும் வரவேற்கத் தக்கதாகும்.

''இந்தச் சிறந்த பணியிலே ஸ்வீடன் நாட்டினர் ஒத்துழைப்பு நல்கியுள்ளது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கக் கூடியதாக இருக்கிறது. இது போன்ற பல நல்ல பணியிலே மற்ற நாடுகளும் எவ்வாறு ஒத்துழைக்க முடியும், ஒத்துழைக்க வேண்டும் என்ப தற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.




தலைமையமைச்சர் அவர்களை முதல்வர் கலைஞர் அவர்கள் வரவேற்கிருர்.



இதனை முதல்வர் கலைஞர் அவர் கள் தலைமையில், பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் திறந்து வைத்தார்.

தொழுநோய் இரவலர்களுக்குப் புத்தாடைகள் வழங்கிப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தமிழக அரசின் இந்த நல்ல முயற்சியைப் பாராட்டினுர்.

பரனூர் தொழுநோய் இரவ லர் மறுவாழ்வு இல்லத்தில் நிறுவப்பட்டுள்ள இயந்திரத் தொழிற்சாலையைத் திறந்து வைத்துப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் ஆற்றிய உரை விவரமாவது :—

''இந்தப் பயங்கரமான நோயால் பாதிக்கப்பட்டவர் களுக்குப் புது வாழ்வளிப்பது எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்து, அந்த அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள இந்த இல் லத்தில் உள்ள தொழிற்சாலையைத்

இருப்பதை வெளியே சொல்ல வெட்கப்பட்டு சொல்லாமல் இந்த நோய் முற்றிவிடுகிற கார ணத்தால், குணப்படுத்த முடியா மல் போய்விடுகிறது.


''தமிழக அரசு இந்தச் சிறந்த திட்டத்தைத் தொடங்கியுள்ளது மிகவும் பாராட்டத் தக்க ஒரு முயற்சியாகும்.

''இந்த விடுதியிலே வாழ்பவர் களுக்கும்—இந்தப் பணியிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கும் என் நல்வாழ்த்துக்கள்! மிக விரைவில் இந்தத் தொழுநோயைஅடியோடு அகற்றி விட்டோம் என்ற நிலை மையை நாம் எய்துவோமாக!''

விழாவிற்குத் தலைமையேற்ற முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை விவரமாவது :

# காதி கிராப்ட்

அளிக்கிறது சுவையும், வெண்மையும்.




ஆடைகள் பளிச்சிட கோபுரம் மார்க் சோப்.

ஆரோக்யம் தரும் சுத்தமான தேன், கதர்த்துணி, பட்டுப்புடவைகள், ரெடிமேட் ஆடைகள், சுத்தமான எண்ணெய், கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள், பொம்மைகள், பனை வெல்லப் பொருள் மற்றும் தரமேன்மையான பற்பல பொருட்களையும் வாங்கலாம்.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களில் 200க்கும் மேலான காதி கிராப்ட்கள் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்றன.

| தொலைபேசி சென்னை | திருச்சி | கோவை |
|---|---|---|
| 29684<br>81954 | 3814 | 35051 |





''கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பு தமிழக அரசு மேற்கொண்ட திட்டத்தின் அடிப்படையில் தமிழ் நாட்டில் இது போன்ற தொழு நோய் இரவலர் இல்லங்கள் பத்து இடங்களில் அமைக்கப்பட்டு, ஏறத்தாழ நான்காயிரம் தொழு நோய் இரவலர்கள் தங்களுடைய வாழ்க்கையை மாற்றிக் கொண்டு தொழில் வளர்ச்சி பெறுகிற வகையிலும், தொழு நோய்ச் சிகிச்சை பெறுகிற வகையிலும் இந்த இல்லத்தைப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள்.

''அடித்தளத்தில் இருக்கிற மக்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள், சமுதாயத்திலே ஒரு அங்கம் என்று சொல்லத்தக்க வகையிலே உள்ள ஊனமுற்றோர்— இப்படிப்பட்டவர்களுடைய மறுவாழ்விற்காக அரசு தன்னால் இயன்ற எல்லாப் பணிகளையும் மேற்கொள்ளவேண்டியிருக்கிறது.

''அந்த வகையில் ஆரம்பிக்கப்பட்ட பத்து இல்லங்களில் முதன் முதலாகத் தொடங்கப்பட்ட இந்தப் பரனூர் இல்லத்திற்கு வருகை தந்துள்ள இந்தியத் தலைமை அமைச்சரை, இந்த இல்லத்திலே வாழ்கிற 300-க்கு மேற்பட்ட தாய்மார்கள், பெரியவர்கள், நண்பர்கள் அத்தனை பேர் சார்பாக, வருக, வருக என்று வரவேற்கிறேன்.

''ஸ்வீடன் நாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்தினரும், நம்முடைய அரசும் சேர்ந்து இங்கே நிறுவியிருக்கிற இயந்திரத் தொழிற்சாலையை அவர்கள் திறந்து வைத்திருக்கிறார்கள். சுமார் எட்டு இலட்ச ரூபாய் செலவில் அந்தத் தொழிற்சாலை தொடங்கப்பட்டிருக்கிறது. தொழு நோய் கொண்டவர்களுக்கு இப்படிப்பட்ட பயிற்சி அளிப்பதற்கு இந்தியாவிலேயே முதன் முதலாகத் தொடங்கப்படுகிற தொழிற்சாலை இதுதான்!''




தொழிற்சாலையைத் தலைமை அமைச்சரும், முதல்வரும் பார்வையிடுகின்றனர்.

புத்தொளி பெற்றவர்க்குப் புத்தாடை வழங்குகிறார் தலைமையமைச்சர்.



# காணி நிலம் வேண்டும்

**—பூவை எஸ். ஆறுமுகம்—**

## 18. வாழும் சொந்தங்கள் வாழும்!

**வா**ழ்க்கை சுவை மிக்க நவீனமாக அமைந்திட வேண்டுமென்றுதான், கன்னி அன்னக்கொடி கனவு பின்னிக் கொண்டு காலத்தோடு காலமாக விளையாடிக் கொண்டிருந்தாள்!

ஆனால்... ?

'நினைப்பது மாத்திரம் வாழ்க்கை அல்ல; நினைப்பதை மறப்பதும், அல்லது மறைப்பதும் கூட வாழ்க்கைதான்!' என்கின்ற நிதர்சனத் தத்துவத்தைச் சொல்லிக்காட்டுவது மாதிரி, அவள் கடந்த சில நாட்களிலே எத்தகைய எதிர்பாராத சம்பவங்களையெல்லாம் எதிர்கொள்ள நேரிட்டு விட்.டது!

முந்திய நாள் இரவு நடந்த நிகழ்ச்சியை மீண்டும் மனத் திரையில் உலவவிட்டாள்.

வெள்ளைக் காளையை யாரோ திருட்டுத்தனமாகப் பிடித்துக் கொண்டு ஓடும் சேதியை பண்ணைக்காரன் பரமசிவம் மூலம் கேள்விப்பட்டாளோ, இல்லையோ, அக்கணமே கிறுக்குப் பிடித்த பாவனையில் வெள்ளைக் காளையைத் தேடி ஓட்டம் எடுத்தாள் அன்னக்கொடி. 'தங்கச்சியோ!' என்று அலட்டியவாறு ஓடிவந்த பரமசிவம், அவள் ஓடின காளவாய் ஒற்றையடிப் பாதையிலே மறுகாமல், வேப்பந் தூரடியிலே மடங்கி விட, இவ்விவரம் அறியாத அபலைக் கன்னி தன் போக்கில் வெள்ளையின் கழுத்து மணிச் சத்தத்தைக் குறி வைத்து ஓடினாள். காளையின் பின்னணியில் ஊசலாடிய மானப் பிரச்சினையில்தான் அவள் உள்ளம் ஊசலாடியது.

தாராடிப் பொட்டல் காடு வந்தது.

பேயிருட்டில், மணிச் சத்தம் நின்றது!

அக்கணம்தான் அன்னம் தன்னையும் தன் நிலையையும் உணரலானாள். 'ஐயோ! என் அன்பு மச்சான் வீரமணிக்குச் சொந்தம் கொண்ட—பந்தம் கொண்ட—அன்புப் பிச்சை யாச்சே நான்? அந்நியன் யாராச்சும் வந்து என்னைச் சாடிப் பிடிச்சு. . .ஐயையோ! ஆத்தாளே!' விம்மினாள்.

விடியாத இரவாகப் போகிறதா இந்தப் பாழ் இரவு?

அப்போது:

பூங்கரத்தைப் பூ நாகம் கவ்விப் பிடிப்பது போலே, ஓர் உணர்வு—தொட்டுணர்வு கிளர்ந்தெழுந்தது. 'கன்னி கழியாப் பொண்ணான என் கையை எந்தப் பாவி பிடிச்சு இழுக்கிறதாம்?'—அவள் பத்திரகாளியானாள். கண்களைத் தீட்டிக் கொண்டு ஏறிட்டுத் திரும்பினாள்.

கைகளை உதறி விடுவித்துக் கொள்ள முயன்றாள். முடியவில்லை. கைகளைப் பற்றி இழுத்த 'பேடி'யை இனம் காண வேண்டி, பார்வையைத் தீட்சண்யமாகத் தீட்டிக் கொண்டாள். இருட்டில் இருட்டைத்தான் சந்தித்தாள். ஆனால், யாரையும் இனம் கண்டு கொள்ளக்கூடவில்லை. ''ஏலே, யார் நீ? சமைஞ்ச பெண்ணோட கையை பேடிக் கணக்கிலே கள்ளத்தனமாய்த் தொட்டிழுக்கத் துணிஞ்ச புறக்குடி யார் நீ? நீ மெய்யான ஆண் பிள்ளையாய் இருந்தால், வெளிச்சத்துக்கு வா. ஒண்டிக்கு ஒண்டி மல்லுப் பிடிக்கலாம்! ஊம் . . வாடா! '' என்று முழங்கினாள்.

ஆனால், அந்த உடும்புப் பிடி இன்னமும் விலகின பாடில்லையே!

அன்னம் தமிழச்சியாக மாறி விட்டாள். கைகளை யானைப் பலத்தோடு உதறித் தன்னை விடுவித்துக் கொண்டாள். விடுதலை பெற்ற உத்வேகத்தோடு எதிரில் எதிரியாக நின்ற அந்த ஆளை ஓங்கி அறைந்தாள். அறை குறி தவறவில்லை!

கண்மூடிக் கண் திறக்கும் நாழி அங்கே சுடுகாட்டு அமைதி பரிபாலனம் செய்தது.

ஆனால், அன்னமோ திறந்த கண்ணை மூடவே இல்லை.

அன்னக்கொடி தலைநிமிர்ந்து நின்றாள்.

''ஏய்! ஒரு பொட்டைக் குட்டி கையினாலே—அதிலேயும் கண்ணாலம் கட்டாத ஒரு புத்தம் புதுப் பொண்ணு கையினாலே வசமாய் அறையை ஏந்தி வாங்கிக்கிட்டு, மானம் இல்லாமல்ரோசம் இல்லாமல்—சூடு சுரணையும் இல்லாமல் செல்லத் தேவர் ஊரணித் தொந்திப் பிள்ளையாராட்டம் கல்லாய்ச் சமைஞ்சு வாயடைச்சு நிற்கிறீயே நீ?—உனக்கே உன் போக்கு—உன் நடத்தை வெட்கமாக இல்லையா? சீ! நீயும் ஒரு ஆண் பிள்ளையா?'' என்று திட்டினாள்.

அடுத்த கணம் :

'அன்னம்!'

அழைப்பில் குரல் இருட்டையும் அமைதியையும் வெட்டிப் பிளந்தது.

அழைப்பது, அன்பு அத்

தான் வீரமணி அல்லவா? ஐயையோ! அன்னம் தணலிடைப் பட்ட மெழுகுப் பதுமையாக உருகிக் கரைந்தாள். ''ம..ச்..சானே! என்று விளித்தாள். ஏக்கமும், அச்சமும் அரவணைக்க அழைத்தாள் அவள். ''மச்சான், நீங்கதானா? நீங்கள்தானா? பின்னே ஏன் மூச்சு காட்டாமல் பூடகமாய் மௌனம் சாதிக்கிறீங்க? பேசுங்க, மச்சான்! ஐயோ, வாயைத் திறக்க மாட்டீங்களா? என்னைத் தற்காத்துக்கிடுதறதுக்காக— என்னோட பெண்மையின் கற்பைக் கட்டிக் காப்பாற்றிக்கிடுறதுக்கோசரம் தான் நான் அப்படி அறைஞ்சேன்! நீங்க தான் என் கையை பிடிச்சு இழுத்தீங்க என்கிற துப்பு எனக்கு இந்தப் பாழும் கும்மிருட்டிலே எப்படித் தெரிய ஏலுமுங்க?

''அன்னம்!'' என்றான் வீரமணி.

''அன்னம் தானுங்க, அத்தான் உங்களோட ஆசை அன்னமேதானுங்க, மச்சான்!'

''நீ வேளை கெட்ட இந்த வேளையிலே இந்தக் காட்டுப் பக்கம் ஏன் வந்தே, அன்னம்?''

''நீங்க எதுக்கு இங்கிட்டு வந்தீங்களாம்?''

''நானா?... வந்து.... வந்து....?''


''அதுதான் வந்திட்டீங்களே? விவரத்தைச் சொல்லுங்க. நீங்க ஏன் இங்கே வந்தீங்க?''

''நான் எங்க வீட்டோட மானத்தையும் கவுரவத்தையும் மீட்டுக்கிட வந்தேன்!''...

''ஓகோ! அப்படீங்களா? நானும் எங்க குலக் கவுரவத்தையும் குடும்ப மானத்தையும் மீட்டுக்கிடத்தான் இந்த இருட்டிலே இந்தக் காட்டுக்கு வந்தேனுங்க, மச்சான்!''

''அப்படியா சங்கதி?''

''பின்னே? உங்க வீட்டு வைக்கோலை அறியாமல் தெரியாமல் துளியுண்டு தின்னு தொலைச்ச பழி பாவத்துக்காக வாயில்லாச் சீவனை உங்க அப்பா கொட்டடியிலே கட்டிப் போட்டாங்க இல்லைங்களா? அந்த வெள்ளைக்காளை ராவுக்கு ராவாய் விடுதலையாகி எங்க வீட்டுக்கு ஓடியாந்திச்சு. வந்த காளையை யாரோ முடிச்சு மாறி போகுடி ஆசாமி கொஞ்ச முந்தி பிடிச்சிக்கிட்டு ஓடிட்டான். அந்தப் 'பொம்பளை செட்டி'யைத் துரத்திக்கிட்டு



நான் வந்தேனுக்கும்!''

சிரிப்பொன்று சஞ்சலத்தோடு விம்மிப்புடைத்து வீரிட்டு வெடித்தது!

''மச்சான், ஏன் சிரிக்கிறீங்க?''

''சிரிக்கப்படாதின்னு, அழட்டுமா, அம்மான் பொண்ணே?''

''விளையாடுறீங்களே?''

''நானு விளையாடுறேன்? ஊகூம்! விதி விளையாடுது!''

''ஒண்ணுமே மட்டுப்பட மாட்டேங்குதே, அத்தானே?''

''அன்னம், உங்க வீட்டுக் காளை தன்னாலே விடுதலையாகி உங்க வீட்டை நாடி ஓடி வரல்லே! நானேதான் அதை நேற்று அவிழ்த்து விட்டேன்! ஆனா, இந்தச் சங்கதியைத் தெரிஞ்சுகிட்ட என் அப்பன்காரர் உடனே உண்ணாவிரதம் இருக்க ஆரம்பிச்சுட்டார். நான் அவரோட அனுமதி இல்லாமல் தன்னடைச்ச மூப்பாய் அவிழ்த்து விட்ட உங்க வெள்ளையை நானே திரும்பவும் சிறைப் பிடிச்சுப்பிட வேணும்னு ஆணை இட்டாங்க. அப்பன்காரரோட வம்பும் வீம்பும்தான் ஊரறிஞ்ச தவசலாச்சே? அவரோட சொந்தத் திட்டத்துக்கு விரோதமாய் நான் உன்னையே கட்டிக்கிடப் போறேன்னு அன்றைக்கு வாக்கு கொடுத்திட்ட சடனையை மனசிலே தாங்கிக்க முடியாமல், பட்டினி கிடக்காங்க. பெற்ற அப்பன் பாவம் சும்மா விடுமா? நானேதான் கமுக்கமாய் நலியாமல் ஓடி வந்து உங்க வீட்டு வெள்ளையைக் கடத்தி இழுத்துக்கிட்டு ஓடினேன். ஆமா அன்னம்!''

''மச்சான், இப்ப எங்கே அந்தக் காளை?''

''ஏன்? அங்கிட்டு சவுக்கு மரத்திலே முடிபோட்டுக்கட்டியிருக்கேன் உங்க வீட்டுக் காளையை!''

''அதை எங்கிட்டே ஒப்படைச்சுப்பிடுங்க! ஏன், தெரியுங்களா? நான் என் அப்பாருக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவளாக்கும்!'

''ஊகூம்! முடியாது! என் அப்பாருக்கு நான் பதில் சொல்லியாக வேணும்! நான் உங்க காளையை என் அப்பா கையிலேதான் ஒப்படைப்பேனுக்கும்!''

''மெய்யாலுமா?''

''ஆமா!''

''பார்க்கலாமா?''

''பார்க்கிறதுக்கு இருட்டு தடை போட்டிருக்குதே, அம்மான் செல்லமே!''

''உங்களைப் படிச்சுக்கிட முடியல்லீங்களே, அத்தானே!'

''ப்பூ! .. ம்புட்டுத்தானா? என்னைப் படிச்சுக்கிட திராணி இல்லாத உங்கிட்டேயா என்னை ஒப்படைக்கச் சொல்லுறே?''

''மச்சான்!'' என்று கோபக் கனல் கூட அலறியபடி, காளையைத் தடம் கண்டு தேட ஓடலானாள் அன்னம்.

மறுபடியும் அவள் கையைப் பிடித்து இழுத்து மடக்கினான் வீரமணி. பூங்கரத்தின் தொட்டுணர்வு அவன் இதயத்தின் மனச்சான்றை தொட்டு உணர்த்தியிருக்கலாமோ?

## சித்த மருத்துவத்தின் சிறப்பு

எத்தனையோ வகையான நவீன மருந்துகளால் குணப்படுத்த முடியாத ஆஸ்த்துமா நோயைச் சித்த மருத்துவ முறைப்படி கொடுக்கப்பட்ட ஒரு மூலிகை 12 நாட்களில் முழுக் குணப்படுத்திவிட்டது. தில்லியிலுள்ள இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழகத்தில் சிகிச்சை பெற்று வந்த ஆஸ்த்துமா நோயாளிகள்தான் சித்த மருத்துவத்தின் மூலம் இவ்வாறு முழுக் குணமடைந்துள்ளனர்.

ஆடி மாத மேகப் படுதாவில் மின்னல் ஒன்று வெட்டிக் கீறியது.

வீரமணி திடுக்கிட்டான். ''அன்னம்'' என்று பதறினான். அழுதியா அம்மான் மகளே?'' என்று கேட்டான். அவனுக்கும் விழிகளில் கலக்கம் கண்டது.

''மச்சான், நீங்க அடாவடி அடிக்கிறீங்க!''

அவன் சிரித்தான். பிறகு சொன்னான். ''அன்னம், என் தவிப்பு உனக்குப் புரியாது. பாசம் என்னைப் பூ விலங்காகக் கட்டிப் போட்டிருக்குது இந்த வெள்ளைக் காளை விசயத்தில் மட்டும்! உன் தவிப்பும் எனக்குப் புரியாமல் இல்லேதான்!''

''அப்பாலே எனக்கு வழி?''

''உனக்கு வழி காட்டத்தான் நான் இருக்கேனே, புள்ளே!''

''சள்ளைப்படுத்துறீங்களே, மச்சான்! என் வழி எனக்குப் புரியும்!''

''ஊகூம்; உன் வழி உனக்குப் பிடிபடாது. ஏன், தெரியுமா? இது இருட்டு நேரம். இருட்டிலேயும் இருட்டு, பேய் இருட்டு! மூச்சு விடாமல் நான் சொல்லுறதைக் கேள். உங்க வெள்ளையை உன் கிட்டவே ஒப்படைக்க வேண்டியது என் பொறுப்பு. இப்ப நான் அந்தக் காளையை என் அப்பா கையிலே தான் ஒப்படைப்பேன். பின்னாடி உன் கிட்டே ஒப்படைச்சிட்டுப் போறேன் நான்! என்னை நம்பு. நான் உன்னைக் கண்ணாலம் கட்டிக்கப் போற முறை மச்சானுக்கும்! ஆமா, சொல்லிபிட்டேன்! நம்மோட சொந்தங்களும் பந்தங்களும் ஆத்தா ஆணையாக வாழத்தான் போகுது!...ம்!''

அவள்—அன்னம் சிரிக்கவில்லை.

ஆனால், அவன்—வீரமணி அவளைச் சிரிக்க வைத்துவிட்டான்!

* * *

உலை கொதித்தது.

அன்னக்கொடி பதறிப் பெருமூச்செறிந்தாள்.

வாசலில் சத்தம் கேட்டது.

அப்பா தஞ்சாவூரிலிருந்து அதற்குள் எப்படித் திரும்ப முடியும்? ஊகூம். ஆனால் . . .

வாசலில் 'விதி'யாகக் காட்சியளித்தவள் சிலட்டூர்ச் செல்வமகள் பவளக்கொடி!

## 19. சிலட்டூர்ப் பவளக்கொடி !

அன்னக்கொடிக்கு பவளக்கொடியை மறந்தே போய்விட்டது!

''அன்னம், என்னை உனக்கு நினைப்பு இல்லையா?'' என்று விசாரித்தாள் பவளக்கொடி. எடுப்பான நாசி முனையிலே எடுப்பாகச் சிரித்தது அந்த 'மரு'!

பவளக் கொடியை ஏற இறங்கப் பார்வையிட்டாள் அன்னக்கொடி. எடுத்த எடுப்பில் அவள் பார்வையில் எடுப்பாகப்பட்டது பவளத்தின் காதுச் சிமிக்கிகள் . சிந்திய வைர ஒளிதான். அடுத்தபடியாக அவள் சந்தித்தது பவளத்தின் அந்தப் பார்வையை. அந்தப் பார்வை 'என்னவோ ஒரு மாதிரியாக' இருந்தது. அதில் யதார்த்தமான பாசம்

இல்லே; போலித்தனமானதும் ஊமைத் தனமானதுமான ஒரு செயற்கைத் தன்மையைத் தான் அவள் பார்வையில் அன்னம் காண முடிந்தது. வரவழைத்துக் கொண்ட பூஞ்சிரிப்புடன், ''மூஞ்சி நெஞ்சிலே நிற்குது; ஆனா, உம் பேர்தான் நினைப்பிலே நிற்கல்லே!'' என்று தெரிவித்தாள் சிங்கப்பூர் ராமையாவின் அருமை மகள்.

''நல்லாய் சொன்னே, போ! நான் உன் பேரை முத்திரை குத்தினது கணக்கிலே இம்மாம் காலத்துக்கு யாபகம் வச்சுக் கிட்டிருக்கேன். நீயானால், பழசுபட்டதை அடியோடு மறந்தாப்பிலே எம் பேரையு மில்லே மறந்து போயிருக்கே?

பவளக் கொடியின் செய்கை அன்னத்திற்குச் சிரிப்பை ஊட்டி விட்டது. முத்துச் சுடர் ஒளிர, ஓர்மையோடும் தன்மையோடும் சிரித்தாள் அவள். பிறகு, ''கதைன்னா, அதிசயமாய்த்தான் இருக்கும்; இருக்கவும் வேணும். கதையின்னா, அதுதானே அருத்தம்? பர்க்கப் போனால், வாழ்க்கை கூட கதையேதான்! நீ செப்பின தொப்ப, என் கதை கூட ரொம்ப அதிசயமானதுதான், தங்கச்சி!'' என்று பேசினாள்.

''அன்னம், உன்னை மாதிரியே உம் பேச்சும் அழகாய் இருக்கு!''

''பொய் பேசலியே நீ?''

''பொய்யே பேசத் தெரியாது!''

''பொய்யே பேசத் தெரியாது என்கிறதே பொய்! நான் நம்புறதுக்குத் தயாராக இல்லே, ஆனா, பொய் பேசப் படாது அப்படின்னு சொல்லு, நம்புறேன்.''

''அந்தச் சங்கதி இப்பைக்கு ஈசான்ய முடுக்கிலே ஒடுங்கட்டும். மெய்யாலுமே நீ ஒசத்தியான அழகு கொண்ட பொண்ணுதான்! அதனாலே?

''அதாலேதான், உன்னை என்னாலே இம்புட்டு வருசத்துக்கு மறக்கவே முடியல்லே!''

''ஓ! அப்படீன்னா, அம்புட்டுத் தொலைவுக்கு என் அழகு உன்னை மயக்கிடுச்சின்னு சொல்லு!''

''ஊம்! உன் அழகு என்னை மட்டுந்தானா மயக்கும்?''

''அப்பன்னா, உன் வாய்க்குச் சர்க்கரைதான் போட வேணும்!''

''வெறும் சர்க்கரை மட்டிலும் தான் என் வாய்க்குப் போடப் போறீயா, அன்னம்?''

தேடிவந்த விருந்தாளி வேறு என்ன எதிர் பார்க்கிறாளென்று அன்னத்திற்கு விளங்கிடவில்லை. அப்போது, மூக்கின் முனையில் முன் கோபத்தைக் கூடுகட்டி வைத்திருக்கும் முசுடு மாதிரி, அடுப்பில் உலை கொதித்துக் கொண்டிருந்த ஓசை கேட்கவே ''வாய்க்குச் சர்க்கரையும் போடுறேன்; வயிற்றுக்குச் சோறும் போடுறேன் . . . தங்கச்சி!'' என்று 'டக்' என்று ஒரு போடு போட்டாளே, பார்க்க வேண்டும்!

''நான் தங்கச்சி இல்லே!''

''தங்கச்சி இல்லேயா? அப்படின்னா அக்காவா?''

''ஊகூம். நான் பவளம் ... அதாகப்பட்டது, பவளக் கொடி!''

''உன்னோட பேரைக் கேட்டுக்கிடத்தான் கூப்பிட்டேன். ரொம்ப அழகான பேர்!''

''அப்படியானால், நான் அழகில்லே, கறுப்புன்னு இடிக்காமல் இடிக்கிறீயாங்காட்டி, அன்னம்?''

''நாவப்பழம் கறுப்புத் தான். அதை எத்தனை ஆசையோட தின்கிறோம்? நீ கறுப்பானால் என்ன? அந்தக் கறுப்பிலேயும் மனசைச் சுண்டியிழுக்கிற அந்தம் சந்தம் சேர்ந்திருக்குதே, பவளம்!''

''என்னோட அழகிலே மனசைச் சுண்டி இழுக்கக் கூடிய அந்தம் இருக்குது என்கிற துப்பு உனக்குக் கூடப் புரிஞ்சிருக்குதே?'' என்று அட்டகாசமாகச் சிரித்தாள் பவளம். ''அடி, சக்கை!'' கும்மாளம் போட்டாள்.

பவளத்தின் பேச்சுக்கு உண்டான அர்த்தமோ, அல்லது, அவள் சிரிப்புக்கு உரித்தான காரணமோ அன்னத்திற்கு மட்டுப்படவில்லை. ''கைப் புண்ணுக்குக் கண்ணாடியா வேணும்?'' என்றாள்.

''கண்ணாடி வேணும். சில பேருக்கு மூக்குக் கண்ணாடி தேவைப்படாதா?''

''ரொம்பச் சூட்சுமக் காரியாய் இருப்பே போலிருக்கே, பவளம்?'' சரி, சரி. வந்த காலோட நிற்காமல், அப்படிக் குந்து. இந்தாலே ஓடிப்போய் சோத்தைக் கவிழ்த்து 'கலவடை'யிலே இறக்கி வச்சிட்டு,

## துப்புத் துலக்கப் புதிய கருவி

துப்புத் துலக்க தமிழ்நாட்டில் புதிய குற்றங்களில் விரைவாகத் துப்புத் துலக்க தமிழ்நாட்டில் புதிய கருவி பொருத்தப்படுகிறது.

மிகக் குறைந்த தூரம் வரை தொடர்பு கொள்ளக் கூடிய 'வயர்லஸ் செட்டுகள்' இப்போது காவல் நிலையங்களில் உள்ளன. இதற்குப் பதில் அதிக தூரம் தொடர்பு கொள்வதற்கான புதிய கருவி 'மைக்ரோ வேவ்' பொருத்தப்பட இருக்கிறது.

இந்தக் கருவியின் உதவியால் 340 மைல் தூரம் வரை ஒரே நிமிடத்தில் தொடர்பு கொள்ள முடியும்! அதாவது சென்னையில் உள்ள போலீசார் மதுரையில் உள்ள போலீசாரிடம் ஒரே நிமிடத்தில் பேசி எல்லா விவரங்களையும் சேகரித்துவிடலாம். மழை, வெள்ளக் காலங்களில் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது.

கொலை, கொள்ளை குற்றங்களில் விரைவாகத் தொடர்பு கொண்டு துப்புத் துலக்க இந்தக் கருவி பெரிதும் உதவும்.

இந்த நவீனக் கருவியைப் பொருத்த ரூ. 1 கோடியே 6 இலட்சம் செலவாகும். மத்திய அரசு மானியமாகவும், கடனாகவும் ரூ. 1 கோடி கொடுக்கிறது. மீதித் தொகையைத் தமிழக அரசு கொடுக்கிறது.

இந்த நவீனக் கருவியை உத்தரபிரதேசத்தில் காஜியாபாத்தில் உள்ள 'பாரத் எலக்ட்ரானிக்' நிறுவனம் தயாரிக்கிறது. இதற்கான ஒப்பந்தம் சென்னையில் கையெழுத்தானது.

ஒரு எட்டிலே ஓடியாந்திடறேன்... பவளம்!'' என்று சொல்லிக் கொண்டே, பவளத்தைப் பார்க்காமல் காலைப் பார்த்து நடந்தாள் அன்னம்.

விடிகாலையிலேயே தஞ்சாவூருக்குக் கார் ஏறிப் பறந்த அப்பா எப்போது திரும்புவார்? அப்பாவுக்கு இப்போது தஞ்சையில் என்ன அவசர அலுவல்? 'கேசு' தான் கெலிச்சுப் போச்சே? பாவம், ராத்திரியும் அவர் சோறு உண்ணவில்லை! 'இரு மனம்' பூண்ட இரும்பு நெஞ்சுக்காரியான செங்கமலம் 'கால்மாறி' ஓடிவிட்ட சேதி கேட்டு, அவளைக் கையும் களவுமாக—கையும் மெய்யுமாக ஓடிப் பிடித்து விடுகிற மாதிரி ஓடினாரே அப்பா? ஆனால், நட்ட நடு ராத்திரியிலே அவர் மாத்திரம் தானே திரும்பினார்? அந்தப் பாவி பழிகாரி—சண்டாளிச் சனியன் செங்கமலம் என்ன ஆனாள்? என்னமோ எல்லாமே மூடுமந்திரமாக அல்லவா இருக்கிறது? வேலைக்காரப் பரமசிவம் எங்கே போய்த் தொலைந்தானாம்? — சே! குழப்பத்திற்குப் பெயர்தான் வாழ்க்கையோ?—ஐயையோ!

இப்படி என்னென்னவோ கேள்விகளையெல்லாம் மனக் குழவி, 'குளவி'யாகக் கொட்டிக் கேட்க, அந்தச் சலனத்திற்கும் குழப்பத்திற்கும் மத்தியிலே ஒரு வழியாகச் சோற்றைக் கவிழ்த்து—வடித்து இறக்கி வைத்தாள் அன்னம்.

பவளம் இங்கே ஏன் வந்திருக்கிறாள்? அவள் பார்வை நன்றாக இல்லையே? வைரப் புளியங்கொம்பாகப் பார்த்துதான் அத்தானைக் கட்டிப்போட நினைத்திருக்கிறார் மாமா! பாவம், அத்தை புருஷன்! ஏமாந்து விட்டாரே!

அன்னக்கொடி அவளுக்கே உரித்தான பரிவுடன் பவளக் கொடியை—சிலட்டூர்க் கங்காணியாரின் அருமந்தப் புதல்வி பவளக்கொடியை நெருங்கி, ''பவளம், வா, சோறு உண்ணலாம்'', என்று அன்புடன் அழைத்தாள். மனிதாபிமானம் மணந்திட அழைத்தாள்.

ஏலே அன்னம்! ஈனத்தனமும் சின்னத்தனமும் கொண்ட உங்க வீட்டிலே கை நனைக்க வந்திருக்கேன்னா மனப்பால் குடிச்சே நீ? என்னோட தாலிப் பிரச்சினை சம்பந்தப்பட்ட ஒரு சங்கதியைப் பாளை வெடிச்சாப்பிலே உங்கிட்ட ஓதிப்புட்டு ஓடத்தான் ஓடியாந்திருக்கேன்! கேட்டுக்க!'' என்று மறைவுக் கவர்ச்சி விளையாடச் சற்றே நிறுத்தினாள் பவளம்.

அன்னத்தின் சந்திர பிம்ப வதனத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கத் தலைப்பட்டன.

உச்சாடனம் கொண்ட சூன்யக்காரியாகப் பவளம் தொடர்ந்தாள்.

''ஏ, அன்னம்! உன்னைக் கண்ணாலம் பண்ணிக்கப் போறதாக உன் ஆசை அத்தைமகன் வீரமணி வாக்குக் கொடுத்திருக்காராமே? அந்தப் பாக்கியம் இந்தச் சென்மத்திலே உனக்குக் கிட்டவே கிட்டாது; கிட்டவும் இந்தச் சென்மத்திலே விடவும் மாட்டேன் நான்! ஏன் தெரியுமா?* உன் நேச மச்சான் வீரமணி எனக்கே திருப்பூட்டுறதாக ஆத்தாளைச் சாட்சி வச்சு, எனக்குக் கையடிச்சுக் கொடுத்திருக்காகளாக்கும்! அந்தச் சத்திய வாக்கை நான் வேத வாக்காய் நம்பித்தான், நான் என்னோட அருமை வீரமணி மச்சானுக்கு கண்ணாலம் காட்சிக்கு முந்தியே ஒரு நிலா ராத்திரியிலே நான் ''முந்தானை விரிச்சுப்புடத் துணிஞ்சேனாக்கும்!''

—வளரும்.


## மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், நெ. ஜி-1628.

### படானம்

1. மருந்துக்கும் ஓர் கரும்பிலா இடத்தில்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை நிறுவி
' தோடுகொள்வேலின் தோற்றம் போல
ஆடுகட்கரும்பின் வெண்பூ நுடங்கும் '
கரும்புத் தோட்டங்களை ஈராறு ஆண்டுகளில்
வேண்டிய அளவு தோற்றுவித்தோம் எனில்
எங்கள் சாதனை அம்மா பெரிதன்றோ !

2. கரும்பு விலையன்றி, காலம் கோடாது
உர விநியோகம் செய்தும், முன்பட்ட நடவு
மானியமளித்தும், ஊக்குவிப்புத் தொகையளித்தும்
பூச்சி மருந்துகளில் பாதிச் செலவை ஏற்றும்
துளைப்பான் பிணி கரும்பைத் தாக்காவண்ணம்
ஒட்டுண்ணிப் பூச்சிகள் உற்பத்தி செய்து
உரிய நேரத்தில் வயலில் இட்டும்
ஆலைக் கரும்பை உயிர்போல் காத்து
இன்னும் பல உதவிகள் செவ்வனே யளிக்கும்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையென்னும்
மதுரமான பெயரைத் தாங்கி நிற்கும்
எங்கள் ஆலை இனிதே வாழ்க !

# மண்பாண்டங்களுக்கு மானாமதுரை

"கானக் கரிசலிலே
களையெடுக்கும் பெண்மயிலே
நீலக் கருங்குயிலே
நிக்கட்டுமா போகட்டுமா?''

—இது ஏட்டில் எழுதாக் கவிதையாக வழங்கும் நாட்டுப் பாடலில் காளை ஒருவன் கேட்கும் கேள்வி.

இதற்கு அவனுடைய உள்ளம் கவர்ந்தவள் சொல்லும் பதில் :

''ஒருநாள் ஒருபொழுது
உங்கமுகம் பாராமே
ஓடைக்கரை மண்ணெடுத்து
உருவாரம் செஞ்சுபார்த்தேன்'

அவளுடைய ஆசையை அப்படியே சொல்லி விட்டதால் ஆனந்தம்தாங்கவில்லை அவனுக்கு. அதனை அவன் வாயிலிருந்து வரும் சொற்கள் வெளிப்படுத்துகின்றன.

''மானாமதுரை மண்ணெடுத்து
மங்கைஉன் உருவம் செஞ்சா
தேனா இனிக்குமடி
திக்கெட்டும் மயங்குமடி''

ஆமாம், திக்கெட்டும் மயங்கித் தான் தீரும். மானாமதுரையிலே செய்துள்ள மண்பாண்டங்களே நம்மை மயக்கும்போது, மங்கையின் உருவம் காளையை மயக்காதா? நாட்டுப் பாடலில் அந்தக் காளை சொல்வது உண்மைதான் என்பதை இன்று மானாமதுரையில் செய்யப்பட்டுள்ள மண்பாண்டங்களைக் காணும் ஒவ்வொருவரும் ஒப்புக் கொள்வர்.

மானாமதுரையின் மண்ணின் மகிமை போதும். அந்தப் பகுதியில் மண்பாண்டம் செய்யும் தொழிலில் தான் எவ்வளவு நேர்த்தி.

வைகையாறு ஓடும் மானாமதுரைப் பகுதியில் ஓடு தயாரிக்கும் தொழிற்சாலைகளும் உள்ளன. செங்கல் தயாரிக்கும் தொழிலும் நடைபெறுகிறது. மண்பாண்டங்கள் செய்யும் தொழிலும் கைவண்ணம், கலைவண்ணம் மிகுந்ததாகக் காணப்படுகிறது.

தலைமுறை தலைமுறையாக மண்பாண்டங்கள் செய்வோர் இப்பகுதியில் ஏராளமாக உள்ளனர். இவர்கள் நலங் கருதி, மானாமதுரை மண்பாண்டம் செய்வோர் கூட்டுறவுச் சங்கம் 1946-ஆம் ஆண்டிலே இங்குத் தொடங்கப்பட்டது.

இன்னொரு கூட்டுறவுச் சங்கம், மானாமதுரை தேசிய மண்பாண்டம் செய்வோர் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டு 1960-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

இப்பொழுது இந்த இரண்டு சங்கங்களையும் ஒன்றாக இணைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் உதவியளித்து வருகிறது.

இந்தக்கூட்டுறவுச் சங்கங்களால் மண்பாண்டம் செய்வோருக்கு மேம்படுத்தப்பட்ட சக்கரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

புதிய புதிய வடிவங்களில் வீட்டுக்குப் பயன்படும் மண்பாண்டங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

குடிநீர் வைக்கும் கூஜாக்களில் தான் எத்தனை வகை. மான் போல ஒன்று, வாத்து போல மற்றொன்று; மயில் போல இன்னொன்று; முயல் போன்ற வடிவில் வேறொன்று.

மலை போலக் குவிந்திருக்கும் பானை வகைகளில் எத்தனை எவ்தனை வகை. பலாப்பழம் போல செய்யப்பட்டிருக்கும் பானைதான் எவ்வளவு கவர்ச்சியாக இருக்கிறது.



அங்கு வைத்திருக்கும் ஒவ்வொரு பொருளையும் பார்க்கப் பார்க்க ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் நேர்த்தியாக இருப்பதைக் காணுகின்றோம்.

செங்கற்பட்டு மாவட்டம் செவ்வாய்ப்பேட்டையிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் ஊர்க்காடு பகுதியிலும், மண்பாண்டங்கள் செய்யும் தொழில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இராம

நாதபுரம் மாவட்டம் மானா மதுரைப் பகுதியில் நடைபெற்று வரும் மண்பாண்டம் செய்யும் தொழிலின் நேர்த்தியும் சிறப்பும் தனியாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

இங்குச் செய்யப்படும் மண்பாண்டங்கள் அண்டை மாவட்டங்கள் அனைத்துக்கும் செல்கின்றன. கதர் கிராமத் தொழில் வாரியத்தின் விற்பனை நிலையங்களான 'காதி கிராப்ட்' கடைகள் எல்லாவற்றுக்கும் அனுப்பபடுகின்றன. சென்னை குறளகத்துக்கும் மானாமதுரை மண்பாண்டங்கள் அனுப்பப்படுகின்றன.

மானாமதுரை மண்பாண்டங்கள் கேரள மாநிலத்திற்கும் அனுப்பப்படுகின்றன.

இங்குத் தயாராகும் பூவைக்கும் அலங்காரத் தொட்டிகளைத் தூத்துக்குடி 'ஸ்பிக்' தொழிற்சாலைக்கும் அனுப்பியுள்ளார்கள்.

மானாமதுரையில் மண்பாண்டங்களின் விலை கொள்ளை மலிவுதான்! வெளியூருக்கு மண்பாண்டங்களை எடுத்துச் செல்லும் போக்குவரத்துச் செலவும், பொருட்களை எடுத்துச் செல்லும் போது ஏற்படும் சேதமும்தான் வெளியூர்களில் மண்பாண்டங்களின் விலையை ஏற்றி விடுகின்றன. அப்படிக் கூடுதலான விலை கூட இந்த மண்பாண்டங்களின் கலையழகைக் காணும்பொழுது மிகக் குறைவானதுதான்.

மானாமதுரை மண்பாண்டம்

மானாமதுரை மண்பாண்டம் செய்வோர் கூட்டுறவுச் சங்கத்தைப் பார்க்கும் எவரும் அங்கு வைக்கப்பட்டுள்ள மண்பாண்டங்களில் தனியாகக் கவர்ச்சியைக் காண முடியும். அதற்கு உரிய காரணத்தை அறிந்து கொள்ள மண்பாண்டங்கள் செய்யும் இடங்களுக்கே செல்கிறோம்.

அங்கே—

மண்ணை எத்தனை வகையாகத் தரம் பிரித்து, எடுத்துச் சேர்க்கிறார்கள். எல்லாம் அனுபவ முறைதான்.

மண்ணின் தரமும் சேர்க்கும் முறையும்தான் இங்கு இந்தத் தொழில் இப்படி வளரக் காரணமோ?

இருக்கலாம். அத்துடன் கைப் பழக்கத்தால் உருவாகும் கலை வண்ணம்—செய்தொழில் நேர்த்திக்குச் சிறப்பான எடுத்துக்காட்டு.

மண் பானையைச் சக்கரத்தில் வைத்துச் சுழற்றி வடிவம் கொடுக்கும் போது, பானையின் ஒரு பகுதியில் மண் அளவு கூடுதலாகி கனம் ஏற்பட்டு விட்டால் அதையும் அழகாக ஓசை நயத்தோடு தட்டிச் சமன் செய்கின்றனர்.


## கள்வனை விரட்டும் கருவி!


கள்வனைக் கண்டுகொண்டு அச்சுறுத்தி விரட்டிடவும், அவனைப் புகைப் படம் எடுக்கவும் வல்ல ஒரு புதுமைக் கருவியொன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

இதன் பெயர் 'இன்ட்ருடெக்'; எடுத்துச் செல்லக்கூடிய கருவி. மின்கலம் கொண்டு இயங்குகிறது. பலப்பல பணிகளுக்குப் பயன்படக் கூடியது. இதனை அமைப்பதற்கோ இயக்குவதற்கோ தனிப்பயிற்சி தேவையில்லை. இது சாலைகளில் ஓடும் ஊர்திகளை எண்ணும்; ஏரியில் ஓடும் படகுகளை எண்ணும்; காடுகளில் மான்களையும் எண்ணும், மக்கள் தொகையையும் கணிக்கும்!

எடுத்துச்செல்லக்கூடியதாகவும், எளிதில் அமைக்கக்கூடியதாகவும் இக்கருவி இருப்பதால், வெளியே தற்காலிகமாகப் பொருத்துவதற்கு மிகவும் ஏற்றது என்கின்றனர் இதன் தயாரிப்பாளர்கள்.

இதில் உள்ள காமிராக்கள் அத்துமீறி நுழைபவர்களை நிலையாகப் படம் எடுத்துவிடுகின்றன! சட்டைப் பை அளவு இருக்கும் ரிசீவர்கள், வெளியே களத்திலே வேலை செய்பவர்களுக்கு மிகவும் பயனுள்ளவையாகும். கருவியின் வண்ணம் மங்கலாக இருக்கிறபடியால் அதனை மூடி மறைத்து வைக்க முடியும்! உலோகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இக் கருவி தண்ணீர் புகாதபடி அமைக்கப்பட்டுள்ளபடியால் அதனைத் தரைக் கடியில் புதைத்து வைக்கலாம்.





இப்படி உருவாகி வரும் பொருள்களை அதற்கு உரிய அடுப்பில் வைத்துச் சுடுகிறார்கள். அந்தப் பகுதியில் கிடைக்கும் மரங்களே எரிபொருளாகப் பயன்படுகின்றன.

மண்பாண்டங்கள் தயாரிக்கப்பட்ட பின்னர் அவைகளைச் சங்க உறுப்பினர்கள் கூட்டுறவுச் சங்கத்துக்கு விற்றுவிடுகிறார்கள்.

கூட்டுறவுச் சங்கத்தில் ஒவ்வொரு மண்பாண்டங்களும் சோதனைச் செய்யப்பட்டு வாங்கிக் கொள்ளப்படுகின்றன. பிறகே விற்பனைக்குஅனுப்பப்படுகின்றன.

இக்கூட்டுறவுச் சங்கங்களால் இத் தொழிலில் ஈடுபட்டிருப்போருக்குத் தொடர்ச்சியான வேலை வாய்ப்பும் வருமானமும் கிடைக்கிறது.

தலைமுறை தலைமுறையாக வழங்கி வந்த ஒரு தொழிலின் நேர்த்தியும் செய்யும் திறனும் பேணிக் காப்பாற்றப்பட்டு வருகிறது என்ற பெருமையும் இக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உண்டு.

மானாமதுரையில் மண்பாண்டம் செய்வோர், கிராமக் கோயில்களுக்கான மண் குதிரை, காளை, அம்மன், ஐயனார் ஆகியவைகளைச் செய்வதில் சிறந்தவர்களாக விளங்குகிறார்கள். இவர்களுடைய கை வண்ணங்களால் பல ஊர்களின் கோயில்களில் மண் குதிரையும், ஐயனார் மற்ற கிராம தேவதைகளின் உருவங்களும் உருவாகியுள்ளன.

மண்பாண்டத் தொழிலின் பெருமையைப் பறைசாற்றும் வகையில் அமைந்துள்ள மானாமதுரை மண்பாண்டம் செய்வோர் கூட்டுறவுச் சங்கத்தைப் பார்த்து வரும் பொழுது பாரதியார் பாடல் நினைவுக்கு வருகிறது.

''அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்'
ஆயி ரந்தொழில் செய்திடு வீரே!
பெரும்பு கழ்நுமக் கேயிசைக் கின்றேன்
பிரம தேவன் கலையிங்கு நீரே!''

—என்ற பாடலின் அடுத்த வரி தான்

''மண்ணெடுத்துக் குடங்கள் செய் வீரே!
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே!''

—மானா.




# உங்கள் பருத்திப் பயிரிலே விளைச்சல் பெருக அதற்கு 'ப்ளேனோஃபிக்ஸ்' தேவை.



சிபாரிசு செய்துள்ளபடி நீங்கள் ''ப்ளேனோஃபிக்ஸ்'' உபயோகித்தீர்களானால், பூக்களும் காய்களும் உதிருவதைத் தடுத்து. மகசூலைப் பெருக்க முடியும பருத்திப் பயிரிலே ''ப்ளேனோஃபிக்ஸ மருநதைப பல்லாண்டுகள் பயன்படுத்தியதிலே, திருபதிகரமான பலன்கள் ஒருசீராகக் கிடைத்துள்ளன

அசல் தயாரிப்புத்தானா என்று பாாதது உபயோகியுங்கள்... மாற்றுக்களை ஏறறு ஏமாறாதீர்கள். உங்கள் பயிா ஓா ஒபபில்லாச் செல்வம்.


M&B May&Baker

மே & பேக்கா (இந்தியா) பிரைவேட லிட

பமபாய கலகததா. கவுஹாத்தி. இந்தோா லகனோ. சென்னை நியூடெல்லி. பாடனா

''ப்ளேனோஃபிக்ஸ்'' என்பது ஒரு எம & பி. ரகத் தயாரிபபு


* டிரேடு மார்க்




# உங்கள் அந்தரங்கக் காரியதரிசி இருளில் அவதிப்படுகிறாரா?

சீரான ஒளி உங்கள் ஊழியர்களின். பார்வை, வேலைத்திறன் மற்றும் பரஸ்பர பழகும் தன்மை இவற்றை மேம்படுத்துவதில் பங்கு வகிக்கிறது. அலுவலகங்களுக்கேற்ற நம்பகமான, உயர்ந்த செயல்திறன் கொண்ட, நீடித்த உழைப்பைத் தரும் லாம்ப் மற்றும் லூமினேர் வகைகளை பிலிப்ஸ் அளிக்கிறது. இவற்றுள் ஒவ்வொன்றும் மின்சாரத்தை மிச்சப்படுத்தி இந்தியாவின் நெருக்கடி நிலையை சமாளிக்கும் வகையில் விசேடமாக உருவாக்கப்பட்டதாகும்.

சர்வதேசத்தரங்களையொத்த மிக உயர்தரமான பற்பலரக இன்கான்டிஸென்ட், ஃப்ளூரோஸென்ட் மற்றும் மெர்க்குரி வேப்பர் லாம்புகளையும் லூமினேர்களையும் நம் நாட்டிலேயே தயார் செய்கிறது பிலிப்ஸ்.






**பிலிப்ஸ் லாம்புகள் மற்றும் லூமினேர்கள்—
சீரான பார்வைக்கு**

# பிலிப்ஸ்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

**வெ**ப்ப மண்டலத்தில் வளரும் மிகச் சாதாரணமான மரங்களுள் புளி ஒன்று. இது முள் இல்லாத மரம்; எப்போதும் இலை போர்த்துப் பச்சையாக விளங்கும்! ‘இந்தியாவின் பேரீச்சம்பழம்’ என இதைக் கூறுகின்றனர். இது நம்நாட்டில் தென் பகுதிகளிலும், மத்தியப் பகுதிகளிலும் சரித்திரக் காலத்திற்கு முன்பாகவே காணப்படும் மிக அழகிய மரம். காடுகளில் புளி மிகப் பெரிய மரமாக வளருகிறது. இதன் ஒவ்வொரு பகுதியும் பயன் உடையதாகையால், மக்கள் இதனை இதன் அழகிற்காகவும், பயனுக்காகவும், வீட்டினருகே வளர்ப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. சாலை ஓரங்களில் வைக்க இது ஒரு சிறந்த மரம். இலைகள் உதிர்ந்து புதிய இலைகள் துளிர்த்து அதோடு பூக்களும் மலருவது பார்ப்பதற்குப் பரவசமூட்டும் காட்சியாகும்! இளங்காவி நிறத்ததும், மஞ்சள் வரி கொண்டதுமான இதழ்கள் பாய்விரித்தாற் போல் தரையில் உதிர, கொத்துக் கொத்தாய் அழகிய இளம் பிஞ்சுகள் உருவாகின்றன. காய் முதிரும்போது பழுப்புப் பச்சை நிறமுடையதாகவும், பழுக்கும்போது சாம்பல் நிறமுடையதாகவும் விளங்கும். பழங்கள் மர நுனியில் ஏராளமாய்க் காணப்படும்.




# புளியோ புளி!

இந்தியாவில் தென்முனை தொடங்கி, வடக்கே ஜீலம் நதி வரை புளியமரங்கள் காணப்படுகின்றன. ஆனால் அம்பாலா என்னும் இடத்திற்கு மேற்கான பாகங்களில் புளி பழுப்பதில்லை! கற்பாங்கான இடத்திலும், மண்வளம் அற்ற இடத்திலும், காய்ந்த உபயோகமற்ற இடங்களிலும்கூட இம்மரம் சாதாரணமாக வளர்கிறது. மழை அதிகம் பெய்யும் இடங்களிலும், மண்வளம் நிறைந்த இடத்திலும் செழித்து வளர்கிறது. வெப்ப மண்டலத்தில் மண்வளம் நிறைந்ததும், நல்லமழை உள்ளதுமான இடங்களில் பெரும் அளவில் காணப்படுகிறது. இது வெப்ப மண்டலத்தின் சூட்டினாலும், குளிரினாலும் (28-30 டிகிரி பாரன் கைட்) எந்த அளவும் பாதிக்கப்படாது மிக ஆழமாகச் செல்லும் வேர்களை கொண்டிருப்பதனால், காற்றை எதிர்க்கும் பலம் உடையது. ஆகவே புளியமரம் காற்றைத் தடை செய்யும் மரமாகவளர்க்கப்படுகிறது. எப்போதும் பச்சையாக விளங்கும் மரமாயினும், மார்ச்-ஏப்ரல் மாதத்தில் இலைகளை உதிர்த்துத் துளிர்க்கும். புளி அனேகமாக தானாக விழுந்த- விதைகளினின்று உண்டாகிறது.

### இனங்கள்

ஃபிர்மிங்கர் என்பவர் இந்தியாவில் மூன்று இனங்கள் உள எனக் கூறுகிறார். ஆனால் தாய்ச்செடி போன்ற அதே இனங்களை விதையிலிருந்து திரும்ப உண்டு பண்ண முடிவது நிச்சயமில்லை என்றும் கூறுகிறார்.

‘பெய்லி’ என்பவர் கீழ்க் கண்ட இரு இனங்களைப் பற்றி கூறுகிறார்:—

கிழக்கு இந்திய இனம்: இந்த இனத்தின் காய் நீளமானது. சுமார் 6-12 விதைகள் இருக்கும்.

மேற்கு இந்திய இனம்: இந்த இனத்தின் காய் குட்டையானது. சுமார் 1-4 விதைகள் இருக்கும்.

குறிப்பாக குமரி மாவட்டத்தில் கீழ்க்கண்ட புளி இனங்கள் காணப்படுகின்றன.

இனிப்புப் புளி: இப்பழங்கள் புளிப்போடு, இனிப்பும் கலந்த சுவை உடையதாக இருப்பதால் மக்கள் இதை நேரடியாக விரும்பிச் சாப்பிடுகின்றனர். இது சாதாரணமாகப் பயன்படும் புளியைப் போன்று அத்துணை முக்கியம் வாய்ந்ததல்ல! இவ்வினம் ஒவ்வொன்றும் ஆங்காங்கே காணப்படுகிறது.

புளிப்பு இனம்: பழங்கள் புளிப்பானவை. சந்தைகளில் சாதாரணமாக காணப்படுவது இவ்வினமே.

*வாழைகாச்சி:* இதன் காய்கள் நீளமானவை. குறுக்கு வெட்டு நீண்ட சதுரமாய்த் தோன்றும். இதுவும் புளிப்பு இனமே.

சின்ன விதைகளைக் கொண்ட சிவப்பு நிறமான 'குஜராத்' புளியும் சிவப்பு கலந்த பழுப்பு நிறமான இன்னொரு இனமும் கூட நம் நாட்டில் உள்ளன.

### மரம் வளர்த்தல்

புளி விதைகள் எளிதில் கெடா. சாதாரணமாக தானே விழுந்த விதைகளிலிருந்து முளைத்துப் புளியமரங்கள் தோன்றுகின்றன. நாற்றுக்களை எளிதில் பெயர்த்து நடலாம். எனவே, நாற்றங்கால்களிலிருந்து நாற்றுக்களை எடுத்து நடவும் கூடும். மணலில் சுமார் ஒரு சென்டி மீட்டர் ஆழத்தில் விதைகளை விதைக்க வேண்டும். செடி முளைக்கும்போது இரண்டு விதை இலைகளுடன் வெளிவருகிறது. நாற்றுகள் எளிதில் அழுகிவிடக் கூடியன. ஆகவே, அவற்றை அதிகக் கருத்தோடு வளர்க்க வேண்டும். பின் விரும்புமிடத்தில் இளம் நாற்றுக்களை நடலாம். இளம் நாற்றுக்கள் ஆரம்பத்தில் மெதுவாக வளரும். அவை மென்மையானதால் பக்கத்தில் கம்பு வைத்துக் கட்டுதல் அவசியம். மேலும் கால் நடைகளிலிருந்து பாதுகாக்க வேண்டும். பக்கங்களில் இருந்து வரும் கிளைகள் கழிக்கப்பட்டு சுமார் 2 மீட்டர் உயரம் எய்தும் வரை ஒற்றைத் தண்டாக வளரவிட வேண்டும். பின் கிளைகள் பல தோன்றும். விதைகளிலிருந்து எழுந்த நாற்றுக்களை நடுவதால், காய்களில் குணமாறுதல்கள், காய்ப்பின் அளவின் வேற்றுமைகள் முதலிய பண்புகள் எழுகின்றன.

தாய்ச்செடியின் சிறப்பான குணநலன்கள் காக்கப்பட, சிறப்பு முறைகளில் தாய்ச் செடியின் பாகங்களிலிருந்து இனவிருத்தி செய்யப்பட வேண்டும்.

'ஃபிர்மிங்கர்' என்பவர் தெரிந்து எடுக்கப்பட்ட சிறந்த பழங்களைக் கொடுக்கக்கூடிய மரக்கிளைகளிலிருந்து பதியம் எடுக்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ளார்.

'வெஸ்டர்', 'பெய்லி' ஆகிய இருவரும் கேடய மொட்டுக் கட்டும் முறையில், நற்குலச் செடிகள் தயாரிக்கலாம் எனக் கூறுகின்றனர்.

'சாமோலர்' என்பவர் இளம் நாற்றுகளில் மொட்டுக் கட்டும் முறையைப் பின்பற்றலாம் எனக் கூறியுள்ளார்.

'மொரே' என்பவரும் 'டாய்' என்பவரும் விரும்பத்தக்க பழம் தரும் மரங்களின் மொட்டுக்களை, கேடய முறையில் சிறிய நாற்றுகளில் செய்வதை விரும்பியுள்ளனர்.

### நடுதலும் பின் கவனிப்பும்

புளிய மரம் பொதுவாக வீட்டுப்புறங்களிலும், பாதை ஓரங்களிலும் வளர்க்கப்படுகிறது. காற்றுத் தடுப்பு மரமாகவும், இதை வளர்க்கின்றனர். வீட்டு அருகில் விதை நட்டு, செடி வளர்த்து, தண்ணீர் விட்டுப்பாதுகாப்பது சிரமம் அல்ல! நாற்றங்கால்களில் 'பாலிதின்' பைகளில் அல்லது சின்ன தொட்டிகளில் அல்லது கூடைகளில் மண்போட்டு நாற்றுக்களை வளர்த்தல் விரும்பத் தக்கது. 'ஒரு 'பாலித்தின்' பை அல்லது தொட்டில் அல்லது கூடையில் இரண்டு விதை வீதம் போடப்பட வேண்டும். துரிதமாக வளரும் செடியை தெரிந்து கொண்டு மற்றதை நீக்க வேண்டும். குழிகள் தோண்டி, எருக்கலவை போட்டு செடியைக் கூடையோடு நட்டுத் தண்ணீர் விட வேண்டும். இளஞ் செடிகளைக் கால்நடைகள் மேய்ந்துவிடாமல் பாதுகாக்க வேண்டும். வறண்ட காலங்களில் தண்ணீர் ஊற்ற வேண்டும். அடர்த்தியான நிழலும், உதிரும் இலைகளின் நச்சுத் தன்மையும், புளிய மரத்தின் அடியில் களைகளை வளரவிடுவதில்லை! மழைக் காலத்திற்குப்பின் மரங்களின் அடியிலுள்ள காய்ந்த இலை முதலியவற்றை மண்ணோடு கலந்து எருவாக்கி மண்ணின் வளத்தைக் காக்க ஒன்றிரண்டு முறை உழவேண்டும். இளமையில் மெதுவாக வளரும் புளி, பின்னர் வேர்களை ஆழமாகச் செலுத்தி துரிதமாக வளருகிறது. இளம் செடிகள் சுமார் 2 மீட்டர் உயரம் வளரும் வரை ஒற்றைத் தண்டாக விட்டு, பின் கிளைகள் உண்டாக அனுமதிக்க வேண்டும். அதிகமாக உருவந்திருத்தல், காவத்து செய்தல், தண்ணீர் பாய்ச்சுதல், எருப்போடுதல் முதலிய பக்குவங்கள் செய்யப்படுவதில்லை.

புளிய மரம் ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரையும், அக்டோபர் மாதத்திலும் கூட பூக்கும்! பழங்கள் டிசம்பர் முதல் ஏப்ரல் மாதம் வரை அறுவடை செய்யப்படும்!

### அறுவடை

காய்கள் முற்றும்போது பச்சை நிறத்திலிருந்து தவிட்டு நிறமாக மாறும். சதை சுருங்கி மேல் தோட்டிலிருந்து விலகும் மேல்தோடு இலகுவில் உடையும் தன்மை உள்ளது. சதை, பச்சை நிறத்திலிருந்து பழுப்பு நிறமாக மாறும். ஆண்கள், கிளைகளின் மீது ஏறி, பலமாக உலுக்கிப் பழங்களை உதிர்க்கின்றனர். தரையிலிருந்து அவற்றை பெண்கள் அல்லது சிறுவர்கள் பொறுக்கி எடுப்பார்கள். சில இனப் பழங்கள் இலகுவில் கீழே விழா. அவ்வினங்களில், தொரடு அல்லது வாங்கு போன்ற சாதனங்களால் பழங்களை அறுவடை செய்வர். இவ்வினச் செடிகள் அரிதாகத்தான் காணப்படுகின்றன. இவற்றில் காற்றினால் விழுந்து சேதப்படுவது தடுக்கப்பட்டாலும், அறுவடைச் செலவு அதிகமாகும்.

### மகசூலும் வருமானமும்

இனத்தைப் பொறுத்தும், மரத்தின் வயதைப் பொறுத்தும் மகசூல் வேறுபடும். ஒரு மரம் சுமார் 175 கிலோ பழம் கொடுக்கும். ஒரு ஏக்கர் நிலத்

### உமியிலிருந்து சிமெண்ட்

**நெல் உமியைச் சிமெண்ட்டாக மாற்றலாம் என்று டாக்டர் பி. கே. மேத்தா என்னும் இந்திய விஞ்ஞானி கண்டுபிடித்திருக்கிறார். அவர் இப்போது அமெரிக்காவிலுள்ள கலிஃபோர்னியா பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.**

**உமியை உலையில் போட்டு ஒரு குறிப்பிட்ட வெப்பத்தில் எரித்து அதைச் சாம்பலாக்குகிறார்கள். இந்தச் சாம்பலில் 'ஸிலிகா' என்னும் பொருள் நிறைய இருக்கிறது. 'ஸிலிகா' சிமெண்ட் உற்பத்திக்குத் தேவையான முக்கியமானதோர் அடிப்படைப் பொருளாகும். இந்தச் சாம்பலை சுண்ணாம்புடன் கலந்து கறுப்பு நிறமான சிமெண்ட் செய்யப்படுகிறது. இந்த வகை சிமெண்ட்டானது, சாதாரண சிமெண்ட் எந்த அளவுக்கு உறுதியானதோ அந்த அளவுக்கு உறுதியானதாகும்.**

திலிருந்து ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ரூபாய் 5,000 நிகர வருவாய் கிடைக்கும்.

## விற்பனை

காடுகளிலும் பாதை ஓரங்களிலும் உள்ள மரங்களில் மகசூல் மரத்தில் இருக்கும் போதே ஏலத்தில் விடப்படுகிறது. சிலர் பழங்களைச் சேகரித்து அளந்து விற்கிறார்கள்.

'ஜமெய்க்காவில்' ஏற்றுமதிக்கான புளியைத்தோட்டை நீக்கி தயாரிக்கிறார்கள். பெட்டிகளில் ஒவ்வொரு அடுக்குக்கும் இடையே பரல் சர்க்கரை போட்டு அடைக்கிறார்கள். பெட்டி சுமாராக நிறைந்ததும் கொதிக்கும் சக்கரைப்பாகு ஊற்றி மூடிவிடுகிறார்கள்.


கீழ்நாடுகளில் விதைகளை நீக்கிவிட்டு சதைப் பகுதிகளை பெரிய கட்டிகளாக உருட்டிப் பாய்கள் அல்லது ஓலைகளில் பொதிந்து கட்டி, அனுப்புகிறார்கள். நம் நாட்டிலிருந்து பெரும் அளவில் அரேபியாவிற்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் கப்பலில் புளி ஏற்றுமதி செய்யப்படுகிறது.

ஐரோப்பிய நாடுகளுக்கு தோடு, விதை, மற்ற அழுக்குகளை நீக்கி, புளியைச் சுத்தம் செய்து அனுப்புகிறார்கள். சுத்தம் செய்யப்பட்ட சதை அடுக்குகளுக்கிடையே உப்பு அல்லது சர்க்கரை போட்டு பொதியப்படுகிறது. பின் கொதிக்கும் பாகு ஊற்றி பெட்டி மூடப்படுகிறது. ஆங்கில நாட்டிற்கு மேற்கிந்திய தீவுகளிலிருந்து புளி அனுப்பப்படுகிறது.

வீட்டின் தேவைக்கான புளியைத் தோடு, விதை, கோது முதலியன நீக்கிச் சுத்தம் செய்து, பனியிலும், வெய்யிலிலும் சுமார் ஒரு வாரம் திறந்து போட்டுத் தயாரிக்கிறார்கள். அதன்பின் பானைகளுக்குள் உப்பிட்டு அடைத்து, பானையின் வாயை துணியினால் வண்டு கட்டி, உலை மூடியால் மூடி வைக்கிறார்கள்.

## பயன்கள்

இம்மரத்தின் எல்லாப் பாகங்களும் பயன்படுகின்றன. பழத்தின் சதையானது குழம்பு, சட்னி முதலியன தயாரிக்கச் சிறந்தது. மீன் ஊறுகாய் போடவும், புளி உதவும். இனிப்புப் பலகாரம் தயாரிக்க புளி, பாகாக உதவுகிறது. பழத்தின் சாற்றை எடுத்து, சர்க்கரைத் தண்ணீர் இவற்றோடு கலந்து குளிர்ந்த குடிநீராக (Cool-drinks) பயன்படுத்துகின்றனர். பாடம் செய்த உணவுப் பொருட்களுக்கு மணம் அளிக்கவும் உதவுகிறது. குழந்தைகள் புளியை பிஞ்சிலிருந்து பழம் வரை எல்லாப் பருவங்களிலும் விரும்புகின்றனர். நகை செய்பவர்கள் வெள்ளியைச் சுத்தம் செய்து பளபளப்பாக்க புளியும் உப்பும் கலந்தகலவையைப் பயன்படுத்துகின்றனர். தரம் குறைந்த புளியோடு உப்புப் போட்டு பித்தளை, செம்பு முதலிய வீட்டுப் பாத்திரங்களைச் சுத்தம் செய்யப் பயன்படுத்துகிறார்கள். இதன் மரம் மிக்க உறுதியானது. வண்டிச் சக்கரம், கொட்டாப்புளி, வீட்டுச் சாமான்கள், எண்ணெய் மற்றும் சர்க்கரை ஆலைக்கான உரல்கள் முதலியன செய்ய பயன்படுகின்றன. கடசல் வேலைக்கு ஏற்ற மரம் புளி. வெடிமருந்து, அடுப்புக்கரி முதலியன செய்ய விரும்பத்தக்க மரங்களுள் புளியும் ஒன்று.



விதைகளை நன்கு நொறுக்கி, இரவு முழுவதும் ஊற வைத்து பன்றிகளைக் கொழுக்க வைக்க கொடுக்கப்படுகிறது. வெளித்தோல் வறுப்பதாலும், ஊற வைப்பதாலும் நீக்கப்படுகிறது. விதைகளை வறுத்துச் சாப்பிடுகின்றனர். அல்லது அவித்துக் கால்நடைகளுக்குக் கொடுக்கின்றனர். விதையைக் காய வைத்து, அரைத்து நல்ல மாவாகவும் பயன்படுத்தலாம்.

இதன் இலைகள், பூக்கள், பழங்கள் முதலியவற்றை சாம்பளவரோடு ஒருவகைச் சாயம் தயாரிக்க பயன்படுத்துகின்றனர். இதன் விதையில் இருபது சதவிகிதம் எண்ணெய் இருக்கின்றது. அந்த எண்ணெய் இனிப்பானதாகவும், மணம் அற்றதாகவும், கெட்டியான திரவமாகவும் உள்ளது. விதைகளைப் பிழிந்து எண்ணெய் எடுக்கின்றனர். பெயிண்ட், வார்னிஷ் முதலியன செய்யவும், விளக்கு எரிக்கவும் உதவுகிறது. இந்த எண்ணெய்யைச் சமையலுக்கும் பயன்படுத்தலாம்.

ஓர் அடி உயரம் உள்ள புளியங்கன்றுகள் காய்கறியாகவும், பயன்படுத்தப் படுகின்றன. புளியமரத்தின் இலைகளைக் கறியாகச் சமைக்கவும், பயன்படுத்தப்படுகிறது. புளிய மரத்தின் பூக்களிலிருந்து 'சின்கார்' (Chingar) என்ற உணவு வகை (Dish) தயாரிக்கப்படுகிறது. புளியமரத்தின் இளம் துளிர்களையும் பூக்களையும் கொண்டு தயாரிக்கப்படும் 'சட்னி' சுவையானதாக இருக்கும்.

## மருந்துக் குணங்கள்

புளி உடம்பிற்குக் குளுமை கொடுப்பதுடன், உண்ட உணவைச் சீரணிக்கச் செய்கிறது. மலமிளக்கியாகவும், வாயுவைத் தடுக்கும் மருந்தாகவும் பயன்படுகிறது. மது போன்றவற்றால் உண்டான கோளாற்றைப் போக்க உதவுகிறது. புளியம் பழத்தைக் கூழாக்கியும், அல்லது இலையை அரைத்தும் அல்லது அரைத்த விதைகளையும் கட்டிகள், வீக்கங்கள் முதலியவற்றின் மேல் பூச்சாகப் பயன்படுத்துகின்றனர். தொண்டைப் புண்ணுக்கு மருந்தாகப் புளிக் கரைசலால் வாய் கொப்பளிக்கின்றனர். இலகுவில் ஆறாத இரணப் புண்கள் கூட, புளி இலைகள் போட்டு தயாரித்த கசாயத்தால் கழுவும் போது துரிதமாகக் குணப்படுகின்றன. விதையின் மேல் காணப்படும் சிவப்புத் தோடும், கடுமையான வயிற்றுக் கடுப்பு நோய்க்கு மருந்தாகிறது.

விதையின் நிறை, பழத்தின் நிறைக்கு 13.9 சதவீதம் ஆகும். விதை நீக்கிய பழக் கூழில் கீழ்க் கண்டவை அடங்கியுள்ளன.

நீர் —27%

கரையாப் பொருட்கள் —16.2%

பொட்டாசியம் பை கார்பனேட் —5.27%
டார்டாரிக் அமிலம்—6.63%

சிட்ரிக் அமிலம் —2.20%

மாலிக் அமிலம் —சிறிது அளவில்

**ஊட்டச் சத்துக்களின் மதிப்பு**

புளியம்பழத்தில் சுமார் 20 சதவிகிதம் சர்க்கரை இருந்த போதிலும், அதிகமாகப் புளிப் புச் சுவை உள்ளது. அதில் 3.3 சதவிகிதம் புரதச் சத்தும், அதிக அளவில் விட்டமின் 'பி' யும், தாதுப் பொருட்களும் அடங்கி உள்ளன.

வீட்டில் பயன்படுத்தவும், வியாபாரத்திற்கும் மேற்கூறப் பட்ட முறைகளில் புளி தயா ரிக்கப்படுகிறது. சில முக்கிய மான தயாரிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

திடீர்ப்புளி (Instant Tamarind): புளியின் கூழ் தயாரிக்கப் பட்டுப் புட்டிகளில் அடைக்கப் பட்டுள்ளது. விதை கோது, தோடு, முதலிய பொருட்கள் ஏற்கெனவே நீக்கப் பட்டுள்ள தால் நேரடியாக இதனைப் பயன்படுத்தலாம்.

பானம் (Refresed): இப் பானத்திற்காக கூழிலிருந்து பாகு தயாரிக்கப்பட்டுப் புட்டி யில் அடைக்கப்படுகிறது. நேரடியாகப்பயன்படுத்தலாம். தேவைக்கேற்பத் தண்ணீரும் சர்க்கரையும் சேர்த்து நல்ல குளிர் பானம் தயாரிக்கலாம்.

**பூச்சிகளும், நோய்களும்**

புளியமரம் பூச்சிகளினால் உண்டாகும் தாக்குதலை எதிர்க் கக் கூடியது. ஆயினும் கீழ்க் கண்ட பூச்சிகள் இந்தியாவில் காணப்படுகின்றன.

வண்டு (Caryoborus genagra): இது சாம்பல் பழுப்பு நிறமான வண்டு. இது புளியின் விதை களைத் தாக்குகிறது.


வண்ணத்திப்பூச்சி (Charaxes fabices): இது உருவில் பெரி யது. கறுப்பு நிறமானது. இதில் மஞ்சள் புள்ளிகள் உள்ளன. இதன் புழுக்கள் புளியின் இலைகளைத் தின்று வளர்வதால் மரம் தாக்கப்படு கிறது.

பொதுவாக, புளி, நோயால் தாக்கப்படுவதில்லை.

பொதுவாக பூச்சிகளாலும், நோய்களாலும், புளிய மரத் திற்கு அதிகச் சேதம் உண்டாவ தில்லை. எனவே, சாதாரண மாக எந்தத் தடுப்பு முறையும் தேவைப்படுவதில்லை.

புளியம்பழம், உலர்த்தின புளி, புளியம் விதை, விதைப் பொடி, ஆகியவைகள் அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், கானடா, மத்திய கிழக்கு நாடுகள் முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதியா கின்றன. இதன் மூலம் நம் நாட்டுக்கு ஆண்டு தோறும் 4.7 இலட்சம் ரூபாய் மதிப் புள்ள அன்னியச் செலாவணி கிடைக்கிறது. எனவே, புளிய் மரம் வளர்ப்பதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்று உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

—திரு. தா. பாலஸ்,
தோட்டக் கலைத் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-3.



# உழவர் பெருமக்களுக்கு உதவும் தேன் துளிகள்

— ஆர்.எம்



ஆராய்ச்சி நிலையங்களில் அதிக மகசூல் தரும் ரகங்கள், சில சமயம் சாதாரண உழவர்களின் வயல்களில் அதிக மகசூல் அளிப்பதில்லை! இதனால் பாதிக்கப்பட்ட உழவர்கள், ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து வெளிவரும் புதிய ரகங்களைப் பயிரிடத் தயங்குகின்றனர். ஆராய்ச்சி நிலையங்களில் புதிய ரகங்கள் அதிக மகசூல் அளிப்பதற்கு, ஆராய்ச்சி நிலையங்களில் அவ்வப்பொழுது மிகுந்த செலவில் தீவிரமாக மேற்கொள்ளப்படும் சாகுபடி முறைகளே காரணம் என்று பல உழவர்கள் எண்ணுகின்றனர்! தங்களிடம் உள்ள குறைந்த பொருளாதார வசதிக்கு ஏற்ப சாதாரண முறையில் சாகுபடி செய்யும்பொழுது, புதிய ரகங்கள் அதிக மகசூல் தராது என்று நம்புகின்றனர். அனுபவத்தின் அடிப்படையில் பார்க்கும் பொழுது, உழவர்களின்கருத்து ஓரளவிற்கு உண்மை என்றே ஒப்புக் கொள்ள வேண்டியுள்ளது. எனவே, ஆராய்ச்சி நிலையங்களில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய ரகங்களை உழவர் பெரு மக்களிடம் புகுத்தும் பணியைத் தலையாயகடமையாகக் கொண்டுள்ள தமிழ் நாடு வேளாண்மைத்துறை, 'ஆராய்ச்சி நிலையங்களில் அதிக மகசூல் அளித்துள்ள ரகங்கள் பல்வேறு மண் நிலைமைக்கும், கால நிலைமைக்கும், ஏற்றதா?' என்பதையும், 'உழவர்கள் செலவு செய்வதற்கு ஏற்பப் பயன் தருமா?' என்பதையும் ஆராய்ந்து அறிவிக்கும் நோக்குடன் உடனடியாகப் பல்வேறு இடங்களில் உழவர்களின் வயலிலேயே அனுசரணை ஆராய்ச்சியாக (Adaptive Research) புதிய ரகங்களைப் பயிரிட்டுப் பார்க்கிறது. அனுசரணை ஆராய்ச்சியில் புதிய ரங்கள் பயன் தருவதாக இருந்தால் மட்டுமே, தமிழ் நாடு வேளாண்மைத்துறை அந்த ரகங்களின் விதைகளை வழங்கி, பயிரிடுமாறு உழவர் பெருமக்களுக்குப் பரிந்துரைக்கிறது.

சுருங்கச் சொல்ல வேண்டுமானால் ஆராய்ச்சி நிலையங்களின் முடிவை, மறு பரிசோதனை செய்ய (Test check), அனுசரணை ஆராய்ச்சி உதவுகிறது. பல்வேறு இடங்களில், உழவர் பெருமக்களின் வயலிலே நடத்தப் பெறும் அனுசரணை ஆராய்ச்சிகளை நேரில் காணும் வாய்ப்பு பெறும் உழவர் பெருமக்கள், தங்கள் பகுதிக்கு ஏற்ற சிறந்த ரகத்தைத் தெரிந்து கொண்டு, அந்த ரகத்தைப் பயிரிட முன் வருகின்றனர். எனவே, 'நம் பகுதிக்கு இந்த ரகம் ஏற்றதாக இருக்குமா?' என்று ஐயுறும் உழவர் பெருமக்களுக்கு அனுசரணை ஆராய்ச்சி, புதிய ரகங்களின் மகசூல் திறனையும், மற்ற சிறப்புக் குணங்களையும் அறிந்திட உதவும் கருவியாக இருப்பதுடன், உழவர் பெருமக்களுக்கு ஏற்படக் கூடிய நட்டத்தைத் தவிர்த்திட உதவும் கருவியாகவும் அமைந்துள்ளது!


அனுசரணை ஆராய்ச்சிகளின் பயனாகவே, தமிழ் நாட்டில் 'கருணை', 'ஐ. ஆர். 20', 'கண்ணகி', 'கரிகாலன்', 'பவானி' போன்ற புதிய ரகங்கள் வெகு விரைவாகப் பெரும் பரப்பில் பரவியுள்ளது! ஆகவே தான், தமிழ் நாடு வேளாண்மைத் துறை 1973—74-ஆம் ஆண்டில் பெரும் அளவில் நெல் ரகங்களில் அனுசரணை ஆராய்ச்சிகளைப் பல்வேறு மாவட்டங்களில், ஆங்காங்குள்ள உள்ளூர் நிலைமைகளில் நடத்தியது.

அனுசரணை ஆராய்ச்சி முடிவுகள், தமிழ் நாட்டு உழவர் பெருமக்களின் 'ஐயம்' என்னும் நோய் தீர்க்கும் தேன்துளிகளாக உள்ளதால், அவைகளைத் 'தமிழரசு' என்னும் தேன்கிண்ணத்தில் திரட்டி, தமிழக உழவர் பெருமக்கள் உண்டு மகிழ்ந்து உணவு உற்பத்தியைப் பெருக்கிட ஈண்டு படைத்துள்ளோம்!

## அனுசரணை ஆராய்ச்சி முடிவுகள் !

### செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களுக்கு :—

1. 'சொர்ணவாரி' பட்டத்தில் 48 இடங்களில், நடத்திய அனுசரணை ஆராய்ச்சிகளில் உயர்ந்த அளவாக ஏக்கருக்கு 'கண்ணகி' ரகம் 2,625 கிலோ மகசூலும், 'கல்சர் 1251' ஏக்கருக்கு 2,656 கிலோ மகசூலும், 'டி.கே.எம். 6' ரகம் ஏக்கருக்கு 1,925 கிலோ மகசூலும் கொடுத்துள்ளன. எனவே 'டி. கே.எம்.6' ரகத்தை விட 'கண்ணகி' ரகமும், 'கல்சர் 1251'-ம் முறையே 26 சதம், 20 சதம் அதிக மகசூல் அளித்துள்ளது என்பது தெளிவாகிறது.



உங்கள்
எதிர்காலத்திற்கு
ஓர்
நற்செய்தி

TNSC
BANK

எப்பொழுதும் இல்லாத
அதிகப்படியான வட்டி
இப்பொழுது கொடுக்கிறது

23-7-1974 லிருந்து தவணை டெபாஸிட்டுகளுக்கு
கொடுக்கப்படும் வட்டி உயர்வு:

| ரூ 100/-ம், அதற்கு மேலும் | வட்டி விகிதம் வருடத்திற்கு |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக | 5.50% |
| 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக | 6.00% |
| 9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக | 7.00% |
| 1 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்கு குறைவாக | 8.00% |
| 3 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்கள் வரை | 9.00% |
| 5 வருடங்களுக்கு மேல் | 10.00% |

தற்பொழுது உள்ள தவணை டெபாஸிட்டுகளுக்கும் 23-7-1974 லிருந்து தவணை தேதிவரை மேற்கண்டவாறு அதிகப்படி வட்டி கொடுக்கப்படும்.

ரூ 1000/-மும் அதற்கு மேலும், ஓராண்டு காலத்திற்கும் அதற்கு மேலும் முதலீடு செய்யப்படும் டெபாஸிட்டுகளுக்கு மாதந்தோறும் வட்டி கொடுக்கப்படும்.

"உங்கள் சேமிப்புக்கு எங்கள் சேவை"

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை-600001

தந்தி அர்பாங்க்   தொலைபேசி: 20367   டெலக்ஸ்: 7225

என்.எல். ஹெப்ளிகர், நிர்வாக இயக்குநர்.   குடவாசல் சி. கிருட்டிணமூர்த்தி துணைத்தலைவர்   ஆர். கனகசபை, தலைவர்.

2. குருத்துப் பூச்சி, இலைச் சுருட்டும் புழு ஆகிய இரண்டையும் தாங்கிக் கொள்ள வல்லது 'கல்சர் 1251'. ஆனால் கண்ணகி ரகம் இலைச்சுருட்டும் புழுவினால் பாதிக்கப்பட்டாலும், ஓரளவிற்கு குருத்துப் பூச்சியின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ள வல்லது.

3. சொர்ணவாரி பட்டத்தில், 15 இடங்களில் நடத்தப் பெற்ற அனுசரணை ஆராய்ச்சியிலிருந்து 'கோ.-29' ரகத்தை விட, 'ரத்னா', 'காஞ்சி' ஆகிய ரகங்கள் அதிக மகசூல் அளிக்கவல்லவை என்பது புலனாகி உள்ளது. 'கோ. 29' ரகத்தை விட 'ரத்னா' ரகமும், 'காஞ்சி' ரகமும் முறையே 37 சதம், 40 சதம் அதிக மகசூல் அளித்துள்ளன.

4. சம்பா பட்டத்தில் முதலில் மானாவாரியாக விதைத்து, பிறகு தண்ணீர் கிடைத்ததும் இறைவையாகச் சாகுபடி செய்யப்படும் நிலைமைக்கு (Semi-dry condition) 'ஐ.ஆர். 8', 'ஐ.ஆர். 20', 'பவானி' ஆகிய ரகங்கள் ஏற்றவை. இம்மூன்று ரகங்களும், தற்பொழுது வழக்கத்தில் உள்ள 'பையகுண்டா' (B.A.M-3) என்ற ரகத்தைவிட, 3 வார வயது குறைந்தவையாக இருப்பதுடன், 'பையகுண்டா' ரகத்தைப் போலவே மகசூல் தருகின்றன. 'பவானி' வறட்சியைத் தாங்கிக் கொள்வதாகவும், இலைப் புள்ளி (Helminthosporium), குருத்துப் பூச்சி, இலைச் சுருட்டுப் புழு ஆகியவைகளால் அதிகம் பாதிக்கப்பட்டதாகவும் உள்ளது.


5. சம்பா பட்டத்தில் 'பவானி' ரகம்—'ஐ.ஆர். 20' ரகம் போலவே—நல்ல மகசூல் அளிக்கிறது. பல்வேறு இடங்களிலும் பயிரிடுவதற்கு ஏற்றதாக உள்ளது.

6. ஏக்கருக்கு 30 கிலோ தழைச் சத்துக்கு மேல் அதிகமாக தழைச் சத்து இட்டால், 'பவானி' ரகம் தலை சாய்ந்து கீழே விழும்!

7. கெட்டியான களிமண் பகுதிக்கும், தண்ணீரை வடிய விடாத மண் பகுதிக்கும் ஏக்கருக்கு 30 கிலோ தழைச்சத்து என்ற அளவில் உரமிட்டு பயிரிட 'பொன்னி' ஏற்றது.

**தென்னார்க்காடு மாவட்டத்திற்கு :—**

8. குறுவைப் பட்டத்தில் 'கண்ணகி', 'கல்ச்சர் 1251', 'திருவேணி' ஆகிய குறுகிய கால வயதுடைய (100 முதல் 112 நாட்கள்) ரகங்கள், 'ஐ.ஆர். 20' (127 நாட்கள்) ரகத்திற்கு ஒப்பாகச் சராசரியாக ஏக்கருக்கு 2.5 டன் மகசூல் வீதம் அளிக்கின்றன. இந்த ரகங்களில், 'கண்ணகி' ரகமே அதிக மகசூல் (ஏக்கருக்கு 2,553 கிலோ) அளிக்கிறது. 'காவேரி' ரகம் குறுவைப் பட்டத்தில் குறைந்த மகசூலையே தருகிறது.



**தஞ்சாவூர் மாவட்டத்திற்கு :—**

9. முன் குறுவைப் பட்டத்தில் பயிரிட 'ஜெயா', 'ஐ.இ.டீ. 1136' ஆகியவை (130 நாட்கள் வயதுடையவை) சிறந்த ரகங்களாகும். 'ஜெயா' ரகம் சராசரியாக ஏக்கருக்கு 2,674 கிலோ மகசூலும், ஐ.இ.டீ. 1136 சராசரியாக ஏக்கருக்கு 2,667 கிலோ மகசூலும் கொடுத்துள்ளன. 'ஜெயா' அதிக அளவு வைக்கோலும் (ஏக்கருக்கு 3,838 கிலோ) தருகிறது.

10. குறுவைப் பட்டத்தில் 'கல்ச்சர் 8946' (106 நாட்கள் வயது), 'கரிகாலன்' (114 நாட்கள் வயது) ரகத்தை விட 12 சதம் அதிக மகசூல் அளிக்கிறது. இது, உயர்ந்த அளவாக ஏக்கருக்கு 3,590 கிலோ வரை மகசூல் கொடுத்துள்ளது.

11. உவர், களர் நிலங்களில், சம்பா பட்டத்தில் பயிரிட 'மணிலா' (Manila), ஐ.ஆர். 20' ஆகிய ரகங்கள் சிறந்தவை. இவை, 'பி.வி.ஆர்.1 ' ரகத்தை விட ஒரு வார வயது குறைந்தவையாகும். 'பி.வி.ஆர். 1' ரகம் சராசரியாக ஏக்கருக்கு 1,412 கிலோ மகசூல் மட்டுமே கொடுத்திருக்க, 'மணிலா' ரகம் 1,480 கிலோ மகசூலும், 'ஐ.ஆர். 20' ரகம் 1,472 கிலோ மகசூலும் கொடுத்துள்ளன.

12. சம்பா பட்டத்தில் 'சிஆர். 10-5071' என்ற ரகம் 'ஐ.ஆர். 20' ரகத்தை விட, சற்று அதிகமான அளவு தானிய மகசூலையும், வைக்கோல் மகசூலையும் கொடுக்கிறது.

13. தாளடி பட்டத்திற்கு (செப்டம்பர்-அக்டோபர்) 'ஐ. ஆர். 20', 'பொன்னி' ஆகிய 2 ரகங்களும் சிறந்தவையாகும். 'ஐ.ஆர். 20' ரகம், சராசரியாக ஏக்கருக்கு 1,708 கிலோ மகசூலையும், 'பொன்னி' ரகம் 1,635 கிலோ மகசூலையும் கொடுத்துள்ளது. ஏக்கருக்கு உயர்ந்த அளவாக 'ஐ.ஆர். 20' ரகம் 2,400 கிலோ மகசூல் மட்டுமே கொடுத்திருக்கும் பொழுது, 'பொன்னி' ரகம் 3,270 கிலோ மகசூல் கொடுத்துள்ளது. ஆகவே தாளடிப் பட்டத்திற்கு 'ஐ.ஆர். 20', 'பொன்னி' ஆகிய 2 ரகங்களும் சிறந்தவையாகும.


**திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு :—**

14. கலச்சர் 8946, குறுவைப் பட்டத்தில் 'கண்ணகி' ரகத்தை விட 10 சத அதிக மகசூல் கொடுக்கிறது. கண்ணகி சராசரியாக ஏக்கருக்கு 2,195 கிலோ மகசூல் கொடுத்திருக்க, 'கல்ச்சர் 8946' சராசரியாக ஏக்கருக்கு 2,413 கிலோ மகசூல் கொடுத்துள்ளது. 'கல்ச்சர் 8946' சிறந்த தரமான நெல்மணிகளைக் கொடுப்பதால், உழவர்கள் இக்கல்ச்சரை விரும்புகின்றனர். ஜூலை மாதக் குறுவை நடவு சிறந்த மகசூலைத் தரும்!

15. முன்னதாகவே மழை பெய்யும் பகுதிகளில் மானாவாரியாகப் பயிரிட 'ஐ.ஆர்.8; கோ.31' ஆகிய ரகங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன.

16. காலங்கடந்து மழை பெய்யும் பகுதிகளில் மானாவாரியாகப் பயிரிட 'அன்னபூர்ணா' ரகம் (116 நாட்கள் வயது) சிறந்தது.

17. 'பி.வி.ஆர். 1', 'ஐ.ஆர். 20', 'பவானி' ஆகிய ரகங்கள் உவர்நிலங்களில் சராசரியாக ஏக்கருக்கு முறையே 1,619 கிலோ, 1,429 கிலோ, 1,412 கிலோ வீதம் மகசூல் கொடுத்துள்ளன. 'மணிலா' ரகம் சராசரியாக ஏக்கருக்கு 1,113 கிலோ மகசூல் மட்டுமே கொடுத்துள்ளதால், 'மணிலா' ரகம் திருச்சி மாவட்டத்திற்கு ஏற்றதல்ல !



18. சம்பா பட்டத்தில் 'சோனா' (ஐ.இ.டி. 1991), கோ. 36 (கல்ச்சர் 14466) ஆகிய ரகங்களைவிட, 'பொன்னி' ரகமே அதிக தானிய மகசூலும், வைக்கோலும் தருவதாக உள்ளது ! பொன்னி ரக அரிசி சன்னமாக உள்ளதால், பொன்னி நெல்லிற்கு அதிக விலை கிடைக்கிறது!

19. 'பொன்னி', 'சோனா', 'கோ.36' ஆகிய ரகங்களை ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் தனித்தனியாக விதைத்துச் சோதனை நடத்திப் பார்த்ததில், நவம்பர் மாதத்தில் விதைத்த (பின்சம்பா) பொன்னியே ஏக்கருக்கு 2,840 கிலோ வீதம் உயர்ந்த அளவு மகசூல் கொடுத்துள்ளது. ஆகவே, திருச்சி மாவட்டத்தில் பின்சம்பா பட்டத்தில் 'பொன்னி' பயிரிடுவதே சிறந்தது.

20. நவரைப் பட்டத்தில் வழக்கமாகப் பயிரிடப்படும் 'கோ. 29' ரகத்தைவிட, 'ரத்னா' 'காஞ்சி' ஆகிய ரகங்கள் முறையே 21 சதம், 15 சதம் அதிக மகசூல் தருகின்றன. 'கோ. 29' உயர்ந்த அளவாக ஏக்கருக்கு 2,680 கிலோ மகசூல் கொடுத்திருக்க, 'ரத்னா' 3,100 கிலோ மகசூலும், 'காஞ்சி' 3,000 கிலோ மகசூலும் கொடுத்திருப்பதால், திருச்சி மாவட்டத்தில் நவரைப் பட்டத்தில் பயிரிட, 'ரத்னா' 'காஞ்சி' ஆகிய சன்ன அரிசி தரும் ரகங்கள் மிகவும் சிறந்தவை என்பது தெளிவாகியுள்ளது.

**மதுரை மாவட்டத்திற்கு :—**

21. குறுவைப் பட்டத்திற்கு 'கரிகாலன்' ரகமே மிகவும் சிறந்தது. இது, 'கருணா', 'கண்ணகி' ஆகிய இரு ரகங்களைக் காட்டிலும் முறையே 12 சதம், 5 சதம் அதிக மகசூல் தருகிறது.

22. 'கருணா', 'கரிகாலன்', 'கண்ணகி' ஆகிய குறுவை ரகங்களைச் செப்டம்பர் மாதத்தில் விதைத்தால், மகசூல் குறைந்து விடும்!

23. ஜூலை மாதத்தில் விதைத்த 'சோனா' ரகம், ஐ.ஆர். 20 ரகத்தைவிட 9 சதமும், 'பவானி' ரகத்தைவிட 18 சதமும் அதிக மகசூல் அளித்துள்ளது.

24. 'சோனா' ரக அரிசி சன்னமானது. ஆனால் 'சோனா' ரக நெல்மணிகள் கதிரிலிருந்து எளிதில் பிரியாமல் இருப்பதால், நெல்லடிப்பது பிரச்சினையாக உள்ளது. மேலும் நெல் அறைக்கும் பொழுது, அரிசி உடைகின்றன. பவானி ரகம், ஏக்கருக்கு 50 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து அளவில் இடும் பொழுது சாய்ந்து விழுந்து விடுகிறது.

25. ஜூலை-ஆகஸ்ட் மாதத்தில் நடப்படும் 'ஐ.ஆர். 8', 'ஐ.ஆர். 20', 'கோ. 36' ஆகிய மூன்று ரகங்களும் ஏறத்தாழ ஏக்கருக்கு 2.8 டன் அளவில் மகசூல் தருகின்றன.

26. செப்டம்பர் மாதத்தில் நடுவதற்கு 'ஐ.ஆர். 20', 'சோனா 'பவானி' ஆகிய ரகங்கள் ஏற்றவை. இம்மூன்று ரகங்களும் சராசரியாக ஏக்கருக்கு 2 டன் அளவில் மகசூல் தருகின்றன.

**இராமநாதபுரம் மாவட்டத்திற்கு:-**

27. அக்டோபர் - நவம்பர் மாதத்தில் விதைப்பதற்கு 'ஐ. ஆர். 20' ரகத்தைவிட, 'ஜெயந்தி' ரகம் மிகவும் சிறந்தது. உயர்ந்த அளவாக ஏக்கருக்கு 'ஐ.ஆர். 20' ரகம் 2,850 மகசூல் மட்டுமே அளித்திருக்க, 'ஜெயந்தி' (I.E.T. 1039) ரகம் 3,150 கிலோ மகசூல் கொடுத்துள்ளது.

**திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு:—**

28. 'கார்' பருவத்தில் 'பெண்ணை', 'கண்ணகி' ஆகிய ரகங்களைவிட, 'கரிகாலன்' ரகம் முறையே 15 சதம், 9 சதம் அதிககம் மகசூல் அளித்துள்ளது. 'கரிகாலன்' ரகம் சராசரியாக ஏக்கருக்கு 2,253 கிலோ மகசூல் கொடுத்திருக்க, கண்ணகி 2,131 கிலோ மகசூலும், பெண்ணை 1,959 கிலோ மகசூலும் மட்டும் கொடுத்துள்ளன.

29. முன் கார் பருவத்தில் நடவு செய்வதற்கு தண்ணீர் கிடைக்கக்கூடிய ஏரிப்பாசனப் பகுதிகளில் 'கரிகாலன்' ரகம் பயிரிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. பின்கார் பருவத்தில் நடவு செய்யப்படும் தென்காசி, மற்றும் இதர பகுதிகளில் பயிரிடுவதற்குக் 'கண்ணகி' ரகம் பரிந்துரைக்கப்படுகிறது.

30. 'பிசானம்' பருவத்தில் பயிரிடுவதற்கு 'பவானி', 'ஐ. ஆர். 20' ஆகிய 2 ரகங்களும் பரிந்துரைக்கப்படுகின்றன. 'ஐ. ஆர். 20' ரகம் சராசரியாக ஏக்கருக்கு 2,028 கிலோ மகசூலும், 'பவானி' ரகம் 2,186 கிலோ மகசூலும் கொடுத்துள்ளன. 'ஐ.ஆர் 20' ரகம் உயர்ந்த அளவாக ஏக்கருக்கு 2,960 கிலோ மகசூல் கொடுத்து இருக்க, 'பவானி' ரகம் 3,250 கிலோ மகசூல் கொடுத்துள்ளது.

31. 'பிசானம்' பருவத்தில் 'ஐ.ஆர். 20' ரகத்தைவிட, 'பவானி' ரகம் 8 சதம் அதிக தானிய மகசூலும், 23 சதம் அதிக வைக்கோல் மகசூலும் கொடுத்துள்ளது.

**கோவை மண்டலத்திற்கு (கோவை, சேலம், தருமபுரி மாவட்டங்கள்):-**

32. 'மே-ஆகஸ்ட்' மாதத்தில் (Early khariff) 'வைகை' ரகம் (I.E.T. 849) காஞ்சி' ரகத்தை விட-20 சதம் அதிக தானிய மகசூலும், 15 சதம் அதிக வைக்கோல் மகசூலும் அளித்துள்ளது. எனவே, வைகை ரகத்தைப் பொள்ளாச்சி, கோபி, சேலம் வட்டங்களில் 'மே-ஆகஸ்ட்' பட்டத்தில் பயிரிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

33. 'காஞ்சி' ரகத்தைவிட, 'வைகை' ரகம் 'பாக்டீரியல் இலைக் கருகல்' நோயைத் தாங்கிக் கொள்ளவல்லது.

34. சேலம் மாவட்டத்தில் 'திருவேணி' ரகம், 110 நாட்களில் சராசரியாக ஏக்கருக்கு 2,055 கிலோ மகசூலும், உயர்ந்த அளவாக ஏக்கருக்கு 3,200 கிலோ மகசூலும் கொடுத்துள்ளது. ஆனால் இந்த ரக மணிகள் பெரியதாக (மோட்டா ரகம்) உள்ளதால், உழவர் பெருமக்கள் திருவேணி ரகத்தை விரும்பவில்லை.

35. ஈரோடு, கோபி, பொள்ளாச்சி, கிருஷ்ணகிரி வட்டங்களில் ஜூலை-அக்டோபர் பருவத்தில் 'வைகை' ரகம் நல்ல மகசூல் தருகிறது. 'கண்ணகி' ரகம் இப்பகுதிகளில் நல்ல மகசூல் அளித்தாலும், இந்த ரகம் குட்டையாக இருப்பதால், வைக்கோல் குறைவாகக் காணும் என்று கருதி, உழவர் பெருமக்கள் இந்த ரகத்தைப் பயிரிட விரும்பவில்லை. 'கண்ணகி' ரகத்தைவிட, 'வைகை' ரகம் 14 சதம் அதிக வைக்கோல் தருவதால், 'வைகை' ரகத்தையே உழவர் பெருமக்கள் பெரிதும் விரும்புகின்றனர்.

36. கிருஷ்ணகிரி வட்டத்தில் மண் உவராக இருப்பதால் 'காஞ்சி' ரகம் ஜூலை-அக்டோபர் பருவத்தில் நல்ல பயன் தரவில்லை.

37. சம்பா பட்டத்தில் 'பவானி' 'பொன்னி', 'ஐ.இ.டி. 1039' ஆகிய ரகங்கள் நல்ல மகசூல் தருகின்றன. இந்த ரகங்கள், 'ஐ. ஆர். 20', 'கோ. 36' ஆகிய இரகங்களை விட 7 சதம் அதிக தானியம் மகசூலும், 15 சதம் அதிக வைக்கோல் மகசூலும் தருகின்றன.

38. குறைந்த அளவு உரமிட்டு அதிக மகசூல் பெற 'பவானி' ரகத்தைப் பயிரிடுவதே சிறந்தது! 'பவானி' ரகத்திற்கு ஏக்கருக்கு 30 கிலோ தழைச்சத்து, 15 கிலோ மணிச்சத்து, 15 கிலோ சாம்பல் சத்து வீதம் இட்டாலே போதுமானது!

39. பின்சம்பாப் பட்டத்திற்கு 'பொன்னி' மிகவும் சிறந்தது!

**நீலகிரி மாவட்டத்திற்கு:—**

40. நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் ஜூன்-ஜூலை முதல் அக்டோபர்-நவம்பர் வரையான பருவத்தில் 'கே. 84' என்ற ரகத்தைப் பயிரிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. இது 148 நாட்களில் குளிரைத் தாங்கிக்கொண்டு வளர்ந்து, நன்கு மகசூல் தரக் கூடியது! இப்பகுதியில் தற்பொழுது பயிரிடப்பட்டு வரும் 'பால் தோண்டி' என்ற நெல் ரகம், சராசரியாக ஏக்கருக்கு 495 கிலோ மகசூல் மட்டுமே தருகிறது. ஆனால் 'கே. 84' என்ற புதிய ரகம் சராசரியாக ஏக்கருக்கு 1,945 கிலோ மகசூல் தருகிறது. ஆகவே, நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் 'கே. 84' ரக நெல்லைப் பயிரிட்டு, நெல்மகசூலை மேலும் 3 மடங்கு அதிகமாகப் பெருக்கிடலாம்!




மேற்கண்ட 40 தேன் துளிகளும், தமிழக உழவர் பெருமக்களின் வாழ்வை வளப்படுத்திடுமாதலின், அத்துளிகளை உண்டு மகிழ்வதுடன் (படித்து அறிவதுடன்) மட்டுமல்லாமல், அம்மகிழ்ச்சி தரும் புத்துணர்வுடன் உங்களுக்கு ஏற்ற ரகங்களைத் தேர்ந்தெடுத்துப் பயிரிட்டு, உணவு உற்பத்தியைப் பெருக்கிடுமாறு அன்புடனும், கடமையுடனும் வேண்டுகின்றோம்.

# போதுமான அளவு உரம் கிடைக்கவில்லையே என்ற கவலை வேண்டாம்.

# கிடைக்கின்ற அளவு உரத்தைக்கொண்டே நல்ல மகசூல் பெறலாம்.

# இதோ அதற்கான 11 வழிமுறைகள்:

## 1. உரமிடுவதில், பாசன நிலங்களுக்கு முதலிடம் அளியுங்கள்

மானாவாரியைவிட பாசன நிலங்களில் உரங்கள் அதிக பலனைத் தருகின்றன. அதிலும் எங்கு பாசன நீர் உபயோகத்தைத் தகுந்த முறையில் கட்டுப்படுத்த முடியுமோ அங்கு உரங்கள் மேலும் அதிக பலனைத் தருகின்றன. (உதாரணமாக, கால்வாய்ப் பாசனத்தைவிட கிணற்றுநீர்ப் பாசனத்தை நன்கு கட்டுப்படுத்தலாம். ஆதலால், கிணற்றுநீர்ப் பாசன நிலங்கள் அதிக மகசூலை கொடுக்கும்.) உப்பு அல்லது களர் இல்லாத மற்ற நிலங்களுக்கே உரமளியுங்கள்.

## 2. முக்கியமாக உயர் விளைச்சல் ரகங்களுக்கு உரமிடுங்கள்

ஏனென்றால் உரமிடுதலுக்கு உயர் விளைச்சல் ரகங்கள், சாதாரண ரகங்களைவிட அதிக மகசூலைக் கொடுக்கின்றன. இதனால், உங்கள் முதலீட்டிற்கு மொத்தத்தில் அதிக லாபம் கிடைக்கும்.

## 3. கூடியமட்டில் அதிக நிலப்பரப்பில் உபயோகியுங்கள்

சிபாரிசின்படி உரமிடுவதற்கு போதிய உரம் கிடைக்காத நிலையில், உரமிடும் விகிதத்தைக் குறைத்து, முடிந்தமட்டும் அதிக நிலத்திற்கு உரமிட்டால் மொத்தத்தில் அதிக பலனைப் பெறலாம். (உதாரணம்: உங்களுக்கு 5 ஏக்கர் பாசன நிலம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். இதற்கு சிபாரிசுப்படி 1000 கிலோ உரம் தேவைப்படுகிறது. ஆனால் 500 கிலோ மட்டுமே உங்களுக்குக் கிடைக்கிறது. இந்நிலையில், இந்த 500 கிலோவை சிபாரிசுப்படி 2½ ஏக்கருக்கு மட்டும் அளிப்பதைவிட உங்கள் 5 ஏக்கருக்குமே உபயோகித்தால் மொத்தத்தில் அதிக மகசூல் கிடைக்கும்.) இவ்வாறு கிடைக்கின்ற அளவை அதிக பரப்பில் உரமிடும்போது உரமிடும் அளவு, சிபாரிசு அளவில் மூன்றில் ஒரு பங்குக்கும் குறைவாக இருத்தலாகாது.

## 4. முக்கிய பயிர்களுக்கு முதலிடம் கொடுங்கள்

முதலாவதாக உணவு தானியங்கள், இரண்டாவதாக எண்ணெய் வித்துக்கள், மூன்றாவதாக பருத்தி, நான்காவதாக கரும்பு என்ற முறைப்படி உர அளவை ஒதுக்குங்கள்.

## 5. சமச்சீர் உரமிடுதல் மூலம் அதிக பலன் பெறுங்கள்

பயிருக்குத் தேவையான ஊட்டச்

சத்துக்களை, மண்ணிலிருந்தும் மற்றும் ரசாயன உரங்களிலிருந்தும் சேர்ந்து தேவையான அளவுகளில் கிடைக்கச் செய்தலே சமச்சீர் உரமிடுதல் என்பதாகும். இதற்கு முதலில் உங்கள் நிலத்தின் மண்ணை பரிசோதனை செய்து கொள்ளுங்கள். பின்பு சோதனை முடிவுகளைப் பொறுத்து தழை, மணி, சாம்பல் சத்துக்களை சரியான அளவில் பயிருக்கிடுங்கள். இதனால், உரமும் உங்கள் பணமும் மீதமாகும்; அதிக மகசூலும் கிடைக்கும்.

மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் நிறுவனம் அளிக்கும் 'துரித' மண் பரிசோதனைச் சேவையை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

## 6. காலத்தில் முறைப்படி உரமிடுங்கள். நீரைத் திறம்பட பாய்ச்சுங்கள்

மணிச்சத்தையும் சாம்பல் சத்தையும் அடியுரமாக உபயோகியுங்கள். தழைச் சத்தில் ஒரு பங்கை அடியுரமாகவும் மற்றொரு பங்கை மேலுரமாகவும் இடுங்கள். என்.பி.கே. காம்ப்ளெக்ஸ் உரங்களை அடியுரமாகவோ அல்லது பயிர் நட்ட ஒரு மாதத்திலோ இடவேண்டும்.

மேலுரமாக இடும் யூரியாவை பயிரின் வகை, வயது மற்றும் மண்ணின் ஈரம் — இவற்றைப் பொறுத்து முடிந்தவரை பல தடவைகளில் பிரித்தளியுங்கள்.

பாசன நீரை வடித்த பின்பே யூரியாவை மேலுரமாக இட்டு மண்ணுடன் கலக்க வேண்டும். உரமிட்ட 2 அல்லது 3 நாட்களுக்குப் பின்பு நீர் பாய்ச்சுங்கள்.

## 7. களைகளை வேரோடு நீக்குங்கள்

பயிருக்கு அளிக்கப்படும் உரத்தில் கணிசமான பங்கை, களைகளே எடுத்துக் கொள்கின்றன. அதனால் எப்போதும், முக்கியமாக பயிர் வளர்ச்சியின் முதல் 40 நாட்களின் போது, நிலத்தில் களைகளே இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

## 8. பூச்சி, பூஞ்சாள நோய்களை அண்டவிடாதீர்கள்

உங்கள் பகுதியில் வழக்கமாக பயிர்களைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்களை எதிர்த்து முன் கூட்டியே பயிர் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளுங்கள். மற்ற பூச்சி, பூஞ்சாள நோய்கள் பயிர்களில் கண்டவுடனே தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளுங்கள். இதனால் அளிக்கும் உரத்திலிருந்து அதிக பயன் பெறுவீர்கள்.

## 9. பருப்பு வகைகளை சாகுபடி செய்யுங்கள்; உரத் தேவையைக் குறையுங்கள்

உங்கள் பயிர் சுழற்சியில் நிலக்கடலை, பட்டாணி, உளுந்து, பாசிப்பயறு அல்லது பசுந்தழை இவற்றில் ஏதாவதொன்றை பயிரிடுங்கள். இப்பயிர்கள் அடுத்து வரும் பயிருக்கு கணிசமான அளவு தழைச்சத்தை கிடைக்கச் செய்கின்றன.

மேலும், 'பாக்டீரியல் கல்சர்' கிடைத்தால், பருப்பு வகை விதைகளை அதனுடன் கலந்து பின்பு விதையுங்கள். இதனால் அப்பயிர் நன்கு வளர்ந்து அதிக மகசூல் தரும்.

## 10. பருவத்தைப் பொறுத்து உரத்தை ஒதுக்குங்கள்

கோடை சாகுபடிப் பயிருக்கு, மழைக்காலப் பயிருக்கு அளிப்பதைவிட, அதிக அளவு உரத்தை அளியுங்கள். உதாரணமாக, கோடை நெற்பயிருக்கு, மழைக்கால நெல்லுக்கு அளிப்பதைவிட, அதிக அளவு உரமிடுங்கள்.

## 11. ரசாயன உரத்தைத் தவிர இயற்கை எருவையும் உபயோகியுங்கள்.

உங்கள் பண்ணையில் கிடைக்கும் வைக்கோல், கழிவுப் பொருட்கள், இலைகள், சருகுகள், சாணம் இவற்றை வீணாக்காமல் சேகரித்து 'கம்போஸ்ட்' தயாரியுங்கள்.

முடிந்தால், மாட்டு சாணத்திலிருந்து எரிவாயு தயாரிக்கும் சாதனம் ஒன்றை உங்கள் வீட்டில் நிறுவுங்கள். அது, சமையல் மற்றும் வீட்டு விளக்குகளுக்கு வேண்டிய எரிபொருளையும், பயிர்களுக்கு வேண்டிய எருவையும் கொடுக்கும்.

**மேலும் விவரங்களுக்கு, இன்றே உங்கள் அருகாமையிலுள்ள மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் நிறுவனத்தாரின் பீல்டு ஆபீசரை சந்தியுங்கள்; அல்லது, வேளாண்மைத்துறை அலுவலர்களை அணுகுங்கள்.**

*விவசாயிகள் நலனை முன்னிட்டு வெளியிட்டோர்:*

**விஜய் 17-17-17,**
**விஜய் 14-28-14,**
**விஜய் யூரியா உரங்கள்**
**தயாரிப்பாளர்களான**

**மதராஸ்**
**பெர்ட்டிலைசர்ஸ்**
**லிமிடெட்**
மணலி, சென்னை 600 068

**உழவர் துணைவன்**




**பொங்கும் செல்வம்**
**விஜய்**

# சேமிப்பு

## சிறந்த பழக்கம்! திறம் மிகுந்த கலை!

# சேமித்து வைப்பதால் வாழ்க்கையில் வெற்றி கிடைப்பது உறுதி!

*சிறுசேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.*

| மாதம் செலுத்தும் தொகை | | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | 360 | — |
| | ரூ. 10 | 720 | — |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | — | 785 |
| | ரூ. 10 | — | 1,570 |

தற்போது 1—7—72-க்குப் பிறகு துவக்கப்பட்ட ரெக்கரிங் டிபாசிட் திட்டத்திற்கு சிறு சேமிப்பு நிறுவனம் புதிய சலுகை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கணக்கு துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச் சலுகை கிட்டும். சிறுசேமிப்பாளர்களின் நலத்திற்காக இந்த பாதுகாப்புடைய சேமிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

*இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.*


**இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறுசேமிப்புத் துறை, தமிழ்நாடு அரசு.**




Criterion CO 2883

பதிவு எண். M. 8676




ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.